ஜெர்மனியிலும் வன்னியன் தொலைபேசி அட்டைகள்




தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 26 Février - 02 Mars 2004 02

சிறப்புத் தள்ளுபடி




~~25€~~ 10 €

Boopalam
22, Rue Perdonnet, 75010 Paris.
Pub.




## தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் முயற்சிக்கு விலைபோன ஆனந்தசங்கர்!

## ஒரு குடம் பாலும் துளித்துளியாய் நஞ்சும்

புலம்பெயர் தமிழ் மக்கள் தொடர்பாக காழ்ப்புணர்ச்சியுடன் எழுதிய கட்டுரையின் எதிர்வினைக் கட்டுரை

## உந்துருளி படையணி உதயம்

## பலதும் பத்தும்

## தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளருடன் நேர்காணல்

## எதிரணி அதிகாரத்துக்கு வந்தால் புலிகளுடனான போர் நிறுத்தத்துக்கு ஆபத்து

## கூட்டமைப்பின் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து வன்னி சந்திப்பில் முடிவுகள்

**Orient Textilien & Schmuck**

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.



உரிமையாளர்: ச.ஜெகதீஸ்
Pub

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

(03ம் பக்கத் தொடர்ச்சி)

**சிங்கள தேசத்தில் பாரிய....**

றவை திரும்பத்திரும்ப தேர்தல் வரலாம். இலங்கையில் இன்று சிங்கள கிறிஸ்தவர்களுக்கே சிங்கள தேசத்தில் பாதுகாப்பு கேள்விக்குறியாக அமைந்துள்ளது. இதேவேளை அங்கு சிங்கள சுதந்திரக் கட்சியினர் முஸ்லீம் மக்களை அணைத்துக் கொண்டுள்ளனர் என்றால் இந்த தமிழ் மக்களை நசுக்குவதற்கு முஸ்லீம் மக்களை பகடைக்காய்களாக சிங்கள சுதந்திரக்கட்சி அரசு பாவித்து வருன்றது. இதை யாவரும் அறிந்து கொள்ளவேண்டும். முஸ்லீம் மக்களுக்கு ஒன்றை கூறிவைக்க விரும்புகின்றோம். அவர்களுக்கு ஒரு ஆபத்து ஏற்படின் தடுப்பதற்கு புலிகள்தான், வேறு எவரும் இல்லை. இந்த அரசியலைக் கையாளும் ஆற்றல் எமது தேசியத் தலைவரிடம் இருக்கின்றது. சமகால அரசியல் சூழலில் நிதானமான முடிவுகளை வெளிப்படுத்தி அற்புதமான நுட்பமான மனிதராகச் செயற்பட்டு வருகின்றார்.

இன்று சிறீலங்காவின் தேர்தல் களத்தில் அரசியல் வாதிகளுக்குப்பின்னால் இனவாதிகளும் இணைந்திருக்கின்றார்கள். இதில் ஒரு பகுதியாகவே பௌத்த பிக்குகளும் தேர்தலில் போட்டிய முன்வந்திருக்கிறார்கள். ஆகவே சிறீலங்காவின் இன்றைய தேர்தலில் ஒரு குழப்பநிலை தோன்றியுள்ளது. கடந்த காலங்களில் பல்வேறு இனக்கலவரங்களால் அழித்த இந்த இனவாதிகள் தேர்தலில் வெல்வதற்காக தீவிர பரப்புரை செய்துவரும் இந்த சூழலை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

புரிந்துணர்வுக் காலங்களில் நெடுந்தீவு, மானிப்பாய் போன்ற இடங்களில் ஏற்பட்ட படையினரின் மீறல்களையும் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை. தேர்தல் களநிலை எவ்வாறு அமைந்திருந்தாலும் தமிழ் மக்களுக்கு எவ்வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது, என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

(03ம் பக்கத் தொடர்ச்சி)

**சொல்ஹெயிம் - பாலா....**

தவிகள் வழங்கப்படும் என வாஷிங்ரன் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்படும் எனவும் தெரிகிறது.

இதேவேளை, சிறீலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இதேதினம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளார். இச்சந்திப்புக்களில் இம்மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் முடிவுகள் குறித்து இருதரப்பினரும் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்

## கூட்டமைப்பு வேட்புமனு தாக்கல்

(23.02.04)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறீலங்கா நாடாளுமன்றத் தேர்தலுக்காக இன்று தனது வேட்பு மனுக்களை சமர்ப்பித்துள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் தேர்தல் அத்தாட்சி அதிகாரியிடம் வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராசா, வவுனியாவில் செல்வம் அடைக்கலநாதன், திருகோணமலையில் இரா சம்பந்தன்,

மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம், அம்பாறையில் சந்திரநேரு ஆகியோர் வேட்புமனுக்களை இன்று தாக்கல் செய்தனர். யாழ்ப்பாணத்தில் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்னர் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தியதுடன் யாழ் நூலகப் பகுதிக்கு சென்று செல்வா நினைவுத் தூபியிலும் அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் வேட்பாளர்கள் அனைவரும் இந்த நிகழ்வுகளில் பங்கு கொண்டிருந்தனர். ரெலோ முதல்வர் ந.சிறீகாந்தா மட்டும் வெலிக்கடை சிறையிலுள்ள ஒன்பது தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக அவர்கள் சார்பில் வெலிக்கடை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக ஆஜராகவேண்டியிருப்பதால், இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே யாழ்.மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் நேற்றிரவு வேட்பாளர் நியமனப் பத்திரங்களில் ஒப்பமிட்டனர்.நேற்றிரவு 8 மணியளவில், யாழ்ப்பாணம் - மார்ட்டின் வீதியிலுள்ள மாவை சேனாதிராசாவின் இல்லத்தில் - நியமனப் பத்திரங்களில் கையொப்பமிடும் நிகழ்வு இடம்பெற்றது.

## தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அவுஸ்திரேலிய சிறப்பு ஊடகவியலாளர் ஒருவருக்கு ஜனாதிபதி அழைப்பு

(23.02.04)

சிறீலங்கா ஜனாதிபதியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அவுஸ்திரேலிய சிறப்பு ஊடகவியலாளர் ஒருவர் ஜனாதிபதியால் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரங்களை சூடுபிடிக்க வைக்கும் ஒரு கைங்கரியமாகவே இவருக்கான அழைப்பு அமைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

சிறீலங்கா ஜனாதிபதியினால் ஏற்கெனவே ஊடக தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட இவர், ஊடக வெளியீடுகளிலும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் சாதனைகளை வெளிப்படுத்துகின்ற சிறப்பு வீடியோ நறுக்குகளையும் மற்றும் தகவல் விவரணங்களையும் தயாரித்து வருகின்றமை குறிப்பிடத்தது.

மார்க் ஹ்ல்சொப் என அறியப்படும் இவர் மக்கள் முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகமவுடன் இணைந்து வரும் தேர்தலில் ஜனாதிபதியின் பிரச்சாரங்களை முன்னெடுக்கவுள்ளார்.

(03ம் பக்கத் தொடர்ச்சி)

**பௌத்த, சிங்கள இன....**

ளும் நேரடியாகப் நாடாளுமன்றம் போவதென்ற முடிவின்படியே, தாங்களும் தேர்தலில் குதித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். நாட்டின் நாடாளுமன்றத்திற்குள் பௌத்த சிங்கள விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் நிலைநாட்டுவதற்குமான அடித்தளங்களை இடுவதே இக்கட்சியின் நோக்கம் என்று தெரிவித்தார்.

### ஐ.தே.கவுடன் இணைந்தே இ.தோ.க.போட்டி

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. கண்டி மாவட்டத்தில் தமது வேட்பாளர் இருவரை தேர்தலில் நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணங்கியதையடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உப தலைவர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார். ஐந்து மாவட்டங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுமென்றும் அவர் கூறினார்.


**பிரான்சில்**

ஓம் நமோ நாராயணா

**ஸ்ரீ அகத்திய சிவநாடி ஜோதிடம் (காண்டம்)**

குடும்பம், கல்வி, தொழில், திருமணம், குழந்தைபாக்கியம், அதிஸ்டவாய்ப்பு, வதிவிட உரிமை, வீடு, வாகனம், நாடுமாற்றம் மற்றும் உங்கள் ஏற்றத்தாழ்வை முன்கூட்டியே தெரிந்துகொண்டு வாழ்க்கையில் வெற்றிநடைபோடவும் உங்கள் கை பெருவிரல் ரேகையைக் கொண்டு பழங்கால ஓலைச்சுவடிகள் மூலம் வாழ்க்கை பலன் அறிய உலகப் புகழ்பெற்ற நாடி ஜோதிடம் பார்க்க வருகை தாருங்கள். உங்கள் பலன் வாசித்து ஒலிநாடாவில் பதிவுசெய்து கொடுக்கப்படும்.

**வரும் முன் தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்**

**06 17 87 58 90 - 06 66 23 73 74**

**நேரம் 10 - 20 மணி வரை / திங்கள்-சனி வரை**

**பார்க்கும் இடம்:** Sudantiran (சுதந்திரன்)
57 Rue Jean P.Timbaud, 75011 Paris
Métro: Couronnes ou parmentier ou goncourt
Bus: 46 - Arret: Fontaine au Roi

(சாதகக்குறிப்பு, நிமரோலோஜி கணித்துக் கொடுக்கப்படும்)

**Luxmy Photo & Transport**

புகைப்படத் தேவைகளுக்கும் சுற்றுலாப் பயணங்களுக்கும்




தொடர்புகளுக்கு:

Pub-06

**Ashha Video Movies**

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073**

Pub-Fr-39

**போட்டோ பாலா**

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:

Photo Bala

**87 Rue de Clignancourt, 75018 Paris**
**Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77**

**பிரான்சில் விசா இல்லையா?**

**கவலை வேண்டாம்!**

**ஓ.ஃ.ப்ரா, கொமிசன், றீஅப்பீல் இலவசம்***

உங்கள் கேசுக்குரிய அத்தாட்சிப் பத்திரம் எடுப்பதற்கான தொடர்புகள் இல்லையா? அதையும் செய்து தரலாம்!

தமிழில் எழுதித் தரப்படும் கேஸ், 48 மணிநேரத்தில் பிரெஞ்சில் மொழிபெயர்ப்புச் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு: தியாகராஜா மாஸ்ரர்
06 09 36 71 89

* மொழிபெயர்ப்பைத் தவிர

Pub. Fr.05

**JASIJANANTH TRAVELS**

உங்கள் பயணத்தைச் சிறப்பானதாக்கிக் கொள்ள தரமான ஒரே வழி. சிறப்புத்தேர்ச்சி, சிறந்த சேவை, சிறப்பான தன்னிறைவு. ஊலகின் எந்த பாகத்திற்குச் செல்வதற்கும் மிகக்குறைந்த கட்டணத்தில் விமான பிரயாணச் சீட்டுக்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

எதற்கு உங்களுக்கு வீணான மன உளைவு?
எமது விமான பிரயாணச்சேவையில் காணீர் தரக்குறைவு.

**K.Kulenthy**
**Jasijananth Travels, Freibourgstr 111 B,**
**3008 Bern.**
**www.jasijananthTravels.com**

இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ள

**ஜசிஜனந் ரவல்ஸ்.**

தோலைபேசி : 031 381 19 64 - தோலைநகல்: 031 381 04 21 - கைத்தோலைபேசி: 079 600 89 66

# தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் முயற்சிக்கு விலைபோன ஆனந்தசங்கரி!

## - தமிழ் மக்களுக்கு விரோதமான தமிழ் இயக்கங்கள் கைப்பற்றிவிடக்கூடாது என்ற ஒரு நோக்கத்திற்காகவே தமிழ் கூட்டமைப்பின் ஊடாக நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்ற தமிழ் மக்கள் முயல்கின்றனர் -

(23.02.2004)

(செய்தி ஆய்வுக் கட்டுரை - நமது கொழும்பு நிருபர்)

சிறீலங்காவின் அரசியலமைப்பை தமிழ்மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. விடுதலைப் புலிகளாக இருந்தாலும் சரி முன்னர் ஆயுதமேந்திப் போராடிய ஏனைய தமிழ் இயக்கங்களாக இருந்தாலும் சரி அவர்களும் அரசியலமைப்பை நிராகரித்திருந்தார்கள். சிறீலங்காவின் அரசியலமைப்பின் கீழ் சத்தியப்பிரமாணங்கள் பதவியுயர்வுகள் அரச நியமனங்கள் எல்லாம் குற்றமாகவும் விரோதமாகவுமே கருதப்பட்டன. 1980களில் மிகக்கடுமையாக இந்தப்போக்கு கடைப்பிடிக்கப்பட்டது.

(தொடர்ச்சி 07 ம் பக்கம்)

# சிங்கள தேசத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டு குழம்பிப்போயுள்ளது

## இந்த அரசியலைக் கையாளும் ஆற்றல் எமது தேசியத் தலைவரிடம் இருக்கின்றது

## - க.வே. பாலகுமாரன் தெரிவிப்பு

(23.02.04)

இன்று சிங்கள தேசத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சிங்கள தேசம் குழம்பிப்போயுள்ளது. செய்வது அறியாது திணறி நிற்கிறது. எனவே இக்காலகட்டத்தில் எமது மக்கள் சிந்தித்து செயற்பெற வேண்டும். அந்தக் கால கட்டம் இதுவேதான் என விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார். புரிந்துணர்வு உடன்படிக்கையின் இரண்டாவது ஆண்டு நிறைவு சமகால அரசியல் நிலைகுறித்து கரத்தரங்கு நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கள விளக்கினை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் ஏ.வி.கே. மாணிக்கம் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றி வைத்தார். தொடர்ந்து கருத்துரைகளை கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன், கிளிநொச்சி வலய கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம், தமிழீழ அரசியல்துறைப் மகளிர் பொறுப்பாளர் தமிழினி விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வே.பாலகுமாரன் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இனி வரப்போகின்ற காலம் நிச்சயமற்

(தொடர்ச்சி 02 ம் பக்கம்)

# பௌத்த, சிங்கள இனவாதக் கொள்கையுடன் 260 பிக்குகள் தேர்தலில் போட்டி



(22.02.04)

சிறீலங்கா வரலாற்றிலேயே முதற்தடவையாக 260 பௌத்த பிக்குகள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளார்கள். சிஹல உருமய என்ற இனவாதக் கட்சி தங்களது கட்சிப் பெயரை ஜாதிக ஹேல உருமய என மாற்றிக்கொண்டன. இக் கட்சியின் கீழேயே மேற்படி பௌத்த பிக்குமார்கள் போட்டியிடவுள்ளனர். சிஹல உருமய கட்சியின் கீழேயே இந்தப் பிக்குகள் அனைவரும் நாட்டின் அனைத்துப் பாகத்திலும் வேட்பாளர்களாகக் குதிக்கவுள்ளனர். இக்கட்சியின் பேச்சாளரான அதிவண. அத்துரலிய ரத்தன தேரோ கருத்துக் கூறுகையில், சிறீலங்கா என்ற நாட்டில் சிங்கள சமூகத்திற்கும் பௌத்த மதத்திற்கும் எழுந்திருக்கும் கடுமையான அச்சுறுத்தல் காரணமாகவே தாங்கள் தேர்தலில் குதித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா ஒரு பௌத்த சிங்கள நாடு என்பதை இந்நாட்டில் வாழும் அனைத்துப் பிரஜைகளும் புரிந்துகொள்ள வேண்டுமென்றும், பௌத்த மதத்தவர்களை மதம் மாற்றும் சக்திகளைப் பூண்டோடு அழிப்பதோடு, பௌத்தம் தவிர்ந்த ஏனைய மதங்கள் சிறீலங்காவில் தழைப்பதைத் தடை செய்வதும் தங்களது பிரதான நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இம்முறை தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் வரப்போகும் விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள தாங்க

(தொடர்ச்சி 02 ம் பக்கம்)

# சொல்ஹெய்ம் - பாலா சந்திப்பு

(23.02.04)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக இலண்டனுக்குச் செல்லவுள்ளார். நாளைமறுதினம் புதன்கிழமை இலண்டனில் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கும் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது வாஷிங்ரனில் கடந்த 17ம் திகதி நடைபெற்ற இலங்கைக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பாக மீளாய்வு மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து எரிக் சொல்ஹெய்ம், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு விளக்கிக்கூறவுள்ளதாகத் தெரியவருகிறது. இந்த மாநாட்டில், இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அதன் பின்னரே உதவியளிக்க உறுதியளிக்கப்பட்ட நிதியு

(தொடர்ச்சி 02 ம் பக்கம்)

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# செய்தித் துளிகள்

- பிரதான அமைச்சரவையில் அங்கம் வகித்த கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவையும் பதவி நீக்கம் செய்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் முன்னே உத்தியோகபூர்வமாகப் பதவிப்பிரமாணம் செய்யத் தவறியதற்காகவே ஜோன் அமரதுங்க பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் காரணம் காட்டியுள்ளது.
- மிலிந்த மொறகொடவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, பொருளாதாரம், தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சராக, தற்போதைய காபந்து அரசின் நிதியமைச்சராகவுள்ள கே.என்.சோக்ஷியை நியமித்துள்ளார்.
- சிறீலங்கா அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி கடந்த 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ளன. கடந்த 2002ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது தெரிந்ததே.
- கிரான் புலிபாய்ந்தகல் ஆற்றில் குளிக்கச்சென்ற இரு சிறுமிகள் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர். இப்பரிதாப சம்பவம் வியாழன் மாலை இடம் பெற்றது. புலிபாய்ந்தகல்லைச் சேர்ந்த தம்பிராசா மாலினி (14) மாமாங்கம் சுரேந்தினி (10) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். இவர்களின் சுரேந்தினியின் சடலம் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்றச் சிறுமியின் சடலத்தை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன, மூன்று சிறுமிகள் நீராடச் சென்றவேளை இரு சிறுமிகள் நீரில் மூழ்கிய போது மூன்றாவது சிறுமி மூழ்கிய சிறுமி ஒருத்தியை காப்பாற்றி கரை சேர்த்து விட்டு மற்றைய சிறுமியை காப்பாற்றச் சென்ற போது இருவரும் நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.
- சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி மாளிகையில் கடந்த 21ம் திகதி சனிக்கிழமை சந்திரிகாவின் படையினருடன் இணைந்து இயங்கும் ஈ.பி.டி.பி. குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து பேசியுள்ளார். இதேவேளை, ஈ.பி.டி.பி - ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) கூட்டணியாக இணைந்து போட்டியிடுகின்றன. இக்கூட்டணிக்கு டக்ளஸ் தேவானந்தா முதன்மை வேட்பாளராக உள்ளார்.
- வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் வருகை, மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் இந்திய மீனவர்களின் சுமார் 300 இழுவைப் படகுகள் வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. இழுவைப்படகுகளால் வடமராட்சி மீனவர்களின் வலைகள் பெருமளவில் நாசமாக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்கு கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
- எதிர்வரும் பொதுத்தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது தொடர்பாக ஜப்பான் கண்காணிப்பாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர் என்று சிறீலங்காவிற்கான ஜப்பான் தூதுவர் அகிடசுடா தெரிவித்துள்ளார். ஜப்பான் குழுவினர் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக 30 இலட்சம் ரூபாவை ஜப்பான் வழங்க விருப்பதாகவும் ஜப்பான் குழு ஒன்று இலங்கைக்கு தேர்தல் கண்காணிப்புப் பணிக்காக வருவது இதுவே முதல் முறை என்றும் ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார்.
- கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் முன்னாள் இந்துக் கலாசார அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் வேட்பு மனுக்கான பத்திரத்தில் மகேஸ்வரன் கையெழுத்திட்டுள்ளார். முன்னாள் இந்துக் கலாசார அமைச்சர் மகேஸ்வரன் கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை விடுதலைப் புலிகளின் பிரமுகர் கரிகாலன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் தேர்தல் விவகாரங்களைக் கையாள்வதற்கென விடுதலைப் புலிகள் தமது பிரதிநிதியாகக் கரிகாலனை நியமித்துள்ளார். இந்த மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள வேட்பாளர்களை கரிகாலன் சந்தித்துத் தேர்தல் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்துள்ளதாக தெரியவருகிறது. இப்பகுதியில் போட்டியிடுபவர்களில் ஜோசப் பரராஜசிங்கம் மட்டுமே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர். ஏனையோர் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள்.

# கூட்டமைப்பின் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து வன்னி சந்திப்பில் முடிவுகள்

## - வீடு சின்னத்தில் போட்டியிட இணக்கம் -

(22.02.04)


பொதுத் தேர்தல் தொடர்பிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்து தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அறுவர் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டது.

இக்குழுவில் தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சுரேஷ் அணி ஆகியவற்றின் தலா ஒரு பிரதிநிதியும், விடுதலைப் புலிகளின் தரப்பில் இரு பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர். கூட்டணி தரப்பில் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோ சார்பில் அதன் முதல்வர் என்.சிறீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இக்குழுவுக்கு நியமனமாகியிருக்கும் அதேவேளை, விடுதலைப் புலிகளின் தரப்பிலான இருவரினதும் பெயர்கள் பின்னர் தெரியப்படுத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், காவல்துறைப் பொறுப்பாளர் ஜீ.நடேசன், வடக்கு, கிழக்கின் மாவட்டங்கள் சகலதையும் சேர்ந்த இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, என்.ரவிராஜ், அ.சந்திரநேரு, என்.துரைரட்ணசிங்கம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தலைவர் அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலாநாதன், சிறீகா-ந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், பிரசன்னா இந்திரகுமார், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இச் சந்திப்பு குறித்து கருத்து வெளியட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வன், வடக்கு, கிழக்கில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு விடுதலைப் புலிகள் தங்கள் பூரண ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவித்தார். செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில், விடுதலைப் புலிகள் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள். ஆனாலும், தனிப்பட்ட முறையிலன்றி கொள்கை ரீதியாக தமிழ்



சுப. தமிழ்ச்செல்வனுடன் சம்பந்தன்

மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக இதனை மாற்றியமைக்க தமிழ் மக்கள் விரும்புகின்றனர். தமிழ் மக்கள் எந்த இலட்சியத்திற்காக, எந்தக் கொள்கைக்காக ஒரு தலைமையின் கீழ் நிற்கிறார்களோ அதை இம்முறை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்த முன்வந்துள்ளனர். அதற்கேற்ப தமிழ் கூட்டமைப்பும், நாங்களும் ஒன்றிணைந்துள்ளோம். அந்தவகையில் எமது முழுமையான பங்களிப்பும், ஆதரவும் தமிழ்க் கூட்டமைப்பிற்குக் கிடைக்கும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இந்தத் தேர்தலுக்கான வாக்களிப்பை நடத்துவது பற்றி தமிழ்க் கூட்டமைப்புடனும், கூட்டணியின் செயலாளர் சம்பந்தனுடனும் பேசியுள்ளோம். எம்மைப் பொறுத்தவரை ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் தங்கள் அபிலாசைகளை இந்தத் தேர்தலில் வெளிப்படுத்தவுள்ளனர். இதற்காக தேர்தலை அனைத்துப் பகுதிகளிலும் நடத்துவதற்கான சாத்தியப்பாடான சூழ்நிலைகளை ஆராயுமாறு தலைவர் பிரபாகரன் எம்மைப் பணித்துள்ளார். எனவே, இவைபற்றியெல்லாம் ஆராய்ந்து பின்னர் தெளிவான முடிவு எடுக்கப்படும்.

வடக்கு, கிழக்கில் பெரும்பா-ன்மை இனக் கட்சிகள் தேர்தலில் போட்டியிடக் கூடாதென நாம் ஒருபோதும் கூறவில்லை. எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. அவ்வாறான அதிகாரத்தை நாங்கள் பிரயோகிக்கவுமில்லை. ஆனால், தமிழ் மக்கள் பெரும்பான்மையினக் கட்சிகளை ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்றே கூறினோம். இம்முறையும் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு, ஒருமித்து, ஒரு தலைமையின் கீழ் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த விருப்பம் கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தேர்தல் பிரசாரங்களுக்கு இடமளிக்கப்படும். மக்கள் தங்கள் அபிலாசைகளை வெளியிட முழு உரிமையும் வழங்கப்படும். இந்த விடயத்தில் தாங்கள் மிகத் தெளிவாக இருப்பதாகவும் கூறினார்.

இது இவ்வாறிருக்க, அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், மறுநாள் புதன்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையத்தில் கூடி பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் `வீடு' சின்னத்தில் போட்டியிடுவதற்கு முழுமையான இணக்கம் கண்டுள்ளனர். அதேவேளை, முன்னதாக அதே அலுவலகத்தில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக் குழுவினர் அங்கு ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக எந்த வித முடிவையும் தங்களுக்குள் எடுக்கமுடியாமல் மீண்டும் கூட உத்தேசித்துள்ளனர்.


# வாகனம் விற்பனைக்கு

**VOLKSWAGEN CARAVELLE**
**TDI 102 CH**
9 PLACES
**TEL: 06 11 26 63 63 ou 01 47 70 47 42**

PEINTURE METAL BLUE
CLIMATISATION, AUTORADIO CD
15000 KM-TRES BON ETAT GENERAL
**PRIX: 28500 EUROS**

Pub-Fr-04

## பொதுத் தேர்தலில் வாக்களிப்பு விபரம்

ஏப்ரல் 2ம் திகதி நடைபெற உள்ள சிறீலங்கா பொதுத் தேர்தல் தொடர்பான சில புள்ளி விவரங்களை சிறீலங்கா தேர்தல் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அவற்றில் இருந்து சில விவரங்கள்...

- 12,899,032 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். இதில் 470,824 பேர் புதிய வாக்காளர்கள்.
- மொத்தம் 11,000 வாக்குப் பதிவு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.
- 1,200 நிலையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.
- தேர்தலில் போட்டியிட 51 அரசியல் கட்சிகள் பதிவு செய்துள்ளன.
- வடக்கு-கிழக்குப் பகுதிகளில் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே வாக்கு எண்ணிக்கை நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- 20001ம் ஆண்டு தேர்தலின் போது வாக்காளர்கள் எண்ணிக்கை 1,24,28,208.
- கொழும்புப் பகுதி அதிக வாக்காளர்களைக் கொண்டது (1,467,751 வாக்காளர்கள்) அடுத்து கம்பஹா மாவட்டம் (1,327,145 வாக்காளர்கள்)

## எதிரணி அதிகாரத்துக்கு வந்தால் புலிகளுடனான போர் நிறுத்தத்துக்கு ஆபத்து

### - பேராசிரியர் பீரிஸ்

(22.02.04)

பொதுத் தேர்தலில் எதிரணி அதிகாரத்துக்கு வருமேயானால், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இரு வருட காலப் போர் நிறுத்தம் ஆபத்துக்குள்ளாகும் என்று அமைச்சரவை பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை செய்திருக்கிறார். அரசாங்கம் மாறுமேயானால் போர்நிறுத்தம் ஆபத்துக்குள்ளாகும் என்பது முழு நாட்டுக்குமே தெளிவாகத் தெரிகிறது என்று கொழும்பு கொள்ளுப்பிட்டி கிராமோதய நிலையத்தின் செய்தியாளர் மகாநாட்டில் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது, விடுதலைப் புலிகளுடன் அரசு செய்து கொண்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தினை சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) முற்று முழுதாக நிராகரித்திருப்பதால், சில சமயம் புதிய அரசாங்கமொன்று ஏப்ரல் இரண்டாம்


ஜி.எல்.பீரிஸ்

திகதி உருவானால் இப்போதைய போர்நிறுத்த ஒப்பந்தம் அன்று முதல் செல்லுபடியற்ற ஒன்றாகவே கணிக்கப்படும்.

சுதந்திரக் கட்சியிலிருந்து ஏராளமான உறுப்பினர்கள் தமது கட்சியுடன் இணைவது, தனித்துவம் மிக்கதாக இருந்த சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமை பற்றி கவலையடைச் செய்தாலும், இது ஐக்கிய தேசிய முன்னணியின் வெற்றிக்கு மேலும் உறுதுணையாக இருக்கிறது.

ஏப்ரல் இரண்டாம் திகதி சில சமயம் புதிய அரசாங்கமொன்று ஆட்சிக்கு வந்தால் தற்போதுள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மை பற்றி கேள்வியெழும்புகிறது. ஜே.வி.பி.யின் முக்கிய தலைவரொருவர் அண்மையில் இதனை நிராகரித்திருக்கிறார். முன்னதாக விடுதலைப் புலிகள் முன்வைத்த தீர்வு யோசனைகளை சுதந்திரக் கட்சி நிராகரித்திருக்கிறது. எனவே, இவ்வாறான பரஸ்பர முரண்பாடான கொள்கைகளைக் கொண்டுள்ள ஒரு தரப்பினர் ஆட்சி அமைத்தால் இப்போதுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தையே பின்பற்ற முடியாது. இது நடைமுறைச் சாத்தியமற்றதும் கூட. எனவே, அவர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி, புதியதொரு போர்நிறுத்த ஒப்பந்தத்தை உருவாக்கும்வரை இப்போதைய போர்நிறுத்த ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகவே கணிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

## அடுத்த அரசை அமைக்கும் தரப்பை தமிழ் கூட்டமைப்பே தீர்மானிக்கும்

### - சர்வதேச செய்தி நிறுவனமான ராய்ட்டர் சேவை கணிப்பு -

(22.02.04)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தவொரு பிரதான கட்சிக்குமோ அல்லது அக்கட்சிகளின் தலைமையிலான எந்தவொரு கூட்டமைப்புக்குமோ நாடாளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மைப்பலம் கிடைக்கும் சாத்தியம் இல்லை என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே எத்தரப்பு ஆட்சியமைக்கும் என்பதே தீர்மானிக்கும் சக்தியாக விளங்கப் போவதாகவும், 12 நிதித்துறை நிறுவனங்களில் சர்வதேச செய்தி நிறுவனமான ராய்ட்டர் செய்திச் சேவை மேற்கொண்ட அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும்- ஜனதா விமுக்தி பெரமுனவும் சேர்ந்து அமைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே நாடாளுமன்றத்தில் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றும். ஆனால், ஆட்சியைத் தனியாக அமைக்கக் கூடிய அறுதிப் பெரும்பான்மை அந்த முன்னணிக்குக் கிடைக்காது என்று ஆய்வாளர்கள் எதிர்வு கூறியிருக்கிறார்கள். 225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 104 ஆசனங்கள் கிடைக்கும் சாத்தியம் இருப்பதாக அபிப்பிராய வாக்கெடுப்பின் மையக் கணிப்பீட்டின் அடிப்படையில் அனுமானம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், ஏனைய சில கட்சிகளும் சேர்ந்த ஐக்கிய தேசிய முன்னணிக்கு 99 ஆசனங்கள் கிடைக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் சுதந்திரக் கட்சிக்கும்- ஜே.வி.பி.க்கும் சேர்த்து 95 ஆசனங்களும் ஐ.தே.க.வுக்கும் அதன் நேச அணிகளுக்கும் 114 ஆசனங்களும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

எந்தவொரு அணிக்குமே அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் ஜனாதிபதி தலைமையிலான முன்னணி அரசாங்கத்தை அமைக்க முயற்சிக்கலாம். ஆனால், நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, இந்த முன்னணிக்கு எதிராகப் நாடாளுமன்றத்தில் வாக்களிக்காமல் இருக்குமாறு சிறிய கட்சிகளுடன் ஒரு புரிந்துணர்வுக்கு வரவேண்டியிருக்கும் என்று தேசிய சமாதானப் பேரவையின் ஊடகப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இத்தேர்தலில் ஒரு வலுவான மூன்றாவது சக்தியாக வெளிக்கிளம்பக் கூடும். அக்கூட்டமைப்பே எந்தப் பிரதான தரப்பு ஆட்சியமைக்க முடியும் என்பதை உறுதி செய்யும் சக்தியாகவும் விளங்கலாம் என்றும் ராய்ட்டர் செய்திச் சேவையின் வாக்கெடுப்பின் மூலம் தெரிய வருகிறது. விடுதலைப் புலிகளின் ஆதரவுடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கூடுதல் பட்சம் 22 ஆசனங்கள் நாடாளுமன்றத்திற்கு கிடைக்கக் கூடும் என்று வாக்கெடுப்பு மதிப்பிடுகிறது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் 15 ஆசனங்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அபிப்பிராய வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்ட 12 நிறுவனங்களில் 10 நிறுவனங்கள் தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவுடன் புதிய அரசாங்கத்தை இறுதியில் அமைக்கும் என்று எதிர்பார்ப்பதாக கருத்து வெளியிட்டுள்ளன. விடுதலைப் புலிகளுடனான அரசாங்கத்தின் 2 வருடகாலப் போர் நிறுத்தம் தொடரும் என்று 12 நிறுவனங்களும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிகாரத்துக்கு வருமானால், போர் நிறுத்தம் முறிவடையலாம் என்று 3 நிறுவனங்கள் அச்சம் வெளியிட்டன.

வங்கிகள், ஆய்வு நிறுவனங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடனான நிதித்துறை முகாமை நிறுவனங்களே ராய்ட்டர் செய்திச் சேவையின் இந்த அபிப்பிராய வாக்கெடுப்புக்குட்படுத்தப்பட்டவையாகும். கொமர்சியல் வங்கி, டி.எப்.சி.சி. ஸ்ரொக் புரோக்கர்ஸ், ஈகிள் என்.டி.பி.நிதி முகாமை நிறுவனம், 'பெஸ்ட் கப்பிட்டல், 'புரொன்ரியர் றிசேர்ச், ஹற்றன் நஷனல் வங்கி, ஜே.பி.செக்கியூரிட்டீஸ், ஸ்ராண்டர்ட் சார்ட்டட் வங்கி, மக்கள் வங்கி ஆகியவையும் இவற்றில் அடங்கும். மூன்று நிறுவனங்கள் அவற்றின் பெயர்களைக் குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டன.

## மாமனாருக்கு தடை விதித்த மருமகள் !

(22.02.04)

சிறீலங்காவின் முன்னாள் படைத்துறை அமைச்சர் அநுருத்த ரத்வத்தை எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டாமென சிறீலங்கா ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அவருக்கு தேசிய பட்டியல் நியமனம் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்ததாகவும் இத்தகவல்கள் கூறுகின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் அநுருத்த ரத்வத்தை போட்டியிட்ட கண்டி மாவட்டத்திலேயே தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. கடந்த தேர்தல் காலத்தில் பல முஸ்லீம் இளைஞர்கள் இம்மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டதோடு, அதற்கான சூத்திரதாரிகளான அநுருத்த ரத்வத்தையும், அவரது புதல்வர்களும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கு இன்னமும் முடிவடையாத நிலையில், ரத்வத்தை போட்டியிட முடிவு செய்தபோதும் சந்திரிகா தரப்பு மறுத்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை, தான் அரசியலில் ஓரம் கட்டப்பட்டுள்ளதாக ரத்வத்தை தனது கட்சியின் மீது குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்காளர் நியமனங்களின்போது தமக்கான நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை எனவும், தேசியப் பட்டியலில் கூட தனக்கு இடம் ஒதுக்கப்படவில்லை எனவும் விசனம் தெரிவித்துள்ள அவர், அரசியலில் தனது மீள் வருகை உண்டு எனவும் உறுதியளித்துள்ளார். சிறீலங்காவின் பிரதிப்



படைத்துறை அமைச்சர், நீர் மின் சக்தி அமைச்சர் என இரு அமைச்சுப் பதவிகளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியின் கீழ் வைத்திருந்தவர்.


# நேசன் Cash and Carry



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

**217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB**

**Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201**


# யாழ்ப்பாணம் சிறையில் இந்திய மீனவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டனர்

(22.02.04)

யாழ்ப்பாண சிறைச்சாலையில், தங்கள் விடுதலை கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 53 இந்திய மீனவர்களும் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை தங்கள் போராட்டத்தை கைவிட்டனர். இந்திய தூதரக அதிகாரிகள் யாழ். சிறைச்சாலைக்குச் சென்று, அவர்களது விடுதலை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்ததையடுத்தே இவர்கள் தங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டனர். கடந்த ஒரு வாரத்திற்கு முன், தங்கள் விடுதலை கோரி 67 இந்திய மீனவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்தனர். எனினும், இவர்களில் 14 பேரின் உடல் நிலை மோசமானதையடுத்து இவர்கள் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் சென்ற, இந்திய தூதரக அதிகாரிகள் இருவர் சிறைச்சாலைக்குச் சென்று மீனவர்களை நேரில் சந்தித்து அவர்களது விடுதலை தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தனர். அத்துடன், சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுடனும் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரிவிப்பதாகவும், சிறீலங்கா கடற்பரப்பிற்குள் ஊடுருவிய போது இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளையும் றோலர்களையும் பார்வையிடுவதாகவும் உறுதியளித்தனர்.

இந்திய தூதரக அதிகாரிகளின் இந்த உறுதிமொழியையடுத்து மீனவர்கள் தங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டனர்.



# அரசியல் கட்சிகளுக்கு அமெரிக்கத் தூதர் வலியுறுத்தல்

(22.02.04)

இலங்கையின் அரசியற் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களின்போது சமாதான நடவடிக்கைகளை வலியுறுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லுண்ஸ் ரெண்ட் இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். சர்வதேச உதவிகளுக்கான அமெரிக்க நிறுவனத்தின் 'யு.எஸ். எயிட்' அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுள்ள 'இந்தப் பாதையைப் பின்பற்றுங்கள்' என்ற தொலைக்காட்சி நாடகத்தின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர், மேலும் தெரிவிக்கையில்... கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் தினமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'இந்தப் பாதையைப் பின்பற்றுங்கள்' என்ற இந்த நாடகத்தின் மூலம் இலங்கையில் வாழும் முஸ்லிம்கள், தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் ஆகியோர் செயற்றன் மிக்க வகையில் புரிந்து கொள்ள உதவும். யு.எஸ். எயிட் நிறுவனம் இலங்கையில் ஜனநாயக வழிமுறைகளையும் மனித உரிமைகளையும் பேணுவதற்கு உதவுவதுடன், நிதிநிலைமையில் ஒரு ஸ்திரத் தன்மையைப் பேணுவதற்கும் உதவுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

# கிறிஸ்தவ தேவாலயங்களின் மீதான தாக்குதல்கள்

## பொறியியலாளர் உட்பட 12 பேர் கைது

(22.02.04)

முப்பது கிறிஸ்தவ தேவாலயங்கள், மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக முன்னாள் தொடருந்துப்பகுதி பொறியியலாளர் உட்பட பன்னிரண்டு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வாகனம் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த போது கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர். கைதான பொறியியலாளர், அண்மையில்தான் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்திருந்தார் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

இக்குழுவினர் ஹோமாகமவிலிருந்து இயங்கிவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் தலைவர் முதலில் கைதானதையடுத்து ஏனையவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் திட்டமிட்டு இத்தாக்குதல்களை நடத்தி வந்தனர் எனவும் பொலிசாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. நுகேகொட, உடவளவ, எம்பிலிப்பிடிய, அவிசாவளை, ஹோமாகம, பன்னால, கெட்டிபொல, கிருலப்பனை, மஹரகம உட்பட சில இடங்களில் இவர்கள் இத்தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த டிசெம்பர் மாதத்தின் பின்னர் 130 கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கிறிஸ்தவ நிலையங்கள் தாக்கப்பட்டதாகப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி நகரில் ஆயுத பாணிகள் பெரும் கொள்ளை

## துப்பாக்கிச் சூட்டில் இருவருக்கு காயம்

(22.02.04)

சாவகச்சேரி நகரில் நேற்று சனிக்கிழமை காலை நகைக்கடைக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நகையும் பணமும் துப்பாக்கி நபர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. நகையையும் பணத்தையும் மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்றவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், அவரும், இடையில் சிக்கி சிறுவனொருவனும் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது... நகரிலுள்ள வி.எம்.கே.நகைக் கடைக்கான பணமும் நகைகளும் தினமும், டச்சு வீதியிலுள்ள உரிமையாளரின் வீட்டிலிருந்தே எடுத்துச் செல்லப்படும். கடையில் கடமையாற்றும் சொக்கலிங்கம் சதீஸ் (28) என்பவர் நேற்றும் இவ்வாறு ஒரு கோடி ரூபாவிற்கும் மேற்பட்ட நகைகளையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுச் சென்றுள்ளார். வீட்டிலிருந்து . சற்று தூரத்தில் இராணுவச் சீருடையில் இவரது மோட்டார் சைக்கிளை வழி மறித்த ஒருவர், இவர் வசமிருந்த நகைப் பார்சலை சோதனையிட முயன்றபோது அதற்கு இணங்காது இவர் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் செல்ல முற்பட்ட போது, வீதியோரத்தில் மறைந்து நின்ற மற்றொருவர் இவரது காலில் துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

இதனால் இவர் மோட்டார் சைக்கிளிலிருந்து அவ்விடத்தில் வீழுந்து விடவே, இவரிடமிருந்த நகைப் பொதியை பறித்துக் கொண்டு அவ்விருவரும் தப்பிச் சென்றுள்ளனர். இதேநேரம், இந்தத் துப்பாக்கிச் சூட்டின் இடை நடுவில் சிக்கி, வீதி வழியால் சென்றுகொண்டிருந்த சிறுவனொருவனும் படு காயமடைந்துள்ளான். தற்போது இருவரும் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதி மாளிகை உரையாடல்களை பதிவு செய்யும் பொறுப்பு தனியார் தொலைபேசி நிறுவனத்திடம்

(22.02.04)

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகையிலுள்ள அனைத்துத் தொலைபேசிகள் மற்றும் தொலைநகல் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் பதிவு செய்யும் பொறுப்பு நாட்டின் பிரபல தனியார் தொலைபேசி நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மாளிகையின் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்த ஒலிப்பதிவு தொடர்பில் மேற்படி தனியார் தொலைபேசி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டு, இதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகிறது.

ஜனாதிபதி மாளிகையில் மேற்கொள்ளப்படும் முக்கியமான கலந்துரையாடல்களின் விபரம் மற்றும் இரகசியக் கூட்டங்களின் போது மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் பகிரங்கமாக வெளிவருவதாகத் தெரிவித்து, இந்த நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா விடுத்த பணிப்புரைக்கமையவே மேற்படி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதி மாளிகையின் பெயர் குறிப்பிட விரும்பாத உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் கண்காணிப்புக்கு புதிய அமைப்பு!

(22.02.04)

இலங்கையில் வன்முறைகள் அற்ற தேர்தல்களை உறுதி செய்வதற்காக தேர்தல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்யும் தேசிய மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையம் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு புத்திஜீவிகளின் சுதந்திர செயற்பாட்டில் இயங்கும். இலங்கை நிர்வாக மற்றும் நிதித்துறையில் அனுபவம் வாய்ந்த குழுவினரைக் கொண்டியங்கும். இந்த அமைப்பின் நிர்வாகம் கல்விமான்களின் பணிப்பாளர் சபையைக் கொண்டதாகும். வன்முறை இல்லாத தேர்தல் ஒன்றை உறுதிப்படுத்துதல், தேர்தல் உரிமை பற்றிய தெளிவை பெற்றுக் கொடுத்தல், தேர்தலின்போது பாதிப்புக்குள்ளாவோருக்கு நியாயம் கிடைக்கச் செய்தல், நேர்மையான தேர்தலுக்கு யோசனை வழங்குதல், கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் அறிக்கை தயாரித்தல் என்பனவே இதன் பணியாகவிருக்கும் என்று இந்த நிலையம் தொடர்பாக அதன் செயலாளர் சட்டத்தரணி ஜே.எம்.விஜேபண்டார தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

# கெய்ரோவில் 54 இலங்கையர்கள் கைது

(22.02.04)

சட்ட விரோதமாக இத்தாலி செல்ல முற்பட்ட 54 இலங்கையர்கள் எகிப்தின் கெய்ரோ நகரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த படகையும் கெய்ரோ காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர். கெய்ரோ காவல் துறையினர் 54 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக சிறிலங்கா காவல் துறையினருக்கு அறிவித்துள்ளதுடன், அவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுப்பதாக எகிப்திய காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு கடற்பிரதேசம் ஊடாக புறப்பட்டுச் சென்றவர்களே எகிப்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# நாட்டை ஆள்வதற்கு புத்தர் திரும்புகிறார்!

நாட்டை ஆண்ட கௌதம புத்தர், ஒருநாள் உலக வாழ்வின் உண்மை நிலையை புரிந்துகொண்டு தனது அரச பதவியை தூக்கி எறிந்துவிட்டு, போதி மரத்தைத் தேடிப்போய் ஞானம் பெற்றதாக வரலாறுகள் கூறுகின்றன. ஆனால், இதுவரை அரசியலில் ஆலோசனைகளையும் ஆசீர்வாதங்களையும் மட்டுமே வழங்கி வந்த புத்தரின் கொள்கையை பின்பற்றுகின்ற சிறீலங்காவின் சிங்கள பௌத்த துறவிகள், தமது கைகளில் இருந்த குடைகளையும் விசிறிகளையும் தூக்கியெறிந்துவிட்டு மீண்டும் நாட்டை ஆள்வதற்குப் புறப்பட்டுள்ளனர்.

சிறீலங்காவின் வரலாற்றில் முதற் தடவையாக சிங்கள பௌத்த துறவிகள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர். சிங்கள இனவாதக் கட்சியான 'சிஹல உறுமய' தனது கட்சியின் பெயரை 'ஜாதிக ஹெல உறுமய' என மாற்றிக்கொண்டு தேர்தலில் குதித்துள்ளது. சிங்கள இனவாதமாக இருந்த இக் கட்சி, தனது வேட்பாளர்களாக பௌத்த துறவிகளை நிறுத்தியதன் மூலம், சிங்கள இனவாத - மதவாதக் கட்சியாக தன்னை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது.

`பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடலாகாது. அரசியல் பௌத்த பிக்குகளுக்குரியதொன்றல்ல. பிக்குகள் மதக் கடமைகளோடு மட்டும் நின்றுவிடட்டும், அரசியல்வாதிகள் அரசியலிலே ஈடுபடுவார்கள்' என்று அமரபுர பீடத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய இராஜகீய பண்டித வெலிகம ஞானரத்தின தேரர் தனது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் இனவாத, மதவாதங்களுக்குள் ஊறிப்போன இந்தத் துறவிகளால் இதனை இலகுவில் புரிந்துகொள்ள முடியவில்லை. அரச மரத்தை விட்டு நாடாளுமன்றத்தை நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டனர்.

தான் கடித்தால் மனிதன் சாவான் என்று நினைத்து கடித்துப் போட்டு சாவைத் தேடிக்கொள்வது கறையான் இனம். தமிழ் மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தப்போய் தனக்கு அழிவுகளைத் தேடிக் கொண்டதுதான் சிங்கள அரசுகளின் வரலாறு. அதிலும் இந்த உண்மைகளை ஜெயசிக்குறுவில் இருந்து தீச்சுவாலை வரைக்கும் சந்திரிகா அனுபவபூர்வமாக கற்றுக்கொண்டுள்ளார். இப்போது அரசியலிலும் தமிழ் மக்களுக்கு எதிராக எதையாவது செய்துவிடலாம் என்ற நப்பாசையோடு, தனது ஒரு கண் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு இரண்டு கண்ணும் போகவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு சேரக் கூடாத கூட்டத்தோடு எல்லாம் சேர்ந்து ஆட்சியைக் கலைத்து தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்.

ஆனால், அவரது எதிர்பார்ப்பிற்கு ஆப்பு வைப்பது போன்று ஆசி வழங்கியவர்களே ஆட்சியில் பங்குபோட முனைந்திருக்கின்றனர். பௌத்த துறவிகளை எதிர்த்து எவ்வாறு குரல் கொடுப்பது என்பதில் சந்திரிகா - ஜே.வி.பி.யினருக்கு இடையில் பெரும் குழப்பம். எங்கே சிங்கள தேசத்தின் வாக்கு வங்கிகளை அவர்கள் சிதறடித்து விடுவார்களோ, இதனால் தமிழ் மக்களின் அரசியல் பலம் அதிகரித்தவிடுமோ என்ற அச்சம் இவர்களுக்கு. இதனால் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை சிதறடிக்கும் நடவடிக்கையில் இவர்கள் இறங்கியுள்ளனர். இவர்களின் இந்நடவடிக்கைக்கு தமிழர்களின் பலத்தை விரும்பாத நாடுகளும் உதவியளித்துவருவதாக செய்திகள் வெளியாகியவண்ணம் உள்ளன.

ஏனெனில், நடைபெறப்போகும் சிறீலங்காவின் 13வது நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள தேசத்தின் இருபெரும் கட்சிகளின் கூட்டமைப்பும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெற்று ஆட்சியமைக்கும் தகுதியை கொண்டிருக்கவில்லை. மூன்றாவது சக்தியாக விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, தமிழர் தரப்பின் ஆதரவுடன் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புத் தான் யார் ஆட்சியில் அமர்வது என்பதை தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. இது தென்னிலங்கை சக்திகளுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. 225 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவை ஒட்டு மொத்தமாக வழங்குமிடத்து 25 ஆசனங்களை தமிழ் கூட்டமைப்பு பெறும் வாய்ப்புள்ளது. மீதமுள்ள 200 ஆசனங்களில் இரண்டு சிங்களக் கட்சிகளின் கூட்டமைப்புகளும் பௌத்த துறவிகளும் பங்குபோடவுள்ளனர். இந்நிலையில் சிறீலங்கா ஆட்சியை நிர்ணயிக்கும் சக்தியாக தமிழ் மக்களே உள்ளனர் என்பது பலதரப்பட்டவர்களின் கணிப்பாக மாறியுள்ளது.

இவ்வேளையில், தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைத்து தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பை சீர்குலைப்பதற்கான செயற்பாடுகளும், தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்கான நடவடிக்கைகளும் முடக்கிவிடப்பட்டுள்ளன. எனவே, பேரினவாதிகளிடம் விலைபோய், தமது எசமான விசுவாசத்தை காட்டுவதற்காக, தமிழர் தரப்பின் ஒற்றுமைக்கு வேட்டு வைத்துக் குழப்பம் விளைவிப்பவர்களை அடையாளம் கண்டுகொள்வதுடன், தமிழ் மக்கள் விழிப்பாய் இருக்க வேண்டியது அவசியமானது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்குரிய சுயநிர்ணய உரிமை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இல்லையென்பதற்கும் அப்பால், சாதாரண நடைமுறையில் உள்ள ஜனநாயக ரீதியான பேச்சு உரிமைகள், எழுத்து உரிமைகள், வதிவிட உரிமைகள் கூட உரிய முறையில் தமிழர் தரப்பு அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இந்த வரலாறுகள் எல்லாம் சொல்லித்தெரிய வேண்டிய அவசியமில்லை. தற்போது விடுதலைப் போராட்டம் பலமடைந்து சர்வதேச ரீதியான கவனிப்புக்கள், அழுத்தங்களுக்கு மத்தியில் சிறீலங்கா அரசாங்கம் பேச்சு வார்த்தை மேசைக்கு புலிகளை அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான ஒரு காலகட்டத்திலேதான் நான்கு ஆண்டுகளுக்குள் மூன்று பொதுத் தேர்தல்களை சிறீலங்கா சந்திக்க வேண்டியநிலை ஏற்பட்டது. அந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணத்திலும் தேர்தலை நடத்தவேண்டிய சூழ்நிலையும் உருவானது. அதற்குரிய வகையில் புலிகளும் விட்டுக்கொடுக்கவேண்டிய யதார்த்த நிலைக்கு தள்ளப்பட்டனர். அதனை சாதகமாகப் பயன்படுத்தி அதுவரை காலமும் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியிருந்த தமிழ்க்கட்சிகள் போட்டியிட முன்வந்தனர். ஆனால் புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்தி சுயநிர்ணய உரிமையை முன்வைத்தே தேர்தலில் களமிறங்கினர். அதன் நிமித்தமே 2001 பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. புலிகளை விமர்சித்தவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் வாழமுடியும் எனக்கூறியவர்கள் எல்லோரும் புலிகளை ஏகபிரதிநிதிகள் என்று ஏற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெற்றிருந்தனர். இது சர்வதேச ரீதியில் தமிழர்களின் அந்தஸ்த்தை உயர்த்தியிருந்தது. நோர்வேயின் ஏற்பாட்டுடனான பேச்சுவார்த்தைக்கு அது மேலும் மெருகூட்டியது.

இந்தவொரு நிலையிலேதான் தற்போது மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை ஜனாதிபதி அறிவித்துவிட்டார். தேர்தலுக்கான ஏற்பாடுகள் செம்மையாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் எழுந்தன. முரண்பாடுகள் என்பதைவிட வேண்டுமென்றே அல்லது மீண்டும் முன்னைய காலங்களைப் போன்று சிங்கள அரசியல் தலைமைகளுக்கு அல்லது இந்திய உளவாளிகளுக்கு துணைபோகின்ற கைங்கரியம் என்றே அதனைக்கூறலாம். குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தற்போது ஜனநாயகம் பற்றிப் பேசுகின்றார். வடக்கு கிழக்கு மாகாணத்தில் சுயமாகச் சிந்தித்து செயற்படுவதற்கு வழி ஏற்படவேண்டும் என்றும் சங்கரி பிரஸ்தாபிக்கின்றார். 20 ஆண்டுகாலப் போரில் ஏற்பட்ட இழப்புக்கள் அவலங்கள், பொருளாதாரத் தடைகள் என பல்வேறுபட்ட துயரங்களை தமிழ்மக்கள் சந்திக்க நேரிட்டபோது இந்த சங்கரி அப்போது ஜனநாயகம் பற்றிப் பேசினாரா? இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட்டதோ இல்லையோ புலிகளின் போராட்ட இழப்புக்கள், தியாகங்கள் என்ற நீண்ட வரலாற்றின் பயனாகவே இன்று கணிசமான அளவு வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைதி நிலவுகின்றது. யுத்த நிறுத்த உடன்படிக்கை அதற்கு ஒரு உதாரணம்.

புலிகளுக்கு எதிராகப்பேசியவர்கள் காட்டிக் கொடுத்தவர்கள் போராட்டமே வேண்டாம் என்று கூறியவர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் இன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் எந்தவித அச்சமும் இன்றி போய் வருகின்றனர். புலிகளோடும் சந்தித்து அளவளாவுகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகாலமாக சங்கரியும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு கூட சென்று வந்தவர். அப்போது புலிகளைப்பற்றி உயர்வாக பேசியிருந்தார். புலிகளின் தியாகமே சிறீலங்கா அரசாங்கம் பேச்சு வார்த்தை மேசைக்கு வந்தது என்றும் கூறியிருந்தார். புலிகளோடுதான் பேசவேண்டும் என்றும் கட்டாயப்படுத்தியிருந்தார். உண்மையான உள் உணர்வோடுதான் சங்கரி அப்போது இதனை சொன்னாரா? இல்லையா என்ற கேள்விக்கு அப்பால் ஜனநாயகத்தன்மை ஒன்று இருந்தது என்பதை அவர் ஏற்றுக்கொண்டார் என்றே கருத இடமிருந்தது. ஆனால் தற்போது கிட்டத்தட்ட ஒருவருடத்திற்கு முன்பிருந்தே சங்கரி தனது கருத்தை படிப்படியாக மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டதன் காரணமென்ன? அதனைப்பற்றி ஆராயவேண்டிய அவசியம் இல்லை என்று கூறினாலும் புலிகள் தமது துப்பாக்கிகளை தற்போது கீழே வைத்து விட்டதுதான் அதற்கு காரணமா? என்ற கேள்வி தமிழ்மக்கள் மத்தியில் எழுகின்றது. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருப்பது சங்கரிக்கு மாத்திரமல்ல தென்பகுதி அரசியல்வாதிகளுக்கும் அது வாய்ப்பாக அமைந்துவிட்டது.

ஜனநாயக ரீதியாக செயற்படவேண்டும் மற்றவர்களின் கருத்துக்க மதிப்பளிக்க வேண்டும் என சங்கரி போன்ற அரசியல்வாதிகள் கூறுகின்றார்கள். ஆனால் தமது இனத்தை அடகுவைக்கும் வேலைத்திட்டங்களை இவர்கள் முன்னெடுப்பது தமிழ்தேசிய நலனுக்கு துரோகமாக இல்லையா? தமிழர்களின் பேச்சு சுதந்திரம் மற்றும் சாதாரண அடிப்படை மனித உரிமைகள் கூட மறுக்கப்பட்ட போது சர்வதேச அரங்கில் அதற்கு எதிராக குரல் கொடுக்காது தம்மையும் தமது அரசியலையும் அப்போது சங்கரி வளர்த்துக்கொண்டிருந்தார். ஆனால் 2000ம் காலப்பகுதிகளில் தமிழ்மக்கள் அதனை மறந்து அவரை ஒரு மூத்த தலைவர் என மீண்டும் மதிப்புக்கொடுத்தார்கள். ஏற்றுக் கொண்டார்கள். அதற்கான பரிசுதான் சங்கரி இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் முரண்பட்டு நிற்பதா? எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமானால் ஒருமித்த குரலில் ஓரணியாக நிற்க வேண்டியது காலத்தின் தேவை.

ஒவ்வொரு தமிழ் அரசியல் தலைவர்களும் ஒவ்வொரு விதமான கருத்துக்களைக் கூறி நின்றால் அது சிங்களத் தலைமைகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும். பிரித்தாளும் தந்திரத்தைக் கையாளுவதற்கும் வசதியாகிவிடும். ஆகவேதான் அதற்கு இடம் கொடாத வகையில் நாங்கள் செயற்பட வேண்டும். எமது சுயநிர்ணய உரிமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அதாவது உறுதியான தீர்வு ஒன்று எட்டிய பின்னர் நாங்கள் எமக்குள் வெவ்வேறு பட்ட கருத்துக்களுடன் அரசியலை நடத்த முடியும். அதன் பின்னர் எங்கள் வசதிக்கேற்ற ஜனநாயகத்தையும் பேசமுடியும். ஆனால் தற்போது தமிழ் மக்களின் இருப்பிடமே உறுதிப்படுத்தப்படாத நிலையில் எமக்குள் மாறுபட்ட கருத்துக்களைப் பேசுவது ஏற்புடையதல்ல. நாடாளுமன்ற ஆசனங்களை தமிழ் மக்களுக்கு விரோதமான தமிழ் இயக்கங்கள் கைப்பற்றிவிடக் கூடாது என்ற ஒரு நோக்கத்திற்காகவே தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஊடாக அந்த ஆசனங்களைக் கைப்பற்ற தமிழ் மக்கள் முற்படுகின்றார்களே தவிர அந்த ஆசனங்கள் மூலமாக எமது உரிமைகளை நாம் பெற்றுவிட முடியாது என்று அவர்களுக்குத் தெரியும்.

ஆகவே நாடாளுமன்றத் தேர்தலில் பங்குபற்றுவது தமிழர்களின் இராஜதந்திர ரீதியான ஒரு தந்திரோபாயம் மாத்திரமே. ஆனால் சங்கரி போன்றவர்கள் அதன்மூலமாக எதனையோ வெட்டிப்பிடுங்கி விடலாம் என நினைப்பது வேடிக்கையானது. அந்த ஆசனத்தைக் கைப்பற்றுவதற்காக புலிகளை விமர்சிப்பதும் ஜனநாயகம் இல்லையென பிரசாரம் செய்வதும் தனக்கு கொலை அச்சுறுத்தல் என கதை விடுவதும் சிரிப்பிற்கிடமானது. இன்று சர்வதேச சமூகம் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான நிதியுதவியை வழங்குவது குறித்து புலிகளோடு பேசுகின்ற அல்லது புலிகளிடம் நேரடியாக கையளிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுகின்றவேளை, சங்கரி போன்றவர்கள் ஜோக் விடுகின்றார்கள். புலிகளைப் புகழ்ந்து பேசி போராட்ட வீரத்தை பாராட்டிப்பேசி தமிழ் மக்கள் மத்தியில் மிக சமீபகாலத்தில் நுழைந்தவர்தான் சங்கரி. ஆனால் இன்று அதற்கு நேர்மாறாக செயல்பட்டு தமிழ்மக்களின் விடுதலை புருஷனாக தன்னை சித்தரிக்க முற்படுகின்றார். அது அரசியல் நாகரிகமும் அல்ல. தமிழர் விடுதலைக்கான தார்மீக கடமையும் அல்ல. சர்வதேச அரங்கில் புகழ்பெற்றிருக்கும் தமிழர் போராட்டத்தை மலினப்படுத்தும் பேச்சுக்களை அல்லது நடவடிக்கைகளை சங்கரி மாத்திரமல்ல, சங்கரி போன்று எதிர்காலத்தில் செயற்பட முற்படும் ஏனைய சில

தமிழ் தலைவர்களும் தவிர்த்துக்கொள்வது நல்லது. அதற்காக தங்கள் ஜனநாயக உரிமை மறுக்கப்படுகின்றது என அவர் கூறினால் அது வரலாற்றுத்துரோகம். இதற்கு மேல் எதனையும் சொல்லவேண்டியதில்லை.

## ஜெயலலிதாவின் அதிரடி நடவடிக்கை ஆடு, கோழி பலியிட தடை நீக்கம்

(22.02.04)

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், ஜெயலலிதா அரசினால் கொண்டுவரப்பட்ட கோவில்களில் ஆடு, கோழி பலியிடுவதற்கு தடை விதிக்கப்பட்ட சட்டம் திடீரென நீக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிராம கோவில்களில் ஆடு, கோழி போன்ற விலங்கினங்களை பலியிடுவதை தடை செய்யும் ஒரு சட்டம் 1948ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. காங்கிரஸ் ஆட்சியின்போது 1950ம் ஆண்டு இந்த சட்டம் அமலுக்கு வந்தது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்த சட்டம் தீவிரமாக அமல்படுத்தப்பட்டது. இந்த நிலையில் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று இந்தச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்ய முதலமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்தார். இதற்கான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

தங்களது மத பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதற்கு எவ்வித தடங்கலும் உருவாகாதவாறு இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்றும், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கோரிக்கைகள் விடுத்தனர். இந்தக் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலனை செய்த தமிழக முதலமைச்சர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைமுறையிலுள்ள இத்தகைய விலங்குகள் மற்றும் பறவைகள் பலியிடுதல் உள்ளடங்கிய சமயச் சடங்குகளை நிறைவேற்ற இயலாத நிலையில் தங்களுக்கு மட்டுமல்லாமல் தங்களது பரம்பரைக்கே தெய்வ நிந்தனை வந்து சேருமோ என்ற கிராமப்புற மக்களின் அச்சத்தை நீக்கும் வகையிலும், அவர்களுடைய மத நம்பிக்கைகளுக்கு மதிப்பு அளித்து அவற்றிற்கு எதிர் காலத்திலும் ஊறு நேராத வகையில் அவர்கள் மேற்கொள்கின்ற சமயச் சடங்குகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலும் 1950ம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சியாளர்களால் இயற்றப்பட்ட தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகள் பலியிடுதல் தடைச்சட்டத்தை முற்றிலுமாக நீக்கறவு செய்து ஓர் அவசரச் சட்டத்தை பிறப்பிக்குமாறு அறிவுரை வழங்கினார். இந்த அடிப்படையில் 20.02.04 முதல் தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகள் பலியிடுதல் தடை (நீக்கறவு) அவசரச்சட்டம் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஈழத்தமிழர் தொடர்பான எனது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

### `இந்திரா காந்தி இருந்திருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும்'

### - வைகோ -

(22.02.04)

கடந்த 19 மாதங்களாக பொடாச் சட்டத்தின் கீழ் வேலூர் சிறையிலிருந்து சென்றவாரம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோபால்சாமி விடுதலையாகியிருந்தார். ஈழத் தமிழ் மக்களுக்காக குரல்கொடுத்ததற்காக சிறைசென்ற வைகோ, தொட-ர்ந்தும் ஈழத் தமிழ் மக்களுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துவருகின்றார். கடந்தவாரம் இலண்டன் பி.பி.சி.க்கு வைகோ அளித்திருக்கும் பேட்டியில் இருந்து சில பகுதிகள்...

கேள்வி:– *இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உங்களது கொள்கைகளைப் பார்க்கும்போது, காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரசாரம் செய்யும்போது, ஒருவருக்கொருவர் ஆதரவாக பிரசாரம் செய்யும்போது சங்கடங்கள் ஏற்படாதா?*

வைகோ:- எந்த சங்கடத்திற்கும் இடமில்லை. ஈழத்தமிழர்களுக்கு விடியல் ஏற்பட வேண்டும். அவர்களின் சோகவரலாறு முடிய வேண்டும் என்பதற்காக நான் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். அன்னை இந்திராகாந்தி அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் என்றைக்கோ நிலைமை வேறாகியிருக்கும். தமிழீழமே வந்திருக்கும். அதற்குப் பிறகு பொறுப்பேற்ற பிரதமர் ராஜீவ் காந்தி தவறான பாதையிலே தவறான வழியிலே கொண்டு சென்றார். விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டு வேதனைக்குரிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஈழத்தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. நியாயமான பிரச்சினை. இதுவரை அதற்கு என்ன குரல் கொடுத்தேனோ அதே நிலைப்பாட்டை நான் தொடருவேன். இதில் எந்த நெருடலுக்கும் இடமில்லை. இதனால், எமக்கும் காங்கிரசிற்கும் பிரச்சினை ஏற்பட வழியுமில்லை.

கேள்வி:– *இப்போது ஈழத்தில் சமாதான முயற்சிகள் முட்டுக்கட்டையான நிலையில் உள்ளன. கொழும்பிலுள்ள அரசியல் சிக்கல் தீராமை அமைதிக்கு வழி வகுக்குமா?*

வைகோ:- உலகம் பூராவும் வாழ்த்தி வரவேற்ற அமைதிப் பேச்சுவார்த்தைக்கு பெரும் குந்தகத்தை விளைவித்தவர் சந்திரிகா. ஐரோப்பிய ஒன்றியம், தாய்லாந்து, சுவிற்சர்லாந்து, ஜப்பான் முன்னணியில் நின்று இந்தப் பேச்சுவார்த்தை வெற்றிபெற வேண்டுமென பாடுபட்டன. விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்துள்ள அமெரிக்காவும், பிரிட்டனும் இப்பேச்சுக்கள் வெற்றிகரமாக நடந்தேற வேண்டுமென விரும்பின. இலங்கையில் துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்து சமாதானம் ஏற்படுமென தமிழரும், சிங்களவரும் நம்பியிருந்த ஒரு நிலையில், இதற்கு முன் தமிழர்களுடைய எண்ணத்தில் எப்படி மண்ணைப் போட்டார்களோ சிங்களப் பேரினவாதிகளின் அதே உணர்வோடு தான் சந்திரிகா இப்போது செயற்படுகிறார். தமிழர் என்ற இனத்தை கருவறுக்க வேண்டுமென காலமெலாம் செயற்பட்டு வரும் ஜே.வி.பி.யுடன் அவர் கரம் கோர்த்திருப்பது, அமைதி, சமாதானம் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் மனங்களில் கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு நம்பிக்கை எனக்கிருக்கிறது. தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் இனி யுத்தமொன்றை விரும்பமாட்டார்கள். இந்தத் தேர்தலில் சந்திரிகாவுக்கு சரியான பாடம் கற்பிப்பார்கள். தமிழர்களுடன் உடன்பாடு கொள்ளக்கூடிய உணர்வோடு தேர்தலை சந்திக்கும் ரணில் வெற்றிபெறுவாரென நம்புகிறேன். எனவே, என்னைப் பொறுத்தமட்டில் இருள் மூளுமென்று நான் நினைக்கவில்லை. விடியலே உதயமாகுமென நம்புகிறேன்.

## 13 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை இளைஞர்கள் இருவர் விடுவிக்கக் கோரி மனுத்தாக்கல்

(22.02.04)

13 ஆண்டுகளாக சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையர் இருவர் தம்மை விடுவிக்கக்கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். 39 வயதுடைய லிங்கம் மற்றும் வசந்தன் ஆகியோருடைய ஆட்கொணர்வு மனுவை ஏற்ற நீதிமன்றம் மாநில அரசிற்கும் மத்திய புலனாய்வு பணியகத்திற்கும் அறிவித்தல் உத்தரவை அனுப்பியுள்ளது. லிங்கம் ஜூன் 1991ல் வேதாரணியத்தில் வைத்து சிபிஐ இனால் கைது செய்யப்பட்டார். வசந்தன் 1991 ஒக்டோபரில் திருச்சியில் கைது செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் செங்கல்பட்டில் உள்ள முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள், தடா நீதிமன்றத்தில் குற்றவாளியாகவோ சாட்சியாகவோ நிறுத்தப்படவில்லை. தடா சட்டத்தின் கீழ் சதிச் செயலில் சம்பந்தப்பட்டவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களில் விடுவிக்கப்பட்டோர் வெளிநாடுகள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள் என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களிற்கு வழக்கெதுவும் இல்லாதபோதிலும் அவர்கள் தாம் விரும்பிய வெளிநாடுகளிற்குச் செல்லக்கூடிய உத்தரவு எதையும் அதிகார அமைப்புகள் வழங்கவில்லை.

## `பொடா' மறு ஆய்வுக்குழுவில் வைகோ வழக்கில் இறுதிக்கட்ட விசாரணை

(22.02.04)


`பொடா' மறுஆய்வுக்குழுவில், வைகோ வழக்கில் இறுதிக்கட்ட விசாரணை வருகிற 24ம் திகதி தொடங்குகிறது. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட `பொடா'மறு ஆய்வுக்குழுவில், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, நக்கீரன் கோபால் ஆகியோர் முறையீடு செய்து இருக்கிறார்கள். பொடா சட்டப்படி அவர்கள் மீது தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டது சரியா என்பது பற்றி, மறு ஆய்வுக் குழு விசாரிக்கிறது. வைகோ தொடர்பான வழக்கில் கடந்த 16ம் திகதி தமிழக அரசு, மறு ஆய்வுக்குழு கேட்டு இருந்த ஆவணங்களை தாக்கல் செய்தது. இதனால் இறுதிக்கட்ட விசாரணையை வருகிற 24ம் திகதி தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மறு ஆய்வுக்குழுவின் தலைமை நீதிபதி அருண் சகார்யா டெல்லியில், இதை தெரிவித்தார். நக்கீரன் கோபால் வழக்கில் தமிழக அரசு இன்னமும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை. தமிழக அரசு இதற்கான நடவடிக்கை மேற்கொண்ட பிறகே நக்கீரன் கோபால் மீதான வழக்கு மறு ஆய்வுக்குழுவில் விசாரணை-க்கு வரும் என்ற தகவலையும் நீதிபதி சகார்யா தெரிவித்தார்.

## இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வைகோ போட்டியிடவில்லை

இந்திய நாடாளுமன்ற தேர்தலில் ம.தி.மு.க. போட்டியிடும் நான்கு தொகுதிகளின் வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் பொதுச் செயலர் வைகோ சென்னையில் வியாழக்கிழமை வெளியிட்டார். சென்னை அண்ணாநகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பெயரை அவர் அறிவித்தார்.

சிவகாசி தொகுதியில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ போட்டியிடவில்லை. அத்தொகுதியில் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன் போட்டியிடுகிறார். வந்தவாசி தொகுதிக்கு செஞ்சி என். இராமச்சந்திரனும் திருச்சி தொகுதிக்கு எல். கணேசனும், பொள்ளாச்சி (தனி) தொகுதிக்கு டாக்டர் சி. கிருஷ்ணனும் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளனர்.



சிப்பிப்பாறை ரவிச்சந்திரனுடன் வைகோ

## யாழ்.சிறையிலுள்ள 67 இந்திய மீனவர்களை விடுவிக்க உதவுமாறு கருணாநிதி கடிதம்

(22.02.04)

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்துவரும் 67 இந்திய மீனவர்களையும் மீட்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி தி.மு.க. தலைவர் கருணாநிதி இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் யஸ்வந் சின்ஹாவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில்... கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 67 தமிழக மீனவர்களை சிறீலங்கா கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர் என்ற வேதனையான செய்தியை தங்களின் கவனத்துக்கு கொண்டுவருகிறேன். அவர்களின் இயந்திரப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அந்த மீனவர்கள் யாழ்ப்பாணச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தங்களை விடுதலை செய்யக்கோரி, அம்மீனவர்கள் கடந்த 16ம் திகதி முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இதுபோல், அநுராதபுரம், நீர்கொழும்பு உட்பட பல்வேறு பகுதிகளில் உள்ள சிறைகளிலும் தமிழக மீனவர்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மீனவர்களை உடனடியாக மீட்க உரியநடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். மீனவர்களை விடுதலை செய்யவும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை அவர்களிடம் ஒப்படைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு, சிறீலங்காவிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாத வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.



தமிழகத்தின் 3வது அணியான மக்கள் கூட்டணி தலைவர்கள் எஸ்.கண்ணப்பன், தொல் திருமாவளவன், டாக்டர் கிருஷ்ணசாமி, ஐக்கிய ஜனதாதளம் ஜவஹர் ஜோசப் ஆகியோர் தங்கள் சின்னமான அம்பு சின்னத்தை காண்பிக்கின்றனர்.

# பாதுகாப்பு வளையத்தை முறியடித்து தாக்கும் திறன்

## ரஷ்யா தயாரித்துள்ள புதிய ஏவுகணை

(22.02.04)

அமெரிக்காவின் ஏவுகணை எதிர்ப்பு சாதனத்துக்கு சவால் விடும் புதிய ஏவுகணையை ரஷ்யா தயாரித்துள்ளது. ஏவுகணை தடை ஒப்பந்தத்தையும் பொருட்படுத்தாது, எதிரிகளின் ஏவுகணைகளை மறித்து தாக்கி அழிக்கும் எதிர்ப்பு ஏவுகணைகளை 50 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அமெரிக்கா உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த திட்டத்தை எதிர்த்தவர்கள், இது உலக அளவில் ஆயுதப் போட்டியை ஏற்படுத்தும் என்று கூறினர். இது உண்மையாகி உள்ளது. அமெரிக்காவின் ஏவுகணை எதிர்ப்பு சாதனத்துக்கு சவால் விடும் வகையில் புதிய ஏவுகணையை ரஷ்யா தயாரித்துள்ளது. இது எத்தகைய ஏவுகணை பாதுகாப்பு வளையத்தையும் முறியடித்து குறித்த இலக்கினை தாக்கும் வல்லமை படைத்தது.

இந்த புதிய ஏவுகணையின் செயல்பாடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதில் அதன் திறமை உறுதிபடுத்தப்பட்டது. ரஷ்ய இராணுவத்தின் முதல் துணை தளபதி கேணல் ஜெனரல் யூரி பலுயேவ்-ஸ்கி, இதுபற்றி கூறுகையில், 'எந்த ஒரு ஏவுகணை எதிர்ப்பு சாதனத்தையும் முறியடிக்கும் ஆற்றல் படைத்தது. ஏவுகணை எதிர்



கேணல் ஜெனரல் யூரி பலுயேவ்ஸ்கி

-ப்பு சாதனத்தை உருவாக்கி உள்ள அல்லது எதிர் காலத்தில் உருவாக்க இருக்கிற எந்த ஒரு நாட்டுக்கும் ரஷ்யா தரும் பதில் தான் இந்தப் புதிய ஏவுகணை' என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, "இந்தப் புதிய ஏவுகணை பற்றி, அமெரிக்கா அலட்டிக்கொள்ளவில்லை. அமெரிக்க - ரஷ்யா உறவில் எந்தப் பாதிப்பையும் இந்த புதிய ஏவுகணை ஏற்படுத்தும் என்று நான் நம்பவில்லை" என அமெரிக்க முப்படைத் தளபதி ரிச்சர்டு மியர்ஸ் கூறினார்.

# லிபியா மீதான கட்டுப்பாடுகள் தளர்கின்றன

(22.02.04)

அணு ஆயதங்கள் தயாரிப்பதை லிபியா கைவிடுவதற்கு உடன்பட்டதையடுத்து அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அடுத்த வாரம் முதல் தளர்த்தப்படுகிறது. அதோடு அணு ஆயுதத் திட்டத்தை கைவிட்டதற்கு, வெகுமதியாக, அந்த நாட்டுக்கு மனிதாபிமான உதவியும் மற்றும் பல நிதி உதவிகளையும் வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக அமெரிக்கர்கள், லிபியா செல்வதற்கு இருந்த தடை இரத்து செய்யப்படுகிறது. இதற்கான அறிவிப்பு வருகிற 24ம் திகதி வெளியிடப்படுகிறது. அமெரிக்கக் குழுக்களை லிபியாவுக்கு அனுப்பி சுகாதாரத் துறையில் என்ன மாதிரியான உதவிகள் தேவைப்படும் என்பது மதிப்பிடப்படும்.

# ஈரான் தொடருந்து விபத்து

## உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(22.02.04)

ஈரானில் எரிபொருளை ஏற்றிச் சென்ற தொடருந்து ஒன்று விபத்திற்குள்ளானதால் ஏற்பட்ட தீயில் சிக்குண்டு 320ற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 460 பேருக்கு அதிகமானோர் காயமடைந்துள்ளனர். அத்துடன் இத் தீயினால் சுமார் ஐந்து கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதியில் உள்ள கோராசன் மாநிலத்திலிருந்து பெற்றோல், பசளை மற்றும் கந்தகம் என்பவற்றை ஏற்றிச் சென்ற தொடருந்தே விபத்திற்குள்ளாகியுள்ளது. 51 பெட்டிகளு



டன் சென்று கொண்டிருந்த இந்த நீண்ட தொடருந்து திடீரென தீப்பிடித்து எரிந்ததாகவும் இதையடுத்து பெரும் சத்தத்துடன் வெடி-த்து சிதறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெடிப்பு சம்பவத்தின் அதிர்வு 70 கிலோமீற்றர் தூரம் வரை உணரப்பட்டதாகவும் 10 கிலோமீற்றர் சுற்றுவட்டத்திற்குள் உள்ள வீடுகளின் யன்னல் கண்ணாடிகள் உடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க, ஈரானில் நடைபெற்ற நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் முஸ்லீம்களின் பழமைவாதக் கட்சி வெற்றி பெறும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வாரம் நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் முழுமையாக வெளிவராத போதிலும் பெரும்பான்மையான இடங்களை இக் கட்சி கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மயக்க மருந்துகொடுத்து நோயாளிகளைக் கொன்ற ஜேர்மனிய மருத்துவர் கைது

(22.02.04)

ஜேர்மனி மத்திய பகுதி நகரங்களில் வசித்த நோயாளிகள் சிலர் மர்மமான முறையில் இறந்தார்கள். இதனால் சந்தேகம் அடைந்த போலிசார் புற்று நோய் நிபுணரான 54 வயது மருத்துவரை பிடித்து விசாரணை நடத்தினார்கள். இதில் அந்த மருத்துவர் தனது நோயாளிகளுக்கு அளவுக்கு மீறி தூக்க மருந்தை செலுத்தி கொலை செய்திருப்பதாக தெரியவந்தது. முதல் கட்ட விசாரணையில் கடந்த 2001ம் ஆண்டு முதல் 2003ம் ஆண்டு மே மாதம் வரையில் 8 நோயாளிகளின் சாவுக்கு அவர் காரணமாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அந்த மருத்துவரை போலிசார் கைது செய்தனர்.

இதுபற்றி போலிஸ் அதிகாரி தாமஸ் கிளங்கி கூறுகையில், "இந்த மருத்துவரின் தவறான சிகிச்சையால் மேலும் 66 பேர் இறந்து இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கிறோம். அதுபற்றி விரிவான விசாரணை நடைபெற்று வருகிறது" என்று கூறினார். இந்த செய்தி ஜேர்மனி நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இதேபோன்று நோயாளிகளை ஊசி போட்டு கொன்றதாக இங்கிலாந்தை சேர்ந்த மருத்துவர் ஹரோல்டு ஷிப்மேன் என்பவர் பிடிபட்டு தண்டிக்கப்பட்டார் என்பதும் பின்னர் அவர் தற்கொரை செய்துகொண்டதும் தெரிந்ததே.

# இலங்கைப் பெண் நாடுகடத்தல் நியூஸிலாந்து அமைச்சர் பதவி விலகல்

(22.02.04)

இலங்கையைச் சேர்ந்த 16 வயதுப் பெண்ணொருவர் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு நியூசிலாந்தில் இருந்து வெளியேற்றப்பட்டமை தொடர்பான ஆவணமொன்று ஊடகங்களுக்கு வெளியானதையடுத்து, அந்நாட்டின் குடி வரவுத்துறை அமைச்சர் லியான் டான்சியல் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பதவி விலகியுள்ளார். இலங்கையில் குடும்ப உறுப்பினர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்ணொருவர் நியூசிலாந்தில் தஞ்சம் கோரியிருந்தார். ஆனால், அவரது தஞ்சக் கோரிக்கையை நிராகரித்த அந்நாட்டின் குடி வரவுத்துறை அமைச்சர், அப்பெண்ணை நாட்டைவிட்டு வெளியேற்றினார்.

இவரது தஞ்சக் கோரிக்கை ஆவணங்கள் 'ரி.வி. 3' என்ற தொலைக்காட்சியிலும், அங்குள்ள தினசரியொன்றிலும் வெளியிடப்பட்டிருந்தன. இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதுகுறி-த்து தனக்கு எதுவும் தெரியாது என மறுத்திருந்த அமைச்சர், நேற்று தன்னாலேயே இவ்வாவணங்கள் கசியவிடப்பட்டன என்பதை ஏற்றுக் கொண்டு தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

# பேருந்தில் மனித வெடிகுண்டு தாக்குதல் 10 பேர் பலி 49 பேர் காயம்

(23.02.04)

ஜெருசலேம் நகரில் ஓடும் பேருந்தில் மனித வெடிகுண்டு தாக்குதலில், 10 பேர் பலியானார்கள். 49 பேர் காயம் அடைந்தனர். இஸ்ரேல் நாட்டில் பாலஸ்தீனியர்களின் மனித வெடி குண்டுத் தாக்குதல் தொடர்ந்து நடந்து வருகிறது.



ஜெருசலேம் நகரை அடுத்த ரெகாவியர் என்ற இடத்தில் சென்ற ஒரு பேருந்தில் காலை வேளையானதால் அதில் பயணிகள் நிரம்பி வழிந்தனர். அதில் பயணம் செய்த தற்கொலையாளி தன் உடம்பில் கட்டி இருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தான். இதில் பேருந்தில் பயணம் செய்த 10 பேர் உடல் சிதறிச் செத்தனர். 49 பேர் காயம் அடைந்தனர். தற்கொலைப் படையினரிடம் இருந்து இஸ்ரேல் குடிமக்களைக் காப்பாற்றுவதற்காக எல்லை நெடுகிலும் தடுப்புச்சுவர் எழுப்புவது அவசியம் என்பதை இந்த குண்டு வெடிப்பு சம்பவம் வலியுறுத்துகிறது என்று இஸ்ரேல் அதிகாரிகள் கூறி உள்ளனர். இஸ்ரேல் தடுப்புச் சுவர் கட்டுவது சட்டத்துக்குப் புறம்பானது என்று தி ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முதல் நாள் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

# RESTAURANT HARIHARAN

## குறைந்த விலையில் சிறந்த உணவுகள்

25 அல்லது 50 சாப்பாடுகள் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கப்படும்

**இறைச்சிச் சாப்பாடு**

பிரியாணிச் சோறு
ஆட்டிறைச்சிக் கறி
கோழிக்கறி
கத்தரிக்காய்க் கறி
பருப்பு
வெங்காயச் சம்பல்
கோழிப் பொரியல்
நண்டு வறை
Salade ஜெலி பலவகை கலர்கள்

**சைவச் சாப்பாடு**

1. Basumathi அரிசியில் சோறு
3. கத்தரிக்காய் கறி
4. கரணைக்கிழங்கு பிரட்டல் கறி
5. பருப்பு பால் கறி
6. கோவா அல்லது வெங்காயப்பூ சுண்டல்
7. வெங்காயச் சம்பல்
8. அச்சாறு
9. வடை
10. பாயாசம்
11. அப்பளம்
12. மிளகாய்ப் பொரியல்
13. வாழைக்காய் பொரியல்

**சிற்றுண்டிகள்**

| | |
|---|---|
| வடை | 00 € 50 |
| Rol | 00 € 60 |
| Samusa | 00 € 60 |
| Samusa மரக்கறி | 00 € 60 |
| கடலைவடை | 00 € 50 |
| பகோடா | 4 € 70 |
| மிஸ்சர் | 5 € 20 |
| கேசரி | 00 € 50 |



**அன்பளிப்பு**

* 200 சாப்பாடுக்கு 20 சாப்பாடு இலவசம்
* 300 சாப்பாடுக்கு 30 சாப்பாடு இலவசம்

**அன்பளிப்பு**

* 500 சாப்பாடு எடுத்தால் T.T.N தொலைக்காட்சி பார்ப்பதற்கான ஒரு அட்டை அன்பளிப்பு
* பிறந்தநாள் கொண்டாட்டமாக இருந்தால் - பிறந்தநாள் நடைபெறுபவரின் பிறந்தநாள் வாழ்த்து T.T.N இல் இலவசமாக எம் மூலம் ஒளிபரப்பப்படும்.



- 100 க்கு மேல் சாப்பாடு எடுத்தால் இல்லம் தேடி கொடுக்கப்படும்
- எம்மிடம் சாப்பாடு எடுத்தால் சாப்பாடு பரிமாறும் சில்வர் தட்டுக்களை நாங்கள் தருவோம். (500 சாப்பாட்டுக்கு 500 தட்டு)
- கறிகள் போடும் சில்வர் பாத்திரங்கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு

**உரிமையாளரின் நேரடி கவனிப்பில் இன்றே நாடுங்கள்**

## ஹரிகரன்

**20, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle.**
**Telephone: 01 42 09 06 30 / Portable: 06 67 14 46 39 - Mahendran**

26 பெப்ரவரி - 02 மார்ச்
2004

முரசு. இதழ்

வாழ்வு - இலக்கியம் - பண்பாடு

# ‘தலைவர் ஒரு நாட்டை செதுக்கிறார் அந்த வரலாற்றை நான் மரங்களில் செதுக்குகிறேன்’

**தாயக விடுதலைப் போராட்டத்தின் வரலாறு மரங்களில் பதிவுறுகின்றன. விடுதலைப் போரின் முக்கியமான கட்டங்கள் மரச்சிற்பங்களாக மிளிர்கின்றன. `விக்கி மாஸ்ரர்` என்றழைக்கப்படும் விக்கினேஸ்வர நாதன் இதனை மேற்கொண்டு வருகிறார். விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரான இவர் தற்போது தனது முழு நேரத்தையும் போராட்டச் சிற்பங்களை செதுக்குவதிலேயே செலவழிக்கின்றார். `வரலாற்றுச் சிற்பி` என்றும் அழைக்கப்படும் `விக்கி மாஸ்ரர்` ஈழமுரசுக்கென வழங்கிய நேர்காணல் இது.**

## மண் மீட்புப் போராட்டத்தைச் சித்தரிக்கும் மரச்சிற்பங்கள்!

### — `வரலாற்றுச் சிற்பி` விக்கி மாஸ்ரருடன் ஒரு நேர்காணல் —

*(நேர்காணலின் சென்ற இதழின் தொடர்ச்சி)*

**ஈழமுரசு:-** *வரலாற்று சிற்பி என்கிற பட்டம் உங்களுக்கு யாரால் வழங்கப்பட்டது?*

இது ஒரு பட்டமாக யாராலும் வழங்கப்படவில்லை. எங்களது தளபதிகள் அடிக்கடி என்னிடம் வருவார்கள். சிற்பங்களைப் பார்வையிடுவார்கள் அவர்கள் தான் என்னை இப்படிச் சொல்லியழைப்பார்கள் அதுவே நாளடைவில் நிலைத்துவிட்டது.

**ஈழமுரசு:-** *உங்களுக்குத் தெரிந்த வரையில் உலகில் வேறெங்காவது இவ்வாறான வரலாற்றைச் சித்தரிக்கும் மரசிற்பங்கள் உள்ளனவா?*

இந்திய சிற்பங்கள் உள்ளன. அவை சோழர் காலத்தைத்தழுவியதாக, குறிப்பாக சமயம் சார்ந்த தான சிற்பங்களாகவுள்ளன. கிரேக்க சிற்பங்களை எடுத்துக் கொண்டால் அவையும் இயேசுவின் வாழ்வினை சித்தரிக்கும் சிற்பங்களாகவுள்ளன. இவை மரச்சிற்பங்களல்ல.

> மேஜர் கிண்ணி இயக்கச்சியில் நடந்த சண்டைக்கு போகுமுன்பதாக என்னை சந்தித்தார். ‘மாஸ்ரர் நான் சாவடைந்தால் என்னை இந்த மரக்கட்டையில் செதுக்குங்கள்’ என்று கூறி மரக்கட்டையொன்றையும் தெரிவு செய்து தந்தார்.

எனக்குத்தெரிந்தவரையில் இந்தியாவில்தான் மரச்சிற்பங்கள் உள்ளன. குறிப்பாக தமிழ்நாட்டில்தான் உள்ளன. தஞ்சை சரஸ்வதி மகாலில் சந்தனமரச் சிற்பங்கள் உள்ளன.

**ஈழமுரசு:-** *தஞ்சை சிற்பங்கள் உங்களுக்கு ஒரு உத்தேசத்தை ஏற்படுத்தியனவா?*

அவற்றை நான் பார்த்திருக்கிறேன். பகவத்கீதையைச் சித்தரிக்கின்ற புகழ் பெற்ற மரச்சிற்பம் ஒன்றும் அங்கு உள்ளது. இந்த சிற்பம் மரத்தின் தன்மையை அதாவது அங்குஉள்ள சிராய் வரிகளை அப்படியே பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலி சிற்பங்களெல்லாம் மரத்தின் பதம்பார்-த்து, அவற்றின் சிராய்வரிகளை அகற்றித்தான் செய்யப்பட்டுள்ளது. ஒரு மரத்தைப்பார்த்து அதில் சிற்பம் வடிக்க வேண்டும் என சிற்பி நினைத்தால் மரவரி அதற்குத்தடையாக இருக்கமுடியாது. எனவே, அந்த தஞ்சை சிற்பம் என்னை மிகவும் கவர்ந்தது எனக்குள் பல எண்ண அலைகளை தோற்றுவித்தது.

**ஈழமுரசு:-** *மரச்சிற்பங்கள் செதுக்குவதில் மட்டும் தான் தங்களுக்கு ஈடுபாடுள்ளதா?*

யானைத் தந்தத்தில் சிற்பங்கள் செய்கிறேன். வெண்கலத்தில் செய்கிறேன். இயக்க நிகழ்வுகளின் தேவைகருதி புலிச்சின்னங்கள் போன்ற பல்வேறு பொருட்களையும் உலோகங்களிலும் வடிவமைக்கிறேன். தமிழீழ வரலாற்றுச் சிற்பக்கலைக்கூடம் என்கிற அமைப்பில் லெப்.கேணல் தூயவன் கலைக்கூடத்தில் தான் எனது சிற்பவேலைகள் நடைபெற்றுவருகின்றன.

**ஈழமுரசு:-** *தங்களின் இந்தக் கலைக்கூடத்தில் வேறு சிற்பிகளும் உள்ளனரா? சிற்பங்கள் செதுக்குவது தொடர்பாக வேறுயாருக்கும் பயிற்சிகள் ஏதும் வழங்கப்படுகின்றனவா?*

வேறு சிற்பிகள் இல்லை. புதியவர்களுக்கு பயிற்சியளிப்பதிலும் பிரச்சினைகள் உள்ளன. சமயச்சிற்பங்கள், கோவில் சிற்பங்கள் செதுக்குவதென்றால் பயிற்சியளிக்கலாம். ஒரு சில உருவகங்களை மட்டும் தொடர்ந்து செதுக்குவது சுலபமானதாகவிருக்கும். புதிய புதிய முகங்களை, தோற்றங்களை அவற்றிற்குரிய உணர்வுகள் உணர்ச்சிகளோடு செதுக்குவதானால் அதற்கொரு சூழ்நிலை தியானம் தேவை என்பதே எனது அனுபவக்கருத்து. தமிழ்நாட்டு மரச் சிற்பங்களும் குறிப்பிட்ட சில வகைகளில் தான் உள்ளன. பிள்ளையார், முருகன், லட்சுமி கிருஸ்ணன், சிவன், நாயன்மார்களென அவை சமயச் சிற்பங்களாக உள்ளன. அவற்றை ஒருவர் பயிற்சி பெற்று தொடர்ந்து செதுக்கிக் கொண்டிருப்பது சுலபமானதாக இருக்கலாம். போராட்டச்சிற்பங்களை பயிற்சி பெற்று செதுக்குவதென்பது சுலபமானதல்ல.

**ஈழமுரசு:-** *இது வரையில் போராட்டத்தைச் சித்தரிக்கும் எத்தனை சிற்பங்களை உருவாக்கியிருக்கிறீர்கள்? அவற்றில் சிறப்பானதென ஒன்றைக்குறிப்பிடுவதானால் எதைக் குறிப்பிடுவீர்கள்?*

இது வரை இருபத்தெட்டு சிற்பங்கள் உருவாக்கியுள்ளேன். மேஜர் கிண்ணியின் இந்தியப்படைக்கெதிரான பங்கர் தாக்குதல் சிற்பத்தைத்தான் இதுவரையிலான எனது சிற்பங்களின் உச்சம் எனக் கூறுவேன். எங்களுக்கென்றொரு நாடு உருவாகி அந்த நாட்டின் தேசியக்கலைக் கூடத்தில் அச்சிற்பம் இருக்குமானால், அந்த சிற்பத்திற்கு நிகராக எதுவும் இருக்காது. நான் அதிகமாக இந்தியாவிலுள்ள கலைக்கூடங்களில் சிற்பங்களைப்பார்த்திருக்கிறேன் அவற்றினோடு ஒப்பிட்டுப் பார்த்துதான் இதனைக் கூறுகிறேன். மேஜர் கிண்ணியினது அந்த சிற்பம் நான் பார்த்த இந்திய சிற்பங்களையும் விஞ்சி நிற்கிறது என்றே உணர்கிறேன். அது அப்படி உயிரோட்டமாக வர ஒரு காரணமும் உள்ளது. மேஜர் கிண்ணி இயக்கச்சியில் நடந்த சண்டைக்கு போகுமுன்பதாக என்னை சந்தித்தார். ‘மாஸ்ரர் நான் சாவடைந்தால் என்னை இந்த மரக்கட்டையில் செதுக்குங்கள்’ என்று கூறி மரக்கட்டையொன்றையும் தெரிவு செய்து தந்தார். இது என்னால் மறக்கமுடியாத சம்பவம்.

**ஈழமுரசு:-** *விடுதலைப் போராட்டத்தில் இடம்பெற்ற முக்கியமான தாக்குதல்கள் எல்லாம் சிற்பங்களாக உருவாக்கப்பட்டுள்ளதா?*

தாக்குதல்களை மட்டும் சிற்பங்களில் பதிப்பது எமது நோக்கமல்ல. அது வரலாற்றுச் சிற்பங்களின் நோக்கமுமல்ல, போராட்டத்திற்கான முக்கியமான அனைத்து நிகழ்வுகளையும் சிற்பங்களாக்குவதே நோக்கம் அந்த வகையில் போராட்ட வரலாற்றின் திருப்பு முனைகளாக இருந்த சண்டைகள், கரும்புலித் தாக்குதல்கள், விமான, கப்பல் தாக்குதல்கள் என்பனவும் பதிவாகியுள்ளன.

**ஈழமுரசு:-** *இந்த சிற்பத்துறையில் உங்கள் இலக்கு என்பது எதுவாக அமைந்துள்ளது?*

உலகத்தில் தமிழ் மக்களுக்கென்றொரு நாடு உருவாக வேண்டும் என்கிற இலக்கில் எமது தேசியத் தலைவர் பணியாற்றிவருகிறார், அதற்காக அவர் பல்லாயிரக்கணக்கான போராளிகளையும் படையணிகளையும் உருவாக்கியிருக்கிறார். அவர் தலைமையிலான இந்தப் போராட்டவரலாற்றை என்னால் சிற்பமாக்கமுடிந்தால் அதுவே போதுமானது. அதாவது எமது தலைவர் ஒரு நாட்டை உருவாக்கும் சிற்பியாகவிருக்கிறார். அவர் தலைமையிலான போராட்டவரலாற்றை சிற்பங்களாக்க நான் முடிந்தவரை உழைக்கிறேன். இதுவே எனது இலக்காகவும் இருக்கும்.

(முற்றும்)

**சந்திப்பு - விவேக்**

A-M Service


A.M.SERVICE
வங்கிக் கடன் பெற்றுத்தரும் நிறுவனம்

புதிய காணிகள், வீடுகள்
Villeparisis
Rosny sous-Bois
Champigny sur Marne
Le Bourget
Vaires sur Marne

* உங்கள் விருப்பப்படி வீடுகள், மாடிவீடுகள், காணிகள், புதிதாகக் கட்டுகின்ற வீடுகள், இத்தோடு இதற்கான 100 வீத கடன் வசதிகளை செய்து தருகின்றோம்.
* தனிப்பட்ட கடன் வசதிகளும் உண்டு.
* வீட்டு வேலைகளையும் செய்து தருகின்றோம்.
* வேண்டிய வீடுகளை விற்பதற்கும், புதிதாக வீடுகளை வேண்டுவதற்கும் நாடுங்கள்

A.M.Service

வீடு, கடன் ஆலோசனைக்கு நாடுங்கள் இன்றே
A/M Service
11, Rue Commandant Baroche,
93350 Le Bourget
Tel: 0148381536 - Fax: 0148381539
மேலதிக தொடர்புகளுக்கு: அழகன் 0663747498
RER: B - Le Bourget Bus: 152 - 609 - 143
Pub-Fr-02




# கறுப்பு ஆடு

– இடாலோ கால்வினோ

எல்லோருமே திருடர்களாக இருந்த ஒரு நாடு இருந்தது.

இரவில் ஒவ்வொருவரும் எல்லா பூட்டுகளுக்கும் பொருந்தும் சாவிகளோடும் ஒளிமட்டுப்படுத்தபட்ட லாந்தர்களோடும் வீட்டை விட்டுக் கிளம்பிப்போய் அண்டை வீட்டுக்காரர் ஒருவரின் வீட்டில் புகுந்து திருடுவார்கள். திருடியதை மூட்டை கட்டிக்கொண்டு விடியற் காலையில் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்புவார்கள். வந்து பார்க்கும்போது தங்களுடைய வீடு கொள்ளையடிக்கப் பட்டிருப்பதைக் காண்பார்கள்.

ஆகவே எல்லோரும் மகிழ்ச்சியுடன் கூடி வாழ்ந்தார்கள். யாருக்கும் எந்த இழப்பும் இல்லை. ஏனென்றால், ஒவ்வொரு நபரும் அடுத்தவரிடமிருந்து திருடினார். அடுத்தவர் இன்னொருவரிடமிருந்து திருடினார். இப்படியே போய் கடைசி நபர் முதல் நபரிடம் திருடும்வரை சுழற்சி தொடரும். விற்பவரும் வாங்குபவரும் தவிர்க்க முடியாத வகையில் ஒருவரையொருவர் ஏமாற்றும் விதமாகவே அங்கே வணிக நடவடிக்கைகள் இருந்தன. தன்னுடைய குடி மக்களிடமிருந்து திருடிய குற்ற அமைப்பாகவே அரசு இருந்தது. குடிமக்களும் தங்களுடைய பங்குக்கு அரசை ஏமாற்றுவதில் மட்டுமே குறியாக இருந்தார்கள். இப்படியாக வாழ்க்கை அங்கே பிரச்சினை இல்லாமல் போய்க்கொண்டிருந்தது. யாரும் பணக்காரருமில்லை, யாரும் ஏழையுமில்லை.

எப்படியென்று நமக்குத் தெரியவில்லை, ஒருநாள் ஒரு நேர்மையான மனிதன் அந்த நாட்டிற்கு வந்து வசிக்கத் தொடங்கினான். இரவு வேளைகளில் கோணிப்பையும் லாந்தருமாக வெளியே போகாமல் புகை பிடித்தபடியும், நாவல்கள் படித்தபடியும் அவன் வீட்டிலேயே இருந்தான்.

திருட வந்தவர்கள் அவனுடைய வீட்டில் விளக்கு எரிவதைப் பார்த்துவிட்டு உள்ளே போகவில்லை.

இப்படியாக சில நாட்கள் கடந்தன. எதுவும் செய்யாமல் வாழ்வது அவனுக்குப் பிடித்தமானதாக இருந்தாலும் மற்றவர்கள் செய்வதைத் தடுப்பதற்கு அது காரணமாக இருக்கக் கூடாது என்பதை அவனுக்கு விளக்கிச் சொல்ல வேண்டிய கட்டாயம் அந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டது. வீட்டிற்குள்ளேயே இருந்து அவன் ஒரு இரவைக் கழித்தால் அடுத்த நாள் ஒரு குடும்பத்தினர்க்கு சாப்பிட எதுவும் இருக்காது என்று அர்த்தம் என்பதை அவனுக்கு எடுத்துச் சொன்னார்கள்.

அவர்கள் முன்வைத்த வாதத்தை அவனால் நிராகரிக்க முடியவில்லை. மாலைவேளையில் வெளியே போய்விட்டு அடுத்தநாள் காலை



வீடு திரும்புவதை அவன் வழக்கமாக்கிக் கொண்டான். ஆனால் அவன் திருடவில்லை. அவன் நேர்மையானவனாக இருந்தான். அவ்விஷயத்தில் நம்மால் எதுவும் செய்ய முடியாது. பாலத்துக்குப் போய் கீழே ஓடும் தண்ணீரை அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். வீடு திரும்பியபோது தன்னுடைய வீடு கொள்ளையடிக்கப் பட்டிருந்ததைக் கண்டான்.

ஒரு வாரத்திற்குள்ளாகவே அவனுடைய பணம் முழுக்க பறிபோய்விட்டது. சாப்பிட ஒன்றுமில்லை. வீட்டில் ஒரு பொருளும் கிடையாது. இது ஒரு பிரச்சினையே இல்லை. ஏனென்றால், அது அவனுடைய தவறுதான். அவனுடைய நடத்தைதான் எல்லாவற்றையும் சீர்குலைத்துவிட்டது. தன்னுடையதை மற்றவர்கள் திருட விட்டுவிட்டு தான் மற்றவர்களிடமிருந்து எதுவும் திருடாமல் விட்டதுதான் சிக்கலுக்குக் காரணம், ஆகவே, காலையில் வீடு திரும்பும்போது யாராவது ஒருவர் தன்னுடைய வீடு தொடப்படாமல் இருப்பதை எப்போதும் காண நேர்ந்தது: அதாவது, அந்த நேர்மையான மனிதன் திருடியிருக்க வேண்டிய வீடு. சில காலம் கழித்து, திருடப்படாத வீடுகளின் சொந்தக்காரர்கள் மற்றவர்களைவிட பணக்காரர்களானார்கள். அவர்கள் அதன் பிறகு திருடவும் விரும்பவில்லை. சிக்கலை அதிகப்படுத்திய விஷயம் என்ன வென்றால், நேர்மையானவனின் வீட்டில் திருட வந்தவர்கள் அது எப்போதும் காலியாகவே இருப்பதைக் கண்டார்கள். எனவே, அவர்கள் ஏழைகளானார்கள்.

இதற்கிடையில், இரவில் பாலத்திற்குப்போய் கீழே ஓடும் தண்ணீரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் நேர்மையானவனின் பழக்கத்தை பணக்காரர்களாகி விட்டவர்களும் கைக்கொண்டார்கள். இந்த நடைமுறை, குழப்பத்தை மேலும் அதிகப்படுத்தியது, ஏனென்றால், இதனால் மேலும் பலர் பணக்காரர்களாகவும், மேலும் பலர் ஏழைகளாகவும் ஆனார்கள்.

ஒவ்வொரு இரவும் பாலத்துக்குப் போய்விட்டால் தாங்கள் விரைவில் ஏழைகளாகிவிடுவோம் என்பதை பணக்கார நபர்கள் உணர்ந்தார்கள்.

'நாம் சில ஏழைகளுக்குப் பணம் கொடுத்து நமக்காகத் திருட அவர்களை அனுப்புவோம்' என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். சம்பளங்களையும் லாப சதவீதங்களையும் இறுதி செய்து கொண்டார்கள். உண்மையில் அவர்கள் இன்னும் திருடர்கள்தான். இன்னும் அவர்கள் ஒருவரையொருவர் ஏமாற்றி பணம் பறிக்க முயன்றார்கள். ஆனால், இயல்பான நடைமுறைப்படி, பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகவும் ஆனார்கள்.

பணக்காரர்களில் சிலர் இனி திருடவேண்டிய தேவை ஏற்படாத அளவுக்கும் பணக்காரர்களானார்கள். அல்லது, தொடர்ந்து பணக்காரர்களாகத் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள தங்களுக்காக பிறரைத் திருட வைத்தார்கள். ஆனால் அவர்கள் திருடுவதை நிறுத்தினால் ஏழைகளாகிவிடுவார்கள். ஆகவே மற்ற ஏழைகளிடமிருந்து தங்களுடைய சொத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பணம் கொடுத்து ஏழைகளிலேயே மிகவும் ஏழ்மையில் இருப்பவர்களை அமர்த்திக் கொண்டார்கள். அதாவது, ஒரு காவல் நிலையத்தை நிறுவியதிலும் சிறைச்சாலைகளைக் கட்டியதிலும் அது முடிந்தது.

ஆகவே, அந்த நேர்மையான மனிதன் அங்கே வந்த சில வருடங்களுக்குப் பிறகு, யாரும் திருடுவதைப் பற்றியோ திருட்டுக் கொடுப்பதைப் பற்றியோ பேசாமல், பணக்காரர்களைப் பற்றியும் ஏழைகளைப் பற்றியும் மட்டுமே பேசினார்கள். ஆனால், அவர்கள் எல்லோரும் அப்போதும் திருடர்கள்தான்.

அங்கிருந்த ஒரே நேர்மையான மனிதன் ஆரம்பத்தில் அங்கிருந்த அவன் ஒருவன் மட்டும்தான், அவன் குறுகிய காலத்தில் பசியால் இறந்துபோனான்.

Numbers in The Dark என்ற தொகுதியில் Fables And Stories 1943-1958 என்ற பகுதியில் உள்ள கதை இது. இத்தாலிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழபெயர்த்தவர் Tim Parks

**தமிழில் : ஆர். சிவகுமார்**

TRISTAR ALLIANCE

வீட்டுக் காப்புறுதி, மருத்துவக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி, அனைத்துக் காப்புறுதிகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**TRISTAR ALLIANCE**

தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் மேலும் விமானச் சீட்டுக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும்

BYBA TOURISME

*18, Rue Démarquai, 75010 Paris*
*Tél: 01 42 09 06 66 / Fax: 01 42 09 15 05*
*Métro: Gare du nord*
*www.tristarassurance.com*

Pub-Fr-40

பாகம் - 2

# வலிகாமம் இருந்து வன்னி வரை

2

- கவிஞர் நாவண்ணன்

அருணா அந்த ஆணைக்குப் பணிந்தே ஆகவேண்டிய கடமை. ஆனால் அவன் யாரைச் சுடப்போகின்றான். தமது இனிய நண்பனை. தம்மை வளர்த்து உருவாக்கியதில் பெரும் பங்கு வகித்த ஒரு போராளியை, ஒன்றாக உண்டு குடித்து, சிரித்து மகிழ்ந்த அண்ணனை மதியூகமும், வீரமும் மிக்க ஒரு போராளியை அவனையா சுடுவது? அதுவும் தானா? எப்படி?

`டேய் சுடடா'

அருணா மனதைக் கல்லாக்கிக்கொண்டான். இப்பொழுது அவன் கண்களில் துப்பாக்கி முனையும், அவனுடைய இலக்கும் மட்டும்தான் தெரிந்தன. துப்பாக்கியின் விசையை சுட்டுவிரல் அழுத்தியது.

`டு...மீ...ல்'

அருணாவின் கையில் இருந்த துப்பாக்கி முழங்கியது. துப்பாக்கி ரவையானது விடுதலைப் புலிகளின் ஒப்பற்ற அந்த வீரனின் நெற்றியைத் துளைத்து மூளையைச் சிதறடித்து மண்ணுக்குள் புகுந்துகொண்டது..

சீலன் தன் தேசத்தின் விடிவிற்கும் விடுதலை இயக்கத்தின் இலட்சியப் பற்றை நிலைநாட்டும் பொருட்டும் தன் இறுதி மூச்சையும் விட்டுவிட்டு மனநிறைவுடன் கண்களை மூடி அமைதியானான். அவன் உடலில் இருந்து வெளியேறிய இரத்தம் அவன் நேசித்த மண்ணோடு கலந்துகொண்டிருந்தது.

சமர் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. நடந்த சம்பவங்களைக் கவனித்துக்கொண்டே கணேசும், ஆனந்தும் போராடிக்கொண்டிருந்தனர். சீலனின் வீரச்சாவு அவர்களிடம் ஒரு ஆவேசத்தைக் கிளப்பிவிட்டிருந்தது. அந்த ஆவேசத்தின் விளைவுதானோ என்னவோ அடுத்து ஆனந்த் எதிரியின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி விழுந்தான். அவனைக் காப்பாற்றும் முயற்சியில் கணேசும், அருணாவும் இறங்கினர் ஆனால் ஆனந்து சற்றுமுன்னர் தமது அணித்தலைவன் கற்றுத் தந்த நெறியை பின்பற்ற முடிவெடுத்துவிட்டான். ஆனந்த் கூறினான்

`என்னைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டாம். என்னையும் சுட்டுப்போட்டு நீங்கள் ஆயுதங்களோட தப்பிப் போங்கோ'

ஓ... ! சீலன் இறுதியில் செய்து முடித்துச் சென்ற சாதனையின் பெறுமதிதான் என்னே! விடுதலை போராளிகளின் வரலாற்றில் தற்கொடை எனும் அர்ப்பணிப்புக்கு முதற் செயல்வடிவம் கொடுத்து வீரச்சாவடைந்தவன் அவன் அல்லவா? எதிரியின் கையில் உயிரோடு பிடிபடுவதில்லை என்ற விடுதலைப்புலிகளின் கொள்கைக்கு முதலில் அடி எடுத்து வைத்து நடந்து மறைந்தவன் அவனல்லவா? அவனது அந்த இலட்சியத்துக்கான அர்பணிப்பாடத்தைக் கற்றுக்கொண்ட சில நிமிட நேரங்களில் இன்னுமொரு இலட்சியவீரன் உருவாகி விட்டானே.

ஆனந்த் சத்தமிட்டான் `என்னையும் சுடுங்கள்'

இக்கட்டான நிலையும், இயலாமையின் காரணமும், ஆனந்தின் சுயவிருப்புடன் அவனது ஆசையும் நிறைவேற்றப்பட்டது. அவர்களின் ஆயுதங்களும் பாதுகாப்பாக மீட்டுச் செல்லப்பட்டன. அன்று சீலனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தற்கொடைவரலாறு மரபு இன்று வரை தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

அந்த மாவீரர்கள் இருவரது விருப்பம்போல கணேசும், அருணாவும் ஆயுதங்களுடன் பின்வாங்கி இராணுவத்தின் பிடியிற் சிக்காது தப்பித்துக்கொண்டார்கள். இராணுவத்தினருக்கு, தம்மால் சுற்றிவளைக்கப்பட்டவர்கள் விடுதலைப்புலிகள் போராளிகள் என்பதுதான் தெரியுமே தவிர அவர்களை இன்னார் என்று தெரியாது. கணேசும் அருணாவும் சென்றதின் பின்னர் சீலனுடையதும், ஆனந்துடையதும் வித்துடல்களை இராணுவத்தினர் வந்து சூழ்ந்து கொண்டனர். சீலனின் உடலை பார்வையிட்ட அந்த இராணுவ அதிகாரி சீலனது வலது முழங்காலுக்கு மேலே இருந்த தழும்புகள் கண்டதும் முதலில் திகைத்தான். மறுகணம் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தான். தனது வாழ்க்கையிலேயே மாபெரும் சாதனையை நிலைநாட்டிவிட்டது போன்ற பெருமிதம் அவனுக்கு.

ஏனெனில் அவர்கள் தேடி வலைவிரித்துத்திரிந்த சீலன்தான் என்பதை அவன் காலில் துப்பாக்கி ரவைகள் ஏற்படுத்தியிருந்த ஆழமான தழும்புகள் காட்டிக் கொடுத்துவிட்டன. சீலனைக் கொலைசெய்து விட்ட பெருமிதத்தோடு அவன் வெறி அடங்கிவிடவில்லை. அவனது வக்கிரத்தனமான குணத்தையும் வெளிக்காட்டினான். சீலன் உடலை ஜீப்பிலே கட்டி பொதுமக்கள் பார்க்கும் வண்ணம் வீதியிலே இழுத்துச் சென்றான். உயிரோடு வாழும்பொழுதுதான் கொண்ட இலட்சியத்துக்காக எந்தத்துன்பத்தையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தவன் சீலன். அவன் வீரச்சாவடைந்த பின்னர் அவனது வித்துடல் இந்த அவமானத்தையும் ஏற்றுக் கொண்டது. சீலனின் ஆன்மாவுக்கு உய்த்துணரும் சக்தி இருக்குமானால் அது என்ன நினைத்திருக்கும் என எண்ணிப் பார்க்கிறேன். `இந்த ஈழமண்ணில் உராய்ந்து இழுபடும்போது சிதறும் தனது உடற்துகள்கள் ஒரு இடத்தில் மட்டுமல்லாது பரந்து பல இடங்களிலும், தேய்ந்து கலக்கும் பாக்கியம் என் உடலுக்குக்கிடைத்திருக்கிறதே' என்று நிறைவு அடைந்திருக்கும். இராணுவத்தின் இந்த அசுரத்தனமான செயலின் காரணத்தால் அருணாவின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நரம்பறுந்து போயிருந்த சீலனின் கண்களில் ஒன்று வீதியில் எங்கேயோ கழன்று விழுந்துவிட்டது. சீலனதும், ஆனந்துடையதும் உடல்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

**அருணா மனதைக் கல்லாக்கிக்கொண்டான். இப்பொழுது அவன் கண்களில் துப்பாக்கி முனையும், அவனுடைய இலக்கும் மட்டும்தான் தெரிந்தன. துப்பாக்கியின் விசையை சுட்டுவிரல் அழுத்தியது.**

திருக்கோணமலையில் சீலனின் தாயாரும் சகோதரர்களும் வாழ்ந்து வந்தனர். என்றைக்கும் அவர்களைப் பீடித்திருந்த வறுமை அவர்களைவிட்டுப் போய்விடவில்லை. தந்தையார் லூக்காசும் காலமாகிவிட்டார். போதாக்குறைக்கு அடிக்கடி பொலிசார்வந்து விசாரணை செய்துபோவர். அதனால் திருக்கோணமலை காவல்துறையில் இருந்த பொலிசார் அனைவருக்கும் அக் குடும்பத்தையும், அதன் உறுப்பினர்களையும் நன்கு தெரியும். வீதிகளில் சீலனின் சகோதரிகள்கூட அவர்களின் கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும் ஆளாகுவதுமுண்டு.

ஒரு சந்தர்ப்பத்தில், திருக்கோணமலையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கு சீலன்தான் காரணம் என்று கூறி சீலனின் சகோதரன் இக்னேசியசை கைதுசெய்த பொலிசார் நாலாம் மாடிவரை கொண்டுசென்று சித்திரவதைசெய்து கொடுமைப்படுத்தினர். இத்தனைக்கும் இக்னேசியஸ் எதுவுமே தெரியாத அப்பாவி. இன்னும் சொல்லப்போனால் அவனது நண்பர்களில் பெரும்பான்மையானோர் சிங்களவர்கள்தான். அவர்களோடு சேர்ந்துதான் கடலுக்குச் சென்று பலவர்ண மீன்களைப் பிடித்து வளர்ப்பதற்கு விற்பனை செய்பவன். அப்படி சிங்களவர்களின் நண்பனாய் இருந்தும்கூட சீலனின் சகோதரன் என்ற காரணத்தால் அவன் சித்திரவதைக்குள்ளாக வேண்டியிருந்தது.

சீலன் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இராணுவம் திருக்கோணமலைக்குத் தொடர்புகொண்டது. இராணுவம் தொடர்பு கொண்டு செய்தி சீலனின் குடும்பத்தவர்களுக்கு வந்தடையும் முன்னரே சீலனுக்கு நடந்து முடிந்த ஆபத்து பற்றி யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவரின் மூலம் அவர்கள் குடும்பத்தவர்களுக்கு உறுதிப்படுத்தப்படாத, உத்தியோக பற்றற்ற செய்தி கொடுக்கப்பட்டது. எனவே அவனது வீட்டுக்காரர் எந்த நேரத்திலும் இராணுவம் வரலாம் என்பதை எதிர்பார்த்தபடியே காத்து நின்றனர்.

இதற்கிடையில் போராளிகள் சீலனின் வீரச்சாவு பற்றிய தகவலை வீட்டாருக்கு அறியத்தந்திருந்தனர். அன்று மாலையாகிக்கொண்டிருந்தவேளையில் திருமலைப் பொலிசார் சீலன் வீட்டிற்கு வந்திருந்தனர். அவர்கள் சீலனின் வீட்டாருக்கு இது விடயம் பற்றி எதுவுமே தெரியாது என்று நினைத்துக்கொண்டே வந்தனர். வீட்டுக்காரரும் தமக்கு எதுவும் தெரியாது என்பது போலவே நடந்துகொண்டனர்.

`சில இளைஞர்களை இராணுவம் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளது. நீங்கள் வந்து அவர்களை அடையாளம் காட்டவேண்டும். அதற்காக உங்களை நாங்கள் அழைத்துச் செல்லப்போகின்றோம். அவர்கள் பிரச்சினை இல்லாதவர்களாயின் உங்களோடு அவர்களை விட்டுவிடுவோம்' என்று சீலனின் தாயாரையும் சகோதரன் சேவியரையும் ஜீப் வண்டியில் அழைத்துச் சென்றனர். அப்பொழுது நேரம் பி.ப.மணி 4.30

முதலில் திருமலைக் கோட்டையில் அவர்களை அடைத்து வைத்திருப்பதாகக் கூறி அங்கு அழைத்துச் சென்றனர். இவர்களும் எதுவும் தெரியாதவர்கள் போலவே அவர்களோடு சென்றனர். அனுராதபுரத்தில் வைத்திருக்கின்றார்களாம் என்று கூறி அங்கு அழைத்துச் சென்றனர். அனுராதபுரம் சென்றபின்னர் யாழ்ப்பாணத்துக்குப் போகவேண்டும் என்று கூறி அழைத்துக் கொண்டு புறப்பட்டனர். சீலன் இறந்துவிட்ட செய்தியை இவர்களுக்குச் சொல்லாமல் தம்மை ஏமாற்றிக் கொண்டு அழைத்துச் செல்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில்தான் சீலனின் வித்துடல் இருக்கிறது என்பதை சீலனின் தாயாரும், சகோதரன் சேவியரும் உறுதிப்படுத்திக்கொண்டனர். வழியில் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கு வரும்பொழுதும் வண்டிகளை மாற்றி மாற்றி ஏற்றிவந்தனர். இறுதியாக அவர்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தபோது மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி ஆகிவிட்டிருந்தது. அவர்கள் முதலில் கொண்டுவரப்பட்ட இடம் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்திருந்த இராணுவமுகாமுக்கே.

இந்த இராணுவ முகாம் அந்நாளில் இராணுவ முகாமாக மட்டுமல்ல பிரசித்தி பெற்ற சித்திரவதை முகாமாகவும் விளங்கிவந்தது. சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு உதவினார்கள் என்ற பேரிலும் சிகிச்சை அளித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் கத்தோலிக்க துறவியான அருட்திரு ஆபரணம் சிங்கராயர் அ.ம.தி. வைத்தியக் கலாநிதி ஜெயக்குலராஜாவும் ஏனையோரும் கைது செய்யப்பட்டு இங்கேதான் அடைத்துவைக்கப்பட்டு விசாரணைக்குப் பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சீலனது மூத்த சகோதரி ஒருவர் திருமணமாகி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவந்தார். சீலனுக்கு நடந்துவிட்ட அவலத்தைக் கேள்விப்பட்டு அந்தச் சகோதரியின் கணவனும் அங்குவந்து சேர்ந்திருந்தனர்.

இவர்கள் யாவரையும் ஒன்றாக வைத்து புகைப்படமொன்றைக் கொடுத்து `இது சீலனின் உடல்தானா' என்று அடையாளம் கூறும்படி கேட்டனர்.

`இந்தப் படத்தைப் பார்த்து அடையாளம் கூறமுடியாதுள்ளது' என்று தாயார் உட்பட எல்லோரும் கூறிவிட்டனர்.

பின்னர் குருநகரில் அமைந்திருந்த மரியா ஹொட்டலில் அவர்கள் தங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தனர். மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சவச்சாலைக்குக் கூட்டிச்சென்று பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த சீலனின் வித்துடலைக் காண்பித்தனர்.

(தொடரும்)

## கவிதை

### மௌனங்கள் ஊமைகளல்ல

தென்றலுக்குத் தமிழ் தெரியும்.
புயலுக்குப் புரிந்தது எல்லாம்
'சிங்களம் மட்டும்' தானே?
புயலுக்கெங்கே தென்றலின் மகிமை தெரியும்?
மூலங்கள் ஒன்றானாலும்
குணங்கள் வெவ்வேறன்றோ அவைக்கு.
வீடு வீடாகச் சென்று
உறவாடும் தென்றல்.
பூகோள வடிவங்களை–
உலக உறவுகளை–
பூண்டோடு பொசுக்கும் புயல்.
வளமற்ற வாழ்வை
வசந்தமாக்குவது தென்றலன்றோ?
ஏனிந்தப் புயல் எங்களை மட்டும்
இலக்கு வைத்துத் தொடர்ந்து வீசுகிறது?
இனவெறியை முன்மொழியும்
புயலுக்குத்தான் ஏன் இந்த அவசரம்?
அந்தப் பயங்கரப் போரிரச்சல்கள்
தோய்ந்த ஓலங்கள், ஓடிவந்த
திசைகளிலேயே
வழுக்கி விழுந்து வாழ்விழந்து
சமாதிகளாகினவே,
அதற்குள்ளாகவா அவை மறந்துபோயின?
மண்ணுக்குள் மறைந்திருந்த தென்றல்
மண்ணையும் கிழித்துக்கொண்டு
வெளிவரக் காத்திருக்கிறது,
மண்ணைக் காக்கும் புயலாய்ப் புறப்பட,
தென்றலைப் புயலாக்கியது
யார் குற்றம்?
நேற்றைய புயல்
ஏரிதணலாய் விட்டுச் சென்ற வடுக்களை
மறக்கவில்லை நாமெவரும்.
நரைத்த நினைவுகளுடன்
புதுப்புயல் மையங்கொண்டு
நகர்வு கொள்ளக் காத்துக்கிடக்கிறது.
தென்றலும் தான் காத்துக்கிடக்கிறது.
இலட்சிய நிமிடங்களைக் கௌரவிப்பதற்கு.
அது மட்டுமா?

தனது தாய்மண்ணின் மார்பினிலே
புதுக் கவிதை படைத்திடவுமல்லவா
பார்த்துக்கொண்டிருக்கிறது தென்றல்.
'புத்தம்', புதிய
அக்கினிச் சுவாலைகளை
அள்ளி இறைக்க மையங்கொண்ட
அப்புயல் என்னதான் அப்படிப் புதிதாய்
பண்ணி முடிக்கப் போகின்றது?
பழையபடி எம் மண்ணில்
கல்லறைகளை விதைக்கப்போகிறதா?
தீயில் விழுந்து மடியும்
விட்டில் பூச்சிகளை யாரால் தான்
கட்டி வைக்க முடியும்?

தென்றல் மென்மையானதுதான்,
ஆனால் அதனாயுள் நித்தியமானது.
'ஈடன்' பூங்காவிலும்
இந்து வெளியிலும் அது
நாகரிகம் படைக்க வீசியது.
இனி முளைக்கும் முகாங்களிலும் வீசும்.
உலகில் நாகரிகம் வளர அத்தென்றல் வீசியது.
தமிழன் வாழ இத்தென்றல் வீசும்.
பனை மரங்கள் இப்பொழுதே
கைகளை வீசத் தொடங்கிவிட்டன.
எமது எதிர்காலத்தை இறந்தகாலமாக்கிய
புயல்களுக்கு இனி
எம் மண்ணில் இடமளியோம்.
தென்றலில் மலர்கள் மட்டுமா மலரும்?
இல்லை, இல்லை
இன்னுமொன்றும் மலரும்.
எந்தப் புயலுக்குமோர்
அந்திமப் புள்ளியுண்டு.
புவனம் மலர்ந்து கொண்டிருப்பதோ
தென்றலின் மலர்ச்சியில் தானே?

இக்கவிதை வரிப்பள்ளங்களில்
விதையுண்ட எண்ணங்களை–
மன மடிப்புக்களில் நுரைத்துக்கொண்டிருக்கும்
பதிவுகளை– பாவம் புத்தர்
புரிந்து கொள்வார்.
வார்த்தைகளிடை பள்ளத்தாக்குகளில்
முகாமிட்டிருக்கும் மௌனங்களோ
ஊமைகளல்ல.
சொற்களைகளை நீக்கினால் அவற்றுள்
சிறைப்பட்டுள்ள
மௌனமும் பேசத் தொடங்கும்.

– கந்தையா நவரேந்திரன்

# திருமணமாம் திருமணம்...!

**இம் மாதத்தில் மட்டும் இந்த உலகத்தில் நடைபெற்ற சில விசித்திரமான திருமணங்கள்...!**

## இமயமலையின் சிகரத்தில் திருமணம்



கின்னஸ் சாதனைக்காக தமிழகத்தை சேர்ந்த காதல் ஜோடி இமயமலையில் 18 ஆயிரம் அடி உயர சிகரத்தில் திருமணம் செய்து கொண்டனர். கோவையை சேர்ந்த சுகுமார் - விஜி தம்பதிகள் இமயமலையில் உள்ள 18 ஆயிரம் அடி உயர சிகரத்தில் திருமணம் செய்து சாதனை படைத்து இருக்கின்றனர். மணமகன் சுகுமார் பேட்டி அளித்த போது... "சிறு வயதில் இருந்தே பல சாதனைகளை செய்த எனக்கு, திருமணமும் வித்தியாசமாக செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. கோவையை சேர்ந்த விஜி (24) என்ற பெண்ணும், நானும் ஒருவரையொருவர் காதலித்தோம். பிறகு எனது பெற்றோர் முறைப்படி திருமணத்தை பேசி நிச்சயம் செய்தனர். பெற்றோர் சம்மதத்துடன் இமயமலையில் திருமணம் செய்ய நானும், விஜியும் முடிவு செய்தோம். இதற்காக நானும், விஜியும் மற்றும் 4 பேர்கள் சேர்ந்து கடந்த 7ம் திகதி உலகிலேயே உயரமான இமய மலைக்கு சென்றோம். நாட்டை காக்கும் வீரர்களை வணங்கி நானும், விஜியும் மோதிரம் மாற்றியும், மாலை மாற்றிக் கொண்டோம். விஜிக்கு தாலி கட்டினேன். இமயமலையில் உள்ள சிகரத்தில் திருமணம் செய்த சாதனையை கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெறச் செய்வேன். அதற்காக கின்னஸ் நிறுவனத்துக்கு தகவல் அனுப்ப உள்ளேன் என்றார்.

## நாயை மணந்த நேபாளி

மூட நம்பிக்கை என்பது எல்லா நாடுகளிலும் இருக்கின்றதுதான். அண்மையில் நேபாளத்தை சேர்ந்த 75 வயதான முதியவர் ஒருவர், நாய் ஒன்றை திருமணம் செய்துகொண்டுள்ளார். நாய் ஒன்றைத் திருமணம் செய்து கொண்டால் அதிஷ்டம் வரும் என்று நம்பிய இவர், தனது உறவினர்களை அழைத்து திருமணத்தைப் புரிந்துள்ளார். ஆனால், என்ன துரதிஷ்டமோ..! மூன்று நாட்களிலேயே அந்தப் பெண் நாய் விதவையாக வேண்டியேற்பட்டுவிட்டது. 75 வயது முதியவர் திருமணமாகி மூன்றாம் நாள் இறந்துவிட்டார். இதுதான் அவர் எதிர்பார்த்த அதிஷ்டமோ..!?

## இறந்தவரை திருமணம் செய்த பிரெஞ்சுப் பெண்

பிரான்ஸ் நீஸ் பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் இறந்தவர் ஒருவரை திருமணம் செய்துகொண்ட சம்பவம் கடந்த 10ம் திகதி இடம்பெற்றுள்ளது. 35 வயதான கிறிஸ்ரெல் டெமிச்சல் என்பவர் இறந்த தனது காதலரை திருமணம் செய்து காதலுக்கே ஒரு புது இலக்கணம் வகுத்துள்ளார். இப் பெண் எரிக் என்ற பிரெஞ்சு காவற்துறையைச் சேர்ந்தவர் விரும்பியிருந்தார். ஆனால், கடந்த 2002ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடந்த விபத்து ஒன்றில் இருவரும் சிக்குண்டனர். பாரவண்டியினால் தாக்கப்பட்டு காதலன் பலியானார், வயிற்றில் குழந்தையுடன் இருந்த இவர், குழந்தை இறந்தபோது உயிர்தப்பியிருந்தார். இந்நிலையில் தன்னை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று உறுதியோடு இருந்த காதலனின் ஆசையை நிறைவேற்ற முடிவு செய்தாள். உயிருடன் இருக்கும் இருவரே தமது மனப்பூர்வமான சம்மதங்களுடன் திருமணம் செய்துகொள்ள முடியும். பிரெஞ்சு நாட்டில் உள்ள சட்டத்தில் காதலர்களில் ஒருவர் இறப்பதற்கு முன்னால் திருமணம் செய்துகொள்ள விரும்பியிருந்தால் அவர்கள் திருமணம் செய்துகொள்ளவதற்கான ஒரு விசேட அனுமதியிருக்கின்றது. இத் திருமணத்திற்கு பிரெஞ்சு ஜனாதிபதி ஜக் சிராக் விசேட அனுமதியை வழங்கினார். அதனைப் பயன்படுத்தி தனது காதலனின் ஆசையை நிறைவேற்றிக்கொண்டாள். திருமணத்தின் போது தனது உறவினர்களுடன் மணமகள் கறுப்புநிற உடை அணிந்து வந்திருந்தாள். இந்நிகழ்வு அப்பகுதி மக்களை நெகிழவைத்த சம்பவமாக இருந்துள்ளது.

## பலசும் பத்தும்

## தண்ணீருக்கு அடியில் திருமணம்

தாய்லாந்து நாட்டின் தெற்கு மாகாணத்தில் உள்ள ட்ராங்க் எனும் பகுதியில் 45 ஜோடிகள் தண்ணீருக்கு அடியில் திருமணம் செய்துகொண்டுள்ளனர். கடந்த 14ம் திகதி காதலர் தினத்தன்று இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்நிகழ்வு இப்பகுதியில் நடைபெற்று வந்த போதும் இம்முறையே இவ்வளவு அதிகமானவர்கள் தண்ணீருக்கு அடியில் திருமணம் செய்துகொண்டுள்ளனர். இத் திருமணத்தை பார்வையிடுவதற்காக இலட்சக்கணக்கான மக்கள் இப்பகுதியில் குவிந்திருந்தனர்.



பிரேசிலில் தற்போது அமோகமாக விற்பனையாகும் சில முகமூடிகள் இவை. பாடசாலை மாணவர்கள் இதனை விரும்பி வாங்கி அணிந்துசெல்வதால் பெருமளவான பின் லேடன், சதாம், புஷ் முகமூடிகள் விற்பனையாவதாக கூறப்படுகிறது.

### இணைய வலையில் சிக்கியது



**இவ்வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும்** செல்வன் தோமஸ் பிறயன், செல்வன் கெங்காதரன் சாரங்கன் **ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவெனக் குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.**

## குறுங்கதை

### சக்கை



எலும்பும் தோலுமாய்க் கிழட்டுப்
பசு ஒதுக்குப் புறத்தில்
கவனிப்பாரற்றுப் படுத்திருந்ததை
வெள்ளாடு கவலையோடு
நோக்கியது.
பசுவைப் பார்த்து, 'முன்பெல்லாம்
உன்னை வீட்டுக்காரன் நாள்
தவறாமல் குளிப்பாட்டுவானே -
புல்லும் வைக்கோலும் போட்டுத்
தடவிக் கொடுப்பானே - இப்போது திரும்பிக்கூடப்
பார்ப்பதில்லையே - ஏன்?' என்று கேட்டது ஆடு.
பசு பெருமூச்சு விட்டது.
'பயனில்லை - அதனால் பார்ப்பதில்லை' என்றது பசு.
சுருக்கமாக அது சொன்னது:
'மடியில் பாலும் இல்லை
மதிக்க ஆளும் இல்லை'

*- காசி ஆனந்தன்.*

## அறிந்து கொள்ளுங்கள்

### முசோலினி:

பாசிசம் என்ற கருத்தை விதைத்தவர். இவர் ஒரு சர்வாதிகாரி. இரண்டாம் உலக போருக்குக் காரணமானவர். அரசு எதைச் செய்தாலும் மக்கள் அதை எதிர்த்தல் கூடாது என்பதுதான் பாசிசம். இதனை நிறுவியவர் முசோலினி. இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக 21 ஆண்டுகள் இருந்தவர். இத்தாலியில், டோவியா என்ற கிராமத்தில் பிறந்தவர்.

காலம் 1883-1945. சிறிது காலம் ஆசிரியப் பணி செய்தார். 1902 ஸ்விஸ் நாட்டில் கூலி வேலையும் செய்தார். திரும்பி வந்து எழுத்தாளர் ஆனார். முதல் உலக யுத்தத்தை ஆதரித்தார். 1915-இல் இராணுவத்தில் சேர்ந்தார். 1919 -இல் பிரதமர் ஆனார். இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் -ஜெர்மனியுடன் கூட்டு சேர்ந்தார். தூக்கில் இடப்பட்டு 1945-இல் கொல்லப்பட்டார்.

## பொன் மொழிகள்

* நமது செலவுகள் அத்தனையும் ஆடம்பரத்துக்குப் போகின்றன. உணவுக்கு நாம் கடன் வாங்க ஓடுகிறோம்.

*- எமர்சன் -*

* ஒவ்வொரு மனிதனும் நீண்ட காலம் வாழ ஆசைப்படுகிறான். ஆனால் கிழவயதில் இருக்க யாரும் ஆசைப்படுவதில்லை.

*- ஸ்பீல்ட் -*

* முன்பெல்லாம் இலக்கியம் கலையாகவும் வருமானம் வியாபாரமாகவும் இருந்தன. இப்போது எதிரிடையாக இலக்கியம் வியாபாரமாகவும் வருமானம் கலையாகவும் உள்ளன.


*- ரூக்ஸ் -*

* வாழ்க்கை என்பது ஒரு வியாதி, ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் என்ன வித்தியாசம் என்றால் அந்த வியாதியால் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டு அவன் வாழ்கிறான் என்பதே ஆகும்.

*- பெர்னாட்ஷா -*

* அறிவும் புத்தியும் மிக்க வகுப்பினரால் ஆயிரம் ஆண்டு காலத்தில் அவர்களது படிப்பையும் அறிவையும் கொண்டு மிகச் சிறப்பாக தொகுக்கப்பட்டதே நூலகம்.

*- எபர்சன் -*



# சிறுவர் முற்றம்

## ஆத்திசூடிக் கதைகள்

### தூங்காமல் தூங்கு

தூக்கம் மனிதனுக்கு இறைவன் கொடுத்த வரம். பகல் முழுவதும் உழைத்துப் பாடுபட்டுக் களைத்தவனுக்கு, வேறு எதுவும் வேலை செய்யவிடாமல் இயற்கை இருளைக்கொண்டு தடைவிதித்தது (இன்றைய நிலை வேறு) நித்திரை எனும் சுகம்தான், அவனுக்கு மறுநாள் உழைப்புக்காகப் புத்துயிர் கொடுக்கிறது.

உழைக்கும் மனிதன் கட்டாந்தரையில்கூட நிம்மதியாகத் தூங்குவான். அவனுக்குக் கோரைப் பாய்கூட வேண்டாம். தலைக்கு அணையாகக் கையே போதும்.

ஆனால் அவனுக்கு அந்த நேரத்தில், உழைத்துக் களைத்துத் தூங்கப்போகும் நேரத்தில் - போதிக்க வேண்டிய நீதியே வேறு. 'களைப்பால் ஆழ்ந்த நித்திரை வரும், உண்மைதான். அதற்காக மனிதன் மரக்கட்டை போலத் தூங்கக்கூடாது. தூங்கும்போதுகூட விழிப்புணர்ச்சி வேண்டும். இரவு நேரத்தில் எந்த ஆபத்தும் வரலாம். அதனால் எச்சரிக்கையுடன் தூங்க வேண்டும். சிறு ஒலி, சிறு நிகழ்ச்சி அருகில் நடந்தால் கூட விழித்துக்கொள்ள வேண்டும்' என்றுதான் அவ்வையாரும் கூறுகிறார்.

இலவம் பஞ்சு மென்மையானது. தூங்கும் மனிதன் எச்சரிக்கையோடு மென்மையான தூக்கம் கொள்ள வேண்டும். பிணம் போலத் தூங்கக்கூடாது. எவ்வளவு களைத்துத் தூங்கினாலும் சிறு ஒலி கேட்டாலும் எழுந்துவிடவேண்டும். சுகமான தூக்கத்திற்கு இலவம் பஞ்சு இதமானது. ஆகவே அவ்வைப் பிராட்டி,

இலவம் பஞ்சில் துயில் என்றார்.

## தகவல் முற்றம்

### முதல் குளோனிங் 'மான்'

படங்களை, எழுத்துகளை நகலெடுக்கும் (XEROX) முறையைப் போல உயிரினங்களை நகலெடுக்கும் முறைக்குப் பெயர் குளோனிங் குளோனிங் முறையில் முதன் முதலில் 'போலி' என்ற செம்மறி ஆடு உருவாக்கப்பட்டது. அதன் பிறகு எலி, குரங்கு என பல்வேறு உயிரினங்களை உருவாக்கி, தற்போது மனிதனை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள்.

அதன் ஒரு தொடர்ச்சியாக குளோனிங் முறையில் உலகின் முதலாவது மான் குட்டியை டெக்சாஸ் ஏ அண்ட்பி பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். குளோனிங் மான் வெள்ளை நிற வாலைக் கொண்ட மான்



வகையைச் சேர்ந்தது. அதற்கு தேவி என்று பெயரிடப் பட்டுள்ளது என்று திட்டத்துக்கு தலைமை தாங்கிய பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் மார்க் வெஸ்துஸின் தெரிவித்தார்.

முதலாவது குளோனிங் மான் குட்டி உருவாக்கத்தில் கிடைத்துள்ள வெற்றி, அழிந்து வரும் அரிய வகை மான் இனங்களைக் காப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று கருதப்படுகிறது.



#### அதிசய மாணவன்

உலகிலேயே மிகச் சிறந்த மாணவர், அதிசய மாணவர் என்கிற பெருமையை ஜப்பானைச் சேர்ந்த ஷாயோனே என்பவர் தட்டிச் சென்றுள்ளார். இவர் ஏழு வயதில் உயர்நிலைப்பள்ளி படிப்பை முடித்துவிட்டு ஒன்பதாவது வயதில் சிகாகோவின் லயோலா கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து விட்டார்.

இப்பொழுது சிகாகோவின் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறையில் டாக்டர் பட்டத்துக்காக படித்துவருகிறார். இந்த அதிசய மாணவருக்கு தற்போது வயது பன்னிரெண்டு.

## கவிதை முற்றம்




தமிழர்க் கணியாம் திருக்குறளைத்
தந்த பெரியார் வள்ளுவராம்!
அமுதும் கூடத் திகட்டிடுமாம்
ஆனால் குறளோ திகட்டாதாம்!

அறமும் பொருளும் இன்பமுமாய்
அமைந்த நூலாம் திருக்குறளில்
திறமை சேர்ந்தால் வாழ்வினிலே
சிறக்க வாழ்வோம் உண்மையிலே!

கற்கும் நூலைக் கசடறவே
கற்கும் வழியும் கற்றதன்பின்
நிற்கும் நெறியும் தமிழினிலே
நேராய்ச் சொன்னார் வள்ளுவராம்!

அன்பும் பண்பும் சேர்ந்திட்ட
அமைதி வாழ்க்கை வேண்டுமெனில்
நன்றாய்க் குறளைப் படித்திடுவீர்!

நாளும் அதுபோல் நடந்திடுவீர்!
குறளை மட்டும் கற்றாலே
கோடி நன்மை கிட்டிடுமாம்!
இறவா வாழ்வைத் தமிழுக்கு
இதனால் தந்தார் வள்ளுவராம்!

நாளும் குறளைப் படித்திடுவீர்!

நலிவைப் போக்கி வாழ்ந்திடுவீர்!
ஆளும் அரசின் பெருமையெலாம்
அடக்கம் குறளில் உணர்வீரே!

# ஒரு குடம் பாலும் துளித்துளியாய் நஞ்சும்

## - கம்பவாரிதி அருளும் உபதேசம் -

**தற்போது கொழும்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் கம்பன் கழக, கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் கடந்த 4 –10, யூன் 2004 திகதி கொழும்பில் இருந்து வெளிவரும் சுடர்ஒளி பத்திரிகையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் குறித்து காழ்ப்புணர்ச்சியுடன் எழுதியிருந்த நீண்ட கட்டுரையின் எதிர்வினையாக எமக்குக் கிடைத்திருக்கும் இக் கட்டுரையை இங்கு பிரசுரம் செய்கின்றோம்.**

ஈழத்தின் இலக்கிய சஞ்சிகைகளில் ஒன்றான மல்லிகையில்தான் இந்தக் கம்பவாரிதி ஜெயராஜ் என்பவரின் வாராதே! வரவல்லாய்?.. என்ற புலம்பெயர்ந்தோருக்கான அறிவுரைக் கட்டுரை முதலில் வெளிவந்திருக்கின்றது. (மல்லிகை ஜீவா கம்பவாரிதியுடன் இணையும் இந்தப்புள்ளி ஆச்சரியம் தருகின்றது. தற்போதைய சந்திரிகா–வீரவன்ச கூட்டுப்போல்) பின்னர் 2004 ஜன.04-10 என திகதியிடப்பட்ட சுடர் ஒளி என்னும் வார இதழ் அதனை மறுபிரசுரம் செய்துள்ளது. மறு பிரசுரத்தின் நோக்கம் எதுவானாலும் அனுமானின் வால் போல் இரண்டு பக்கம் வரையில் நீண்டு செல்லும் இக் கட்டுரை தாயகத்திற்கு வெளியே 1980களின் பின் வாழத் தலைப்பட்ட ஈழத்தமிழ் பேசும் மக்களின் வாழ்வியல் கோலங்களை இகழ்ந்து பேச முற்பட்டுள்ளது என்பது மட்டும் அதில் துலக்கமாகத் தெரிகின்றது. (சத்தியமாய் சொல்கிறேன் உங்களை இழிவுபடுத்த நான் இக்கட்டுரையைத் எழுதவில்லை என்ற வாக்குமூலத்தையும் மறக்காமல் கட்டுரையாளர் பதிவு செய்துள்ளமை அவரது உள் நோக்கத்தை உறுதிப்படுத்துகின்றது)

தன்னை ஆத்மீகவாதி என்றும், இலண்டன் கனடாவுக்கு சென்றுவந்தவரென்றும், (இந்த நாடுகளுக்குச் சென்றுமீள உதவியவர்களுக்கு –தேசம்கடந்தும் நேசங்கடவா நெஞ்சங்கள்– என்ற தொப்பியும் அவரால் வழங்கப்பட்டுள்ளது) ஆன்றவிந்தடங்கிய கொள்கைப் பெரியோன் என்றும் தன்னிலை விளக்கம் கூறி, புலம்பெயர்ந்து வாழும் அற்பர்களுக்கான அறிவுரைகளை மன்னிக்க வேண்டும் அருள்வாக்குகளை கட்டுரை முழுவதும் அருளியுள்ளார் கம்பவாரிதி ஜெயராஜ். கம்பவாரிதி என்பது கம்பராமாயணம் என்னும் இலக்கியத் தடாகத்தில் மூழ்கித் திளைத்தவன் என்றும் அர்த்தம் கொள்ளலாம். மேலும் அதனைச் சுருக்கமாக, கம்பவாரிசு என்றும் எடுத்துக் கொள்ளலாம். (இதனால் அவரது மனம் மகிழ்ந்தால் அடியேன் பாக்கியசாலிதான். சாது ஒருவரைத் திருப்திப்படுத்திய, சாந்திப்படுத்திய பேறு எனக்குக் கிட்டட்டும்) இந்தக் கம்பவாரிசு என்ற முன்னொட்டுத்தான் அவருக்குப் பொருத்தம் என்பது என் தாழ்மையான கருத்து. ஏன் என்பதைப் பின்னர் கூறுவேன். (உண்மையில் சங்க இலக்கியம் தொட்டு நிற்கும் தமிழிலக்கியப் பரப்பை பெருங்கடலெனக் கொண்டால் இராமாயணம் ஒரு குளம் குட்டை அளவே இருக்கக் கூடும். அதற்காக, கம்பராமாயணத்தை மட்டுமே உருப்போடும் கம்பவாரிதியை ஒரு குட்டையில் ஊறிய மட்டை எனக் கூறுவது அபச்சாரமாகும்)

வடமொழியில் வான்மீகியால் எழுதப்பட்டதான இராம காதையைத் தழுவி தமிழில் கம்பனால் எழுதப்பட்டது தான் கம்பராமாயணம் என்பதை நாம் அறிவோம். ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டின் பின்னால் தமிழில் எழுதப்பட்டதான இக்காப்பியம் இலங்கை மன்னனான வெற்றியை உடைய இராவணனை வெற்றி கொண்ட திருமாலாகிய இராமனது வீரத்தை விளக்கிச் சொல்கின்றது என்பதைப் படித்தவர்கள் அறிவர். ஆனால் இந்த இராமாயணம் தமிழ் மக்களை அரக்கரென இழிவுபடுத்துகிறது அவமானப்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டும் விளக்கமும் அறிஞர்களால், சமூக சிந்தனையாளர்களால் முன்வைக்கப்படுவதையும் நாம் மறந்துவிடுதல் கூடாது. அதனால் இதற்கு மறுப்பாக, புலவர் குழந்தை அவர்களால் இராவணகாவியம் எழுதப்பட்டதும் சமூக விரோத இலக்கியமாக அடையாளம் காணப்பட்ட இராமாயணம் தீயிட்டு கொளுத்தப்படவேண்டுமென்ற முழக்கங்கள் முன்வைக்கப்பட்டதும் ஒரு அரை நூற்றாண்டுக்கு உட்பட்ட நிகழ்வுகளாகும். இராமாயணத்தின் உள்ளடக்கம் தமிழர் விரோதம் அல்லது சமூக விரோதம் கொண்டதாக இருக்கும் அதேவேளையில் இராமாயணத்தைத் தழுவி, தமிழில் கம்பனால் எழுதப்பட்டதான கம்பராமாயணம் காமரசம் ததும்பியது பாலியல் கிளர்ச்சி ஊட்டுவது என்ற குற்றச்சாட்டும் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. அதிலும் தனது காவிய நாயகியான சீதையின் உறுப்புகளான அல்குல் (பெண்குறி), கொங்கை, தொடை பற்றியெல்லாம் காமரசம் சொட்டச் சொட்ட கம்பன் வர்ணனை செய்துள்ளான். இதனால் கம்பன் ஒரு வம்பன் என்ற வழக்காறும் தமிழில் புழக்கத்தில் உள்ளதை நாம் நினைவில் கொள்ளலாம். காவிய நாயகியான சீதை சிறைவைக்கப்பட்ட அசோகவனத்தில் இருந்த வண்ணம் துயருற்று அழுத கண்ணீர் எவ்வகையாக வடிந்து செல்கின்றது என்பதைக் கம்பன் வர்ணிப்பதிலும், காட்டுக்கு அனுப்பப்பட்ட இராமனும் குழுவினரும் குகனின் உதவியுடன் படகில் ஆற்றைக் கடக்கையில் தண்ணீர்த் திவலைகளால் ஆடை நனைந்த பெண்களை வர்ணிப்பதிலும், சீதையின் அல்குலின் அளவை பாம்பின் படத்துடன் ஒப்பிடுகையிலும் (இன்னும் பல கட்டங்களைச் சுட்டிக்காட்டலாம்) கம்பன் ஒரு வம்பன் என்பது நிரூபணமாகும். இப்படிக் கம்பன் ஒரு வம்பன் என்னும் போது கம்பவாரிதி வம்பவாரியாவதும் அல்லது கம்பவாரிசு வம்பவாரிசாவதும் ஆச்சரியமில்லை. அதிலும் கட்டுக்குடும்பியும் காவியும் தரித்த ஜெயராஜ் வாராதே வரவல்லாய் கட்டுரையில் தன்னை வம்பவாரிசு என நிறுவிக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளார்.

தான் எழுதும் கட்டுரையைப் படிப்பதற்கான ஆர்வத்தை தூண்டுகின்றேன் என்று ஒருவகை கண்ணாம்பூச்சி ஆட்டத்துடன் கட்டுரையை ஆரம்பிக்கும் ஜெயராஜ், 'முதலில் புலம்பெயர்ந்தோர் தமது தமிழ்மொழியை மறந்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டை `தமிழ் இன்னும் ஞாபகத்தில் இருக்கின்றதா?' எனக்கேட்டு இளக்காரமாக முன்வைக்க முயல்கின்றார். அதற்கு உதாரணமாக அவர் கூறியுள்ள கதையை கேளுங்கள்.

`அண்மையில் சுவிஸிலிருந்து வந்திருந்த என் அக்காவின் பேரன் தன் மாமனைப் பார்த்து கேட்டானே ஒரு கேள்வி. ஊரே சிரித்துவிட்டது போங்கள். தன் அன்புப் பேரனுக்கு என் அக்கா ஆசையாசையாய் ஆனை வாழைப் பழம் வாங்கிக் கொடுக்க, அவன் அதைத் தின்னும் அவதியில், குளிக்கத் தயாராய் துண்டோடு கிணற்றடியில் நின்ற தன் மாமனிடம் கொண்டோடிப்போய் பிளீஸ் அங்கிள் வாழைப்பழத்தை ஒருக்கா கழட்டித்தாங்கோ

**அந்தக் குழந்தையும் கதையும் கம்பவாரிதியினால் வம்புத்தனத்திற்காக காமரசத்திற்காக இட்டுக்கட்டியது என்றே துணிந்து கூறலாம்.**

என்று கேட்க, எங்கோ பார்த்துக் கொண்டிருந்த அந்த மாமன் அக்கேள்வியால் பதறியடித்து இடுப்பில் இருந்த துண்டை இறுகப் பொத்திய காட்சி கண்டு எங்கள் ஊரே சிரித்தது. வாழைப்பழத்தை உரித்து தாருங்கள் என்பதற்கு பதிலாக கழட்டித்தாருங்கள் என்கிறது ஈழத்தமிழினத்தின் பொறின் வாரிசு'

குழந்தையின் மழலைக் கூற்றிலும் வம்பு எண்ணந்தான் மேலெழுகின்றது கம்பவாரிசுக்கு. தனது மனவக்கிரத்தை மற்றவர்களிலும் தொற்ற வைக்கின்றார் ஆத்மீகவாதியான வம்பவாரிசு. அவர் கூறிய உதாரணத்திற்கும் புலம்பெயர்ந்த சமுகக் குழந்தையின் தமிழ் அறிவிற்கும் என்ன சம்பந்தம் என்றே புரியவில்லை. பாவம் அவர் மழலை மொழியை கேட்டதில்லைப்போலும். அந்தப் பேரக்குழந்தைக்கு கழட்டித்தாருங்கள் என்ற ஒரு தமிழ் வினைச்சொல் தெரிந்திருக்கின்றது. சிரிக்கவும் சுவைக்கவும் கூடியதான குழந்தைகளின் மழலைப் பேச்சுக்கள் ஏராளம் உண்டு. பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் குழந்தைகளின் மழலைபற்றி ஆய்வு செய்திருக்கிறார் என்பதெல்லாம் கட்டுரையாளர் அறிந்திருக்க மாட்டார். ஆகக் குறைந்தது வள்ளுவனின் குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் என்ற குறளைத் தன்னும் அவர் அறிந்திருந்தால் இப்படி எழுதியிருக்கார். அதனைவிட உலக அறிவிலும் கிணற்றுத் தவளைதான் (இராமாயணம் குட்டை என்பதால் குட்டைத் தவளை என்பதும் அவருக்கு பொருந்தலாம்) என்பதை கட்டுரை முழுவதிலும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். இக் கட்டுரையைத் தொடர்ந்து படிக்கையில் அதனைப் புரிந்து கொள்வீர்கள். அதற்கு முன் மழலை மொழி புரியாமல் ஜெயராஜ் கூறிய கதையில் சுவிசில் இருந்து வந்த அந்தக் குழந்தை பிளீஸ் அங்கிள் என்று ஆங்கிலம் பேசியதாம். சுவிசில் வழக்கில் உள்ள மூன்று மொழிகளில் ஆங்கிலம் உட்படவில்லை என்பதுடன் அக் குழந்தை சுவிசின் எந்தப் பகுதியில் வாழ்ந்ததோ அந்த மொழிச்சொற்களைத்தான் தமிழுடன் கலந்திருக்கும் அதுதான் இயல்பாக இருந்திருக்கும் என்பதோ அவருக்கு புரிந்திருக்காது. அந்தக் குழந்தையும் கதையும் கம்பவாரிதியினால் வம்புத்தனத்திற்காக காமரசத்திற்காக இட்டுக்கட்டியது என்றே துணிந்து கூறலாம்.

இவருடைய வம்புத்தனத்திற்கு மேலும் சிலவற்றை இங்கே எடுத்துக்காட்டலாம். அவரின் கூற்றுக்களைப் படியுங்கள்.

`கூலி வேலை செய்யும் இடத்தில் வெள்ளைக்கார எஜமான்களிடம் நல்ல பெயர் வாங்க தலைமயிரை மட்டுமன்றி கால்மயிரையும் மழித்துக் கொள்கின்றனர் நம்காரிகையர்'

`பதின்மூன்று வயதான பருவ எல்லையில் நிற்கும் உங்கள் பாலகியின் பட்டராலும் சீசாலும் கொழுத்துக் கிடக்கும் தொடையின் முக்கால் பாகம் தெரியும் காற்சட்டை போட்டாகிவிட்டதா?'

கம்பவாரிதியின் காமப்பார்வை மன்னிக்க வேண்டும் அருள்பார்வை எவ்விடங்களைத் துழாவுகின்றது, மேய்கின்றது என்று தெரிகின்றதல்லவா? இப்போது ஜெயராஜை நான் ஏன் வம்பவாரிசு என விளிக்க முனைந்தேன் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

ஜெயராஜின் கட்டுரையில் எள்ளல் மொழியில் இகழப்படும் விடயங்கள் என்னவென்றால் புலம்பெயர்ந்த தமிழர் மொழியை, பண்பாட்டை, மரபை மறந்து செல்கின்றனர் என்பதும், அவர்கள் போலியான பணப்பகட்டு காட்டுகிறார்கள் என்பதும்தான். `சும்மா சொல்லக் கூடாதையா, அங்கிருந்து நீங்கள் ஆடின ஆட்டத்தில் இங்க எங்கட ஆணிவேரே ஆடிப்போனது உண்மையிலும் உண்மை' என்னும் அவருடைய கண்ணோட்டத்தில் நியாயம் இருக்கக்கூடும். ஆனால் அவரது சொல்லல் முறையும், பயன்படுத்திய மொழியும், தகவல் தரவுகளும், அவருடைய ஆலோசனைகளும் மிகவும் நயவஞ்சகமானது நஞ்சூட்டப்பட்டது. புலம்பெயர்ந்த சமூகம் பற்றிய ஆய்வுகளும் விமர்சனங்களும் சமூக ஆர்வலர்களால் ஆய்வாளர்களால் தொடர்ந்தும் இங்கே ஊடகங்களில் ஆரோக்கியமான முறையில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. நோய்க்கு வைத்தியம் செய்ய மருத்துவ படிப்பு வேண்டும். அனுபவப் பயிற்சி வேண்டும். அதேபோல்தான் சமூக நோய்க்கு ஆலோசனை சொல்ல சமூகப் அக்கறை வேண்டும் அனுபவப் பயிற்சி வேண்டும். நோய்க்கூறு கொண்ட நோயாளியை மருத்துவர் இகழ்ச்சியுடன் அருவருப்புடன் அணுகமுடியாது. இது தொழில்சார் விழுமியம் சார்ந்தது. அறம் சார்ந்தது. கட்டுரையாளர் கம்பவாரிதிக்கு சமூகம், சமூகவியல் பற்றியோ வரலாறு பற்றியோ எதுவும் தெரிந்திருக்கவில்லை. அறமும் அவரிடமில்லை (இத்தனைக்கும் அவர் ஆத்மீகவாதியாம்?). அதனால்தான் தனது இராமாயணக் குட்டையின் எல்லைதாண்டி, வரம்புமீறி வம்பும் வக்கணையுமாக சொற்களை உதிர்க்க முடிந்திருக்கின்றது. சமூகத்தை எள்ளி நகையாட முடிந்திருக்கின்றது.

இலங்கைத் தமிழரின் புலப்பெயர்வு கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் முற்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த மலேசிய புலப்பெயர்வுதான் யாழ்ப்பாணத்தின் (கம்பவாரிதியின் மொழியில் செம்பாட்டு மண்ணில் பிறந்து..) கடல்தாண்டி வாழத் தலைப்பட்ட முதல் நிகழ்வாகும். (செம்பாட்டுமண் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூன்றிலொரு பங்கும் இல்லாதது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்) அதற்கடுத்து இலங்கை சுதந்திரமடைந்ததன் பின் யாழ்ப்பாண மேட்டுக் குடியினர் படிப்பிற்காகக் சென்று இலண்டன் கனவை உருவாக்கிய பயணமாகும். இதற்குப்பின் 1960களின் பிற்பகுதியில் எண்ணெய் வளநாடுகள் நோக்கிய செல்வம் தேடும் பயணமும் புலப்பெயர்வும் நிகழ்கின்றது. அதற்கும் பின்னர்தான் மிகப்பெரிய அளவினதாக 1980 களில் நிகழ்ந்த தற்போதைய (ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா) புலப்பெயர்வு தொடங்கியது. இப்புலப்பெயர்வுக்குப் போரும் பொருளாதாரமும் முக்கிய காரணங்கள் என்பது மறுக்க முடியாதது. முன்னைய புலப்பெயர்வுகள்

(மலேசியா, இங்கிலாந்து, மத்தியகிழக்கு) தனியே பொருளாதாரக் காரணியை கொண்டவை. பின்னையதான புலப்பெயர்வுதான் கம்பவாரிதி ஜெயராஜ்க்கு உறுத்தலாக இருக்கின்றது. ஏனெனில் இந்தப் புலப்பெயர்வில் இடம்பெற்றவர்களில் பெரும்பான்மையினர் சாதாரணர்கள், சாமானியர்கள், பாமரர்கள் ஆம் சூத்திரர்கள். (கட்டுரையாளரின் மொழியில் பிளேன் ரீ க்கும் வழியற்றவர்கள் உ-ம்: `பிளேள் ரீக்கும் வழியில்லாமல் காய்ந்து திரிந்த உங்கள் தோற்றத்தில் கோர்ட்டாலும், சூட்டாலும், ரையாலும் ராஜகளையே வந்துவிட்டது')

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதாரத்தை முன்னரே மணியோடர் பொருளாதாரமென கம்யூனிஸ்ட் கட்சியினர் (மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உட்பட) அரசியல் நையாண்டி செய்வதுண்டு. இதற்குக் காரணம் கடல் கடந்தவர்களும், குடாநாட்டுக்கு வெளியே அரச உத்தியோகங்களுக்குச் சென்றவர்களும் அனுப்புகின்ற பணவரத்தால்தான் யாழ்ப்பாணம் உயிர் வாழ்கின்றது என்பதையும், அதற்கு வேறெந்த அடிப்படைப் பொருளாதார வளமும் இல்லை என்பதையும் சுட்டடிக்காட்டத்தான். இதில் உண்மையும் இருக்கக் கூடும். எனது பிரச்சனை அதுவல்ல. அவ்வேளையில் குடாநாட்டுக்கு வெளியே புலம்பெயர்ந்தவர்கள் மணியோடர் அனுப்பியதுடன் மட்டுமல்லாது ஊர்வருகையில் காட்டிய பணப்பவிசையும் போலிப் பெருமையையும் கலாச்சாரச் சீரழிவையும் கம்பவாரிதிக்கு சுட்டிக்காட்டத்தான். அறுபதுகளில் இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்த சுந்தரின் புகழ்பெற்ற கேலிச் சிந்திரங்களான சவாரித்தம்பர், மைனர் மச்சான், மிஸ்டர் அன்ட் மிஸிஸ், டாமோடரன் போன்றதான தொடர்களை பார்த்திருந்தால் - படித்திருந்தால் கம்பவாரிதி கருதும் மொழி, பண்பாட்டு சீரழிவுகள். எப்போது தொடங்கியது யாரால் தொடங்கப்பட்டது என்பது தெரியவந்திருக்கும். அத்துடன் அக்காலத்தில் நித்திகனகரெத்தினத்தினால் பாடப்பட்ட துள்ளலிசைப் (பொப்பிசை) பாடல்களைத்தன்னும் கம்பவாரிதி கேட்டிருப்பாரானால் இன்றைய் புலம்பெயர்வையும் புலம்பெயாந்தோரையும் பற்றி இவ்வகை அழுக்கான கட்டுரையை அவர் எழுதியிருக்க மாட்டார். கடந்த கால்நூற்றாண்டுக் காலத்துக்குள் புலம்பெயர்ந்தோரின் தமிழ்மொழிப் பரிச்சயம் பற்றிக் கவலைகொண்டவருக்கு கொழும்பு ரமிலர் பற்றியோ கறுவாக்காட்டு ரமிலர் பற்றியோ அறியாமல் போனதும் ஆச்சரியம்தான் (அதற்குள் அவர் சங்கமித்து விட்டது காரணமாகலாம்). 1977ம் ஆண்டு இனக்கலவரத்தில் அடிபட்டு கொழும்பில் இருந்து லங்காராணி கப்பலில் பார்மேனியன் நாய்களுடன் வந்திறங்கிய கொழும்புவாழ் பெருங்குடி ரமிலர்களின் ரமில் கேட்டு ரமில் ராய் வடித்த கண்ணீர் கம்பவாரிதி கண்டதில்லைப் போலும்.

மலேசியப் புலப்பெயர்வினால் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் சாட்சியத்தை காரைபெயர்ந்து கிடக்கும் நாற்சார் வீடுகளில் இன்றைக்கும் காணலாம். தெல்லிப்பளை, மல்லாகம், உடுவில், மானிப்பாய், வட்டுக்கோட்டை, உரும்பியராய் பகுதிகளில் அப்போது பணப்பவிசுடன் கட்டிய உருக்குலைந்து கிடக்கும் வீடுகள் அந்தக்கதையைச் சொல்லும். இலண்டன் சீமைக்குச் சென்றவர்கள் இலண்டன் மாப்பிளை தேடி விரதமிருந்த குமர்களை கைப்பிடித்து செல்வதற்கு வந்துசென்ற வேளைகளில் அவர்கள் காட்டிய பவிசுகள் கொஞ்சமா?. அவர்கள் வீட்டுக் கொண்டாட்டங்கள், அவர்கள் அணிந்து காட்டிய கையில்லாத பிளவுசுகள், தொப்புள் காட்ட கட்டிய சேலைகள், அலங்காரங்கள் கொஞ்சமா? அன்றைக்கு அந்தச் சாதாரணர்கள் வாய்பிளந்து, இந்த பணக் கொழுப்புகளின் ஆட்டங்களைக் கண்டு முகஞ்சுழித்து நின்றதெல்லாம் அவர் அறிந்ததில்லைப் போலும். அவ்வேளைகளில் கம்பவாரிதி கம்பனடிப்பொடி கணேசனின் செருப்பைத் தலையில் சுமந்து திரிவதில் சுகம் கண்டிருப்பார் (இராமனின் பாதரட்சையை பரதன் சுமந்தானல்லவா அந்த நினைப்பு). சிலவேளை தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் காலில் சாஸ்டாங்கமாய் விழுந்து கம்பராமாயண கலாச்சாரத்தை அல்லது கந்தபுராணக் கலாச்சாரத்தைக் கற்றுக் கொண்டிருந்திருப்பார். (1981ம் ஆண்டில் ஜெயராஜ் மதுரையில் ஒரு அரசியல்வாதியின் காலில் விழுந்த அசிங்கம் பற்றி அப்போதைய தினபதி ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகத்தின் கட்டுரையை படித்தவர்கள் ஞாபகம் வைத்திருக்கலாம்).

வாடிய பயிர் கண்டு வாடினேன் என்ற வள்ளலாரையும் விஞ்சிவிடும் தனது நோக்கத்தையும் வம்பவாரிசு கச்சிதமாகக் கட்டுரையில் வெளிப்படுத்தியிருக்கிறார். `எற்புத்துளைதொறும் லண்டன் குளிரில் பரமசிவனுக்கு பச்சைத்தண்ணீரில் அபிஷேகம் நடக்கிறது' என்ற கவலையையும், `வெறும்மேலை, பனிக்குளிரும், பச்சைத் தண்ணீர்க் குளிரும் சேர்ந்து தாக்க நடுநடுங்கிக் கொண்டிருக்கிறார் பரமன்' என்ற பச்சாதாபத்தையும் வெளியிட்டு குணம்குறியற்ற பரமனுக்கு குணம் வழங்கிய பாங்கில் சும்மா சொல்லக்கூடாது வள்ளலாரை ஓரங்கட்டி விட்டார் கம்பவாரிதி அடிகளார். சிறியோனாகிய எனது கருத்து என்னவெனில் கடையெழு வள்ளகளில் ஒருவராகிய பேகனையும் மிஞ்சக்கூடிய வாய்ப்பைக் கம்பவாரிதி தவறவிட்டுவிட்டார் என்பதே. பேகன் குளிரில் நடுங்கிய மயிலுக்குத் தன்போர்வையை வழங்கி இலக்கியத்தில் இடம் பெற்றான். கம்பவாரிதி குளிரில் நடுங்கிய பரமனைக் கல்லில் கண்டதும் தனது குளிராடையை வழங்கியிருப்பாரென்றால் இன்று தமிழ்கூறு நல்லுலகமும் பக்தகோடி உலகமும் கையேத்தித் தொழுதிருக்கும் தவறவிட்டுவிட்டார். (கம்பவாரிதியும் குளிரின் குணத்தை அறிந்திருப்பார்) இதைவிட இன்னுமொரு பெருங்கவலையும் அவருக்கிருக்கின்றது. அதாவது இந்த புலம்பெயர்ந்த அற்பர்கள் அல்லது சூத்திரர்கள் `வேதம் வழங்காத நாடுகளுக்கு வரமாட்டேன் என்றிருந்த அவரையும் கட்டாயம் அங்கு கொண்டுபோய் படுத்தும் பாடு.. பாவம் சிவனார்! அவரைப்பார்க்க அழுகையாய் வந்தது' என்று அங்கலாய்த்துள்ளார் **(கம்பவாரிதிக்கு கோயில் கட்டி வழிபட வேண்டிய நிலையில் இருக்கின்றார் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். ஏனெனில் கல்லில் பரமனை அதுவும் குளிரில் நடுங்கும் பரமனை கண்டவரென்றால் சும்மாவா).** இதற்கு முன்னர் அதாவது சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் எந்தக் கம்பவாரிதியின் அனுமதிபெற்று இந்தோசீனா, தாய்லாந்து, வியட்னாம், தென்னாபிரிக்கா, மொரிசியஸ், மார்ட்னிக், ரியூனியோன், குதலோப் போன்றதான நாடுகளுக்கு பரமன் சென்றாரோ தெரியவில்லை. அதெல்லாம் வேதம் வழங்கும் நாடுகள். 1980களுக்கு பின் புலம்பெயர்ந்து வதியும் நாடுகள்தான் வேதம் வழங்காநாடுகளா? கம்பவாரிதியாருக்குத்தான் வெளிச்சம். வம்பவாரிசின் அறிவுக்கொழுந்து எப்படியெல்லாம் ஒளிர்கின்றது பாருங்கள். ஒரு சமூகம் புலம்பெயர்ந்தால் அது பூமிப்பந்தின் எந்த முனையாக இருந்தாலும் கூடவே கடவுள், கல்லு, கத்தரிக்காய் எல்லாம்தான் புலம்பெயரும்.




இது மானிட இயல்பு. இலண்டனுக்கு ஆனைமுகத்தோனும், வள்ளிமணாளனும் புலம்பெயர்ந்ததும் கோயில் கொண்டெழுந்ததும் 1960களில் என இலண்டன் தலபுராணங்கள் கூறுகின்றன. புலம்பெயர்ந்த பக்த கோடிகளே உங்கள் கவனத்திற்கு: `தங்கள் குளிர்தீர கோர்ட்டோடும் சூட்டோடும் நின்று கொண்டு பக்தர்கள் அபிஷேகம் செய்விக்கிறார்கள்' என்கிறார் ஜெயராஜ். இதனை நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள். அவருக்கான அபஷேகத்தை வழங்குங்கள்.

இவ்வளவு நேரமும் அவர் வழங்கிய ஒருகுடம் பாலில் கலந்திருந்த செறிவற்ற நஞ்சுத் துளிகளையே பிரித்துக்காட்டினேன். தற்போது உருகி உருகி அவர் சொல்ல விரும்பிய, பாலெனக் காட்ட முயற்சித்த செறிவு மிக்க நஞ்சுத்துளி எதுவென்றால் `வரமுடிந்தாலும் இனி இங்கு வராதீர்கள்' என்பதுதான். அவர் கம்பவாரிசல்லவா அதனால் கம்பனில் கவிக்கருத்தில் `வாரதே! வரவல்லாய்' என்னும் சொற்தொடருக்கு அவர் நஞ்சு தடவியுள்ளார். இங்கேதான் அவருடைய கபடம், கள்ளத்தனம், போலி ஆன்மீகம் எல்லாம் வெளிப்படுகின்றன. ஏனெனில் இவருடை இந்த உபதேசம் அரசியல் சார்ந்தது, ஆன்மீகத்திற்கு அப்பாற்பட்டது.

1980களில் இலங்கைத் தீவைவிட்டு தமிழர்கள் பெருமளவில் வெளியேறத் தலைப்பட்டபோது இலங்கையின் குடியகல்வுத் திணைக்களம் இறுக்கங்களை தளர்த்தியிருந்தது. கண்டும் காணாமல் விட்டது. இது சிறீலங்கா பேரினவாத அரசின் தந்திர மிக்க அழிப்புத் திட்டத்தைச் சார்ந்தது. ஜே.ஆர் என்னும் குள்ளநரியின் அரசியல் திட்டமது. தமிழர்களின் வெளியேற்றம் தமிழ்த் தேசியத்தை சிதைக்கும் என அவர் நம்பினார். ஆனால் விளைவு எதிராகவே அமைந்தது. அது தமிழ்தேசியத்தை வீறு கொள்ளச் செய்தது பலமுறச் செய்தது. இது சிறீலங்கா பேரினவாதம் எதிர்பாராதது. இப்போது அவர்கள் நேரடியாகத் திரும்பி வருவது சிறீலங்கா பேரினவாதிகளுக்கும் பிடிக்கவில்லை. தென்கிழக்காசியாவின் சூத்திரதாரியாக மாறவிரும்பும் இந்தியாவுக்கும் பிடிக்கவில்லை. ஈழத்தமிழர்களை அழிக்கும் நோக்குடன் சந்திரிகாவுக்கும்-வீரவன்சவுக்கும் கூட்டினை ஏற்படுத்திய சூத்திரதாரி யார் என்பதை அரசியல் அரிச்சுவடி அறியாதவர்கூட கூறுவர்.

புலம்பெயர்ந்த ஒருவரால் அண்ணளவாக தாயகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பத்துப்பேரை தன் தோள்களில் சுமக்க முடிந்தது. இது தாயகத்தின் போர் நெருக்கடியைப் பொருளாதார நெருக்கடியைத் தாங்கித்தரிக்க, முகங்கொள்ளச் செய்தது. புலம்பெயர்ந்தோர் பெரும்பாலானோர் பன்னிரெண்டு மணித்தியாலங்களுக்குக் குறையாமல் குளிரில் முள்ளெலும்பு தேய உழைத்தனர். தம் தேவைகளை குறைத்து வாயைவயிற்றைக் கட்டி பண-த்தை சேமித்தனர். இவற்றால் புலம்பெயர் நாடுகளில் நம் சமூத்தினரிடையே நிகழும் இளவயது மரணங்களின் விழுக்காடு வம்பவாரிசுகள் அறியாதது. ஈழத்தமிழர்களுக்கான தனித்துவம் மிக்க ஊடகங்களை *(பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி)*, புதிய தொழில்சார் துறைகளை நிறுவமுடிந்திருக்கின்றது.

இருமொழி மும்மொழி மட்டுமே தெரிந்திருந்த ஈழத் தமிழ்ச் சமூகத்திற்கு ஆகக்குறைந்தது பத்து மொழிகள் தெரிந்திருக்கின்றது. சர்வதேச தரமிக்க அறிவுத்துறைகளில் எல்லாம் கால்பதிக்க முடிந்திருக்கின்றது. இந்தியாவின் தென்கோடியிலும் இலங்கை மலேசியாவிலும் முடங்கிக்கிடந்த தமிழ் சர்வதேச மொழியாக மாறி நிற்கின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக தமிழ்ப் பரப்பிற்கு சர்வதேச முகவரியைப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது. இன்னும் இன்னும் நான் அடுக்கிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் தென்கிழக்காசியாவின் சூத்திரதாரிகளுக்கும் சிறீலங்கா பேரினவாதிகளுக்கும் மட்டுந்தான் சங்கடத்தையும் சிக்கலையும் தோற்றுவிப்பது. இங்கேதான் கம்பவாரிதியின் அரசியல் அம்பலமாகின்றது. சூத்திரதாரியினதும், பேரினவாதியினதும் அரசியல் ஆதங்கத்தையே கம்பவாரிதியும் வெளிப்படுத்தியுள்ளார். அயோத்தியில் இராமர் கோயில் கட்டவும், இந்துத்துவத்தை உயர்த்திப் பிடிக்கவும், அகண்ட பாரதத்தை அமைக்கவும் கூடியதான காவிகளின் அரசிற்கு சேவை செய்வது வம்பவாரிதி போன்றோரின் விருப்பதிற்குரியதாய் இருக்கலாம். அது அவருடைய தனிப்பட்ட பிரச்சனை.

கம்பவாரிதி எள்ளி நகையாடும் புலம்பெயர்ந்தோரின் சிறுமைத்தனங்கள் தமிழ்ச் சமூகத்திற்கு மட்டும் உரியவையல்ல. இவை உலகளாவியவை, சமூக உளவியல் சார்ந்தவை. முன்னைய உயர்குடியினர் ஆடிய ஆட்டங்களை வாய்பிளக்க பார்த்த சாதாரணர் தங்கள் வசதியின் போது ஒருதடவை அப்படிப் பாவனை செய்யத்தான் முயற்சிப்பார்கள். இப்பிரச்சனைகளை நேசத்துடன்தான் அணுகமுடியும், ஆலோசனை கூறமுடியும். அதைவிட தாயகத்தாருக்கும் புலம்பெயர்ந்தோருக்கும் இடையேயான முறுகல்கள், மனக்குமுறல்கள் தாய்பிள்ளைகளுக்கு இடையேயான கோபதாபங்கள் போன்றதே. நமது மொழியில் சொல்வார்கள் கோழி மிதித்து குஞ்சுகள் சாவதில்லை. அரசியல் மொழியில் கூறுவதானால் இவை அக முரண்பாடே தவிர பகைமுரண்பாடல்ல. *(கம்பவாரிதிக்கு இதுபற்றிய விளக்கம் குறைவாக இருக்கும். மேலதிக விளக்கத்திற்கு மல்லிகை ஜீவாவை அணுகலாம்)*

புலம்பெயர்ந்தவர்கள், அகதிகள், வேறுநாடுகளில் குடியேறியோர் தாயகம் திரும்புதல் அவர்களது ஆதார உரிமை சார்ந்தது. மனித உரிமை சார்ந்தது. இதனை மறுத்துக் கருத்துக் கூற ஆலோசனை வழங்க கம்பவாரிதி முயற்சித்திருப்பது நச்சுத்தனமானது. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்த பாவத்திற்கு இணையானது.

இந்தப் பாவத்தில் இருந்து அவர் மீள வேண்டுமானால் என்னால் வழங்கக் கூடியதான ஆலோசனை இதுதான். தமிழில் முறைசார் கல்வியையோ முறைசாராக் கல்வியையோ மேற்கொள்ள முடியாமல் ஆயிரக் கணக்கான குழந்தைகள் இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தமிழையாயினும் *(உங்களிடம் தமிழ் அறிவு இருக்குமாயின் ஏனெனில் தமிழ் மொழி என்பது கம்பராமாயணத்திற்கும் அப்பாற்பட்டது)* கற்றுக்கொடுக்க முயற்சியுங்கள். அதனைவிட போர்ச் சூழலால் மனப்பிறழ்வுக்கும் பாதிப்புக்கும் உள்ளாகி இருப்போருக்கு ஆன்மீக வழியில் நம்பிக்கை அளிக்க முடியுமா என யோசியுங்கள். அதையும் விட ஆகக்குறைந்தது முகாம்களில் தங்கியுள்ள பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ஒரு நேர உணவாவது வழங்க முடியுமாயின் வழங்குங்கள். உங்களுக்குப் போகுமிடத்தில் புண்ணிமாவது மிஞ்சும்.

***`வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா'***
*- கம்பன்*

**கி.பி.அரவிந்தன் - பிரான்ஸ்**
**நெறியாளர் அப்பால் தமிழ்**
kipian@hotmail.com

*(இக்கட்டுரை மல்லிகை, மற்றும் சுடர்ஒளி ஆகிய இதழ்களுக்கும் அனுப்பப்படுகின்றது. தேவை கருதி புலம் பெயர்ந்தோர் ஊடகங்களுக்கும் அனுப்படுகின்றது.)*

# வன்னியில் கோலாகலமாக நடைபெறும் தமிழீழ தேசிய விளையாட்டு விழா

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் தமிழீழத் தேசிய பெருவிளையாட்டு விழாவின் 3வது பெருவிளையாட்டு விழா இன்று (20.02.2004) கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி மிகவும் எழுச்சியாக நடைபெற்று வருகிறது.

இன்று (20.02.04) ஆரம்பமான இத்தேசிய விளையாட்டுவிழாவில் முன்னதாக காலை 9.மணிக்கு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனை முன்பாக இருந்து இவ்விளையாட்டு விழாவில் பங்குகொள்ளும் தாயகத்தின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த வீரவீராங்கனைகளையும், விளையாட்டுக் குழு நடுவர்களையும், அழைத்துவரும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் நாதஸ்வரக் குழுவினரின் மங்கள இசை ஒலிக்க தொடர்ந்து பாண்ட் வாத்தியக் குழுவினரின் பாண்ட் வாத்திய இசை முழங்க தொடர்ந்து கேணல் சங்கர், லெப்.கேணல் விக்ரர், மேஜர் அல்பேட், லெப்.கேணல் புலேந்தியம்மான், கப்டன் அன்பரசி, லெப்.சந்திரன், மேஜர் சோதியா, கப்டன் திலகா, லெப்.சதா, ஆகிய 9 மாவீரர்களின் உருவப்படங்களும் தாங்கிவர தொடர்ந்து சீனடி சிலம்படி, கொம்படி, நடனங்கள் என்பன இடம்பெற தொடர்ந்து மட்டக்களப்பு அம்பாறை, திருக்கோணமலை, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்?ந்த வீரர்கள் அணிவகுத்துவந்து, விளையாட்டு மைதானத்தை, அடைந்ததும் அங்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் இந்த மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டன.

தொடர்ந்து தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினைதமிழீழ மகளிர் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் தமிழினி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி

கேணல் சூசை அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அந்தந்த மாவட்ட விளையாட்டுத்துறைக் கொடிகளை மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள் பொறுப்பாளர்கள் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்பட்டது.

ஒலிம்பிக் தீபத்தை ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயாந்தன் ஏற்றிவைத்து ஒலிம்பிக் தீபங்களை ஆசிய

விளையாட்டுப்போட்டிகளில் பங்கு பற்றி 1958ம் ஆண்டு உயரம் பாய்தலில் இலங்கைக்கான 1வது தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்த 1வது தமிழராகிய எதிர்வீரசிங்கம் அவர்களிடமும், மற்றும் தமிழீழ வலைப்பந்தாட்ட அணியின் இங்கிலாந்து மண்ணின் வெற்றிகளைப் பெற்றுத் தந்த தமிழீழ வலைப்பந்தாட்ட அணித் தலைவி ராதிகா ஆகியோரிடம் வழங்க அவர்கள் ஒலிம்பிக் தீபங்களை ஏந்தியவாறு விளையாட்டு மைதானத்தை வலம் வந்தனர். இவற்றைத் தொடர்ந்து ஆசியுரையினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் நிகழ்த்தினார்.

அடுத்து சிறப்புரைகளை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா. தமிழன்பன் அவர்களும், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா அவர்களும் நிகழ்த்தினர். அடுத்து போராளி இசையமைப்பாளர் இசைப்பிரியனின் இசையில் புலிகளின் குரல் கலைஞர்கள் வழங்கிய தாயகமண்ணே வணக்கம் என்னும் பாடல் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து பண்பாட்டு நிகழ்வுகளும், குருகுலம் காந்தி நிலைய சிறார்களின் கோலாட்டம், காவடி, கராத்தே, ஆகிய நிகழ்வுகளும், பொலிகண்டி சிவலிங்கம், பருத்தித்துறை கணேசலிங்கம், ஆகியோரது மாணவர்களின் கம்படி, தீப்பந்த விளையாட்டு, கொம்பு, போன்ற சாகச நிகழ்வுகளும், நிகழ்த்தப்பட்டன.

இதில் சிறுவர்களும், முதியோர்களும் இடம்பெற்றிருந்தனர். தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவிகளின் அபிநய நிகழ்வும், அதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக கின்னஸ்ரிக் கழக அணியினதும், கடற்புலிகளின் அணியினரதும், யாழ் கின்னஸ்ரிக் கழக அணியினரதும், நிகழ்வுகள் நடைபெற்றன. தொடர்ந்து போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகி தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டு விழாவின் 3வது பெருவிளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக வருகைதந்திருந்த அம்பாறை மாவட்ட சிறீலங்கா காவற்துறை அணியினருக்கான அனுமதி சிறீலங்காப் படையினரால் மறுக்கப்பட்டுள்ளது. இன்று ஆரம்பமாகிய 3வது தமிழீழத் தேசிய பெருவிளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றுவதற்காக வருகை தந்த இந்த காவற்துறை அணியினரை புளியங்குளம் சிறீலங்காப் படை சோதனைச் சாவடியில் வைத்து படையினர் அனுமதி வழங்காமையால் அவ்வணியினர் திரும்பிச் சென்றனர்.

# கண்மணிக்குள் ஒரு காதல்

பாகம் - 2

2

ஆயிரம் ஆயிரம்
கனவுகளைச்
சுமந்துகொண்டுபோன
பல்லாயிரக்கணக்கான
காதலரின் பட்டியலில்
அன்புக்காதலன்
ஆனந்தனின்
பெயரும் சேர்ந்தபின்பு
அவன்..
மரணத்துக்குக்காரணமான
அந்த ?மரணவிரும்பிகள்?
தொடர்ந்து திருவிழா
நடக்கும்
அம்மன்கோவில் நோக்கிப்
பாய்கிறார்கள்
மீண்டும் மீண்டும்
மனிதவேட்டைக்காக...!
வீதியில் போனவர்கள்
காட்டுக்குள் ஓடி
ஒளிந்தவர்கள்
ஒட்டினின்று
எட்டிப்பார்தவர்கள்
பாவையர்கள்
பிஞ்சுப்பாலகர்கள்
காளையர்கள், கற்பிணிகள்
யாராக இருந்தாலும்
கண்ணில் பட்டவரை
எல்லாம்
கைதுசெய்தார்கள்
அல்லது
கொலைசெய்தார்கள்...!
கொலை செய்தர்களை
அப்படியே
வீதியில் போட்டுவிட்டு
கைதுசெய்தவரை
கட்டியிழுத்துக்கொண்டு
காடயரும், சீக்கையரும்
சீறிப்பாய்ந்துகொண்டு
ஹிந்தியில் ஏதோ
பேசிக்கொண்டு
அம்மன்கோவில் நோக்கி
ஆவேசமாய்ப்
பாய்கிறார்கள்..!
மனித உயிர்கொல்லிகளின்
இயந்திரத்துப்பாக்கிக்குப்
பயந்து
உயிரைக்காப்பாற்ற
கட்டுமரம் மீதேறி
கடலுக்குப்
போனவர்கள்
கதையைமுடித்து
வெற்றுடலை தண்ணீரில்
மிதக்கவிட்டு
விளையாடிக்
கொண்டிருக்கிறது
அமிக்காரனின் 'நேவி'...!
மாட்டுவண்டிகட்டி
சொந்தங்களையும்,
சொத்துக்களையும்
துன்பங்களையும்,
கவலைகளையும்
ஏற்றிக்கொண்டு
இடம்பெயர்ந்தவர்களை
வானத்தில் இருந்து
வட்டமிட்ட வானூர்தி
திட்டமிட்டது அவர்கள்
கதைமுடிக்க..!

ஒரு பிரதேசத்தையே
அடிமையாக்கி
அழித்துக்கொண்டு
அம்மன் கோவில் நோக்கி
முன்னேறுகிறது
அந்த அயல்நாட்டு
அரசின்
ஆயுதப்படை...!
அப்போதுதான்
அம்மாளுக்கு
பாலமிஷேகம் நடக்கிறது
உருக்குள் ஆமிவந்து
வேறொரு விதமாக
அபிஷேகம் செய்கிறான்
இரத்தத்தாலும்
கண்ணீராலும்...!
அது அம்பாள்
கண்களுக்கு
தெரியவில்லைப்போலும்..!
பக்தர்கள் இரத்தத்தில்
நீராட
அவள் பாலிலும்
தேனிலும்
நீராடிக்
கொண்டிருக்கிறாள்...!

ஊருக்குள் உயிர்குடிக்கும்
மரணப்புயல் ஒன்று
மையம்கொண்டதையே
மறந்து
ஆனந்தனின் அன்னை
அவன் அந்நியரால்
கொல்லப்பட்டான்
என்ற செய்தி அறியாமல்
அவனையே நாலாபுறமும்
தேடிக்கொண்டிருந்தாள்..!
அந்தநேரம்தான்
அந்நியர்கள் ஆவேசமாக
வருகிறார்கள்
என்ற செதியறிந்த
அம்பாள் பக்தன் ஒருவன்
தன் நூல்வேட்டியை
எடுத்து
மடித்துக்கட்டிக்கொண்டு
மனிதவேட்டைக்கு
அயல்நாட்டுவேடர்கள்
வருகிறார்கள்
என்று அலறிக்கொண்டு
ஓடிவந்தான்
உயிர்குடிக்க அரக்கர்கள்
கூட்டமொன்று
சுடலப்பிட்டி...
பிள்ளையார்
கோவில்வீதிதாண்டி
வெறியோடு புயல்போல்
வருகிறார்கள்
உங்கள் உயிரை
நீங்களே காப்பாற்றுங்கள்
என்று
சொல்லிக்கொண்டே அந்த
அம்பாள் பக்தன்
தன்னுயிரைக்காப்பாற்ற
கல்லடி வைரவர்போவில்
வீதிப்பக்கமாக
ஓடிக்கொண்டிருந்தான்...!

அம்பாளுக்கு
பாலபிஷேகம்
அவசரமாக
இடைநிறுத்தப்பட்டது
அடுத்தநிகழ்சியாக...
ஆலயத்தின் ஒலிபெருக்கி
அவசரமாக அழுதது...!
அன்பான அம்பாள்
அடியார்களே
முக்கியமான அறிவித்தல்
ஒன்று
வடக்குப் புறத்தில் இருந்து
ஆமிக்காரன் வருவதனால்
தெற்குப்புறமாக
இடம்பெயருமாறு
மனவருத்தத்தோடு
கேட்டுக்கொள்ளப்
படுகிறீர்கள்..!
ஒலிபெருக்கி
அழுதுமுடிக்குமுன்னே
அடியார்கள் அனைவரும்
எங்கோ அவசரமாக
ஓடுகிறார்கள்
மீண்டும் அகதி
ஆவதற்கு...!
மீண்டும்எங்கோ ஒரு
ஆலயத்தில்
அல்லதுஎங்கோ ஒரு
பாடசாலைக்குள்
அடைபட்டுக்கொண்டு
அடிமையாவதற்கு...!
அப்போதெல்லாம்...
ஆசரியர் செய்யமுடியாத
காரியங்களை
இப்போது...
இந்திய அரசாங்கம்
செய்தது
பாடம்படிக்க பாடசாலை
செல்லாத பாமரர்கள்
பாதுகாப்புக்காக
பாடசாலைகளுக்குள்
அடைபட்டுக்
கிடக்கிறார்கள்..!
பகைவர்களால் தீவீரவாதி
என அழைக்கப்பட்டு
அவசரமாக
தேடிக்கண்டுபிடித்து
கைதுசெய்து பின்
கொலைசெய்யத்
திட்டமிட்டிருந்த
பார்வதியம்மாளும்
பாரதப்படைகள்
வருகிறார்கள்
என்ற செய்திகேட்டு
ஊர்மக்களோடு மக்களாய்
அகதிகளோடு
அகதிகளாய்
கவலைகள்
சுமந்துகொண்டு
இடம்பெயர்ந்தாள்...!

குண்டுமழை
பொழிந்துகொண்டே
உயிர்குடிக்க அந்நியப்புயல்
அம்மன்கோவில் வீதிக்கு
வந்தது
எல்லைதாண்டி
வேலியைப்புடுங்கி
எட்டுத்திக்கும் தேடி
எங்கே தமிழன் என்று
ஏழனம் செய்தது....!
பிஞ்சும் பூவும்
குஞ்சும் குருவியும்கூட
இடம்பெயர்ந்துபோனது
அம்மன் கோவிலும்
அம்மாளாச்சியும் மட்டும்
உயிருக்குப் பயந்து
ஊரைவிட்டு
இடம்பெயரவில்லை...!
அப்பாளின் பக்தர்கள்
வாழ்வுமட்டும்
வட்டிழந்துபோன
புனங்கூடல்போல்
பட்டுப்போனது...!
கட்டுக்கடங்காத
சோகத்தை
நெஞ்சிலே
சுமந்துகொண்டு
எல்லோரும்
இடம்பெயர்கிறார்கள்
அது அம்பாள்
கண்களுக்கு
தெரியவில்லை
அவள் காதுகளுக்கும்
கேட்கவில்லைப்போலும்..!
உயிர்கொல்லி
பகைவர்களின்
கையில் அகப்படாமல்
அகதிகள்
ஓடிக்கொண்டிருக்க
ஆனந்தன்
இறந்துபோனான்
என்ற செய்தி அறியாத
அவன் அன்னை...
தேடிக்கொண்டே இருக்க
அவள் கண்ணில்
அகப்பட்டது
ஆனந்தன்வெற்றுடல்
அல்ல...
வெறிகொண்ட
பகைவர்கள்...!

(காதல் வளரும்...)

- த.சரீஷ்
(பாரீஸ்)

## யேர்மன் வாழ்தமிழ் மக்களிற்கு ஓர் அரியசந்தர்ப்பம்.

குறைந்தசெலவில் மிகவும் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள ஒருவாய்ப்பு. **50யூரோ** மட்டும் செலுத்தி பதிவு செய்து கொண்டு மிகுதி பணத்தை தவணை முறையில் செலுத்தலாம்.

Erkelenz இல் புகழ் பெற்ற G D T therssen Fahrschule தற்போது G D T Leuer(Michael) ஆக மாற்றம் பெற்று உங்களிற்கு சேவையாற்ற காத்திருக்கின்றது

**Fahrschule G D T Leuer**

Fahrschule GDT Leuer (Michael)
H-J-Gormanns Str-17, 41812 Erkelenz
T.P-02435-1911
Handy-0171-3686192

**திறந்திருக்கும் நேரம்**

திங்கள் தொடக்கம் புதன் வரை மாலை 6.30 மணிதொடக்கம் 8 மணி வரை.

## ஜதீஸ்வரா இசைக்குழு

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

Pub-Fr-506



## S.K. Rajan Jewellers

**24, Rue Perdonnet, 75010 Paris.**

தொடர்புகளுக்கு: Tel: 0142096821 / Port: 0614831536
உரிமையாளர்: S.RAJAN - M°: La Chapelle / Gard du Nord.

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான நகைகளை குறித்த தவணையில், அசல் 22K இல் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்

**எஸ்.கே.ராஜன் ஜுவலர்ஸ்**

### நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய (20M³)வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**நித்தி:** 0148050214 / 0613342518
0607348051 / 0148385825

Pub Fr

### EUROCONSULT SARL TRADUCTIONS

மொழி பெயர்ப்பு நிலையம்

அனைத்துவித மொழிபெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 / Fax: 0153267502

## LA CHAPELLE
### இறைச்சிக் கடை

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

தொலைபேசிச்சேவையில் யாழ். மன்னன் தமிழன் இற்குப் பின் இதோ ஒரு புதிய சகாப்தம் படைக்க..

# வன்னியின் மன்னன் வன்னியன் தைத்திருநாள் முதல் ஜேர்மனிக்கு வந்திருக்கிறான்




- நிமிடங்களை திருடுகிறார்களே, நிமிடங்களை விழுங்குகிறார்களே. என்ற ஈழத்தமிழரின் ஏக்கத்தைப் போக்க...
- வைத்து வைத்து பாவிக்க தமிழன் இற்குப்பின் ஒரு தொலைபேசி அட்டை இல்லையே என்ற ஈழத்தமிழரின் ஏக்கத்தைப் போக்க...
- இலண்டனில் ஈழத்தமிழரின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே தொலைபேசிஅட்டை வன்னியன் தைத்திருநாள் முதல் ஜேர்மனிக்கும் வந்திருக்கின்றான்.
- தைத்திருநாள் முதல் சகல வர்த்தகநிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்!
- தைத்திருநாள் முதல் புதுவருடப்பிறப்பு வரை 6 யூரோ வன்னியன் தொலைபேசி அட்டை 5 யூரோ மட்டுமே
- இக்காலப் பகுதிக்குள் வாங்கும் தொலைபேசி அட்டை புதுவருடப்பிறப்பன்று அதிஸ்டம் பார்க்கப்பட்டு, முதல் மூன்று அதிஸ்டசாலிகட்கு வன்னி சென்று வர விமானச்சீட்டும் கைச் செலவிற்கு 20,000 ரூபா பணமும் வழங்கப்படும்!
- அதிஸ்டத்திற்குரிய எண் (அட்டை இலக்கம்) புதுவருடப் பிறப்பன்று தமிழ்தொலைக்காட்சி இணையம் மூலம் அறிவிக்கப்படும்.

**தொடர்புகட்கு:**
க.நவலேஸ்வரன் (ரவி)
**Oberstr.12**
**74927 Eschelbronn**
தொலைபேசி எண்: 06226 42067
கைத்தொலைபேசி: 01726312893


# புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஆயுள் இரண்டு பூர்த்தி

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக் குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரு வருடங்கள் நிறைவாகின்ற சூழ்நிலையிலும் சிறீலங்கா அரச தந்திரோபாயங்கள், பேரினவாத கூச்சல் என்பவற்றால் அவ்வுடன்படிக்கை தமிழ் மக்களுக்கு நிறைவான பலன் எதனையும் வழங்காது ஏமாற்றத்தையே உண்டு பண்ணியுள்ளது. இவ்வாறான உடன்படிக்கையை கைச்சாத்திட்ட காலம் தொடக்கம் எதிர்த்து வந்த ஜனாதிபதி தந்தபோது தங்கமுலாம் பூச எத்தனிக்கிறாரா என்று எண்ணத்தோன்றுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களும் சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரதசிங்க அவர்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வுடன்படிக்கையை கடந்த 22.02.2001 அன்று கைச்சாத்திட்டனர். கைச்சாத்திட்ட நாள் தொடக்கம் இற்றை வரைக்கும் அது முழுமையான ஆரோக்கியமான அனுகூலங்களை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் இவ் ஒப்பந்தத்தை முறையாகக் கடைப்பிடிக்க மாட்டார்கள். வேண்டுமென்றே மீறி விடுவார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் தென்னிலங்கை பேரினவாத சக்திகளால் எழுப்பப்பட்டது. சர்வதேச சமூகத்திடமும் ஆரம்பத்தில் சந்தேகப் போக்கு காணப்பட்டது.

எனினும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக வியூகமமைத்த தேசியத் தலைவர் அவரது மதியூகத்தால் புரிந்துணர்வுடன் படிக்கையை செம்மையாகக் கடைப்பிடிப்பதில் கண்ணியமாக, கட்டுக் கோப்புடன் செயற்பட்டார். இதன் வெற்றிக் கரத்தை உணர்ந்த சர்வதேச சமுகப்பிரதி நிதிகள் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை



அங்கீகரித்ததுடன் வன்னி வரை வந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து மெய்யுணர்ந்து கொண்டனர். ஆனால் சிறீலங்கா அரசு நிறைவான உடன்படிக்கையாக அமுல் படுத்தாது இழுத்தடிப்புக்களை மேற்கொண்டது.

உடன் படிக்கையின் விதி 2.2.ன் பிரகாரம்:- உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டு 30 நாட்களுக்குள் வணக்கத்தலங்களில் உள்ள ஆயுதப்படைகள் அவ்வழிபாட்டுத் தலங்களைவிட்டு வெளியேற வேண்டும்.

விதி 2.3.ன் பிரகாரம்:- சமாதான உடன்படிக்கைகை சாத்திடப்பட்ட நாள் முதல் பாடசாலை கட்டிடங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும். இது 160 நாட்களுக் குள் நடைமுறை செய்தல் வேண்டும்.

விதி 2-4ன் பிரகாரம்:- சகல பொதுக் கட்டங்களிலிருந்தும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அவை திருப்பி உரியவர்களிடம் கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள உடன்படிக்கை முழுமையாக அரசாங்கத்தால் அமுல் படுத்தப்படவில்லை. இராணுவ அழுத்தங்கள், நெருக்கு வாரங்கள் என்பன தொடர் கதையாக அமைந்தனவே தவிர ஆக்கபூர்வமான காரியம் எதுவும் நிகழவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் குடிமனைகள் சிங்களப் படையினரின் ஆக்கிரமிப்புக்குள் சிக்கிய ஒரு அவலம் தொடர்ந்து காணப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்குமிடையில் சர்வதேச அரங்கில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் இவ்விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்ட போதும் ஆக்கபூர்வமான அனுகூலங்களை சிறீலங்கா அரசு வெளிப்படுத்தவில்லை. மாறாக தமிழ் மக்களின் அன்றாட வாழ்நாள் பிரச்சினையை அறியாத இந்திய இராணுவத்துறையைச் சேர்ந்த நம்பியார் உயர் பாதுகாப்பு வலயத்தின் பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொண்ட விஜயம் அவரது அறிக்கை என்பன சிறீலங்கா அரசு மீதான சமாதான நம்பிக்கையைப் பலவீனப்படுத்தியது.

படையினர் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிராயுதபாணிகளாக அரசியற்பணிகளில் ஈடுபட்ட விடுதலைப் போராளிகள் அரச படையினரால் பல்வேறு துன்புறுத்தல், கொலை அச்சுறுத்தல் போன்ற சம்பவங்களும் இடம்பெற்றன.

யாழ் நெடுந்தீவில் சமாதானச் சூழலைப் பேணுவதற்காக மூன்று விடுதலைப் புலிகள் தமது உயிரை ஈகை செய்தனர். பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிந்து சென்ற காரணத்தினால் சிறீலங்காப் படையினரால் இம்சிக்கப்பட்டனர். இதன் உச்ச கட்டமாக கடந்த 14.02.2003 அன்று சர்வதேச கடற் பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டது.

இதன்போது லெப்.கேணல் செந்தமிழ், லெப்.கேணல் அன்புகுமரன், லெப்.கேணல் கஜேந்திரன், லெப்.கேணல் கதிர், மேஜர் நிர்மலன், மேஜர் நிமால், மேஜர் வீரநாதன், மேஜர் கன்னியநாடான், மேஜர் மணியரசன், மேஜர் வள்ளுவன், கப்டன் செழியன் ஆகிய, போராளிகளும் நாட்டுப் பற்றாளர் மோகனும் வீரகாவியமானார்கள்.

சிறீலங்கா அரசின் மிகப்பெரிய போர் நிறுத்த மீறலான இச்சம்பவம் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் மிகப்பெரிய ஆத்திரமூட்டக்கூடிய துயரச் சம்பவமாக நிகழ்ந்த போதும் தேசியத்தலைவர் அவர்கள் சமாதானத்தின் மீதான நம்பிக்கையை காலம் தேவை உணர்ந்து செம்மையாகக் கடைப்பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மொத்தத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற போலி வேடம் தரித்துக் கொண்டு சர்வதேச வலைப்பின்னலை உருவாக்கி அதில் விடுதலைப் புலிகளை ராஜதந்திர ரீதியாக சிக்க வைப்பதில் பிரதமர் அக்கறை காட்டினார் என்பது வெளிப்படை. அத்துடன் அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற வல்லரசு நாடுகளின் உதவியுடன் சிறீலங்கா படைத்துறையை வலிமைப்படுத்தும் நகர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதில் பூச்சியமாக செயற்பட்ட சிறீலங்கா அரசு ஜனாதிபதியிடமிருந்த நிறைவேற்று அதிகாரமே புரிந்துணர்வுடன்படிக்கையை அமுல் படுத்துவதற்கான தடைக்கற்கள் என்ற சாட்டுப் போக்கை வெளியுலகிற்கு காட்டியது. இவை ஒரு புறமிருக்க, புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாள் முதல் அதனை ஜனாதிபதியும் இதர பேரினவாத சக்திகளும் முழுமையாக எதிர்த்து வந்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு வடக்குக் கிழக்கைப் பிரித்துக்



கொடுக்கும் ஒரு சூழ்ச்சி உடன்படிக்கை எனவும் ஜனாதிபதியால் குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டதுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசையும் அனுசரணை வழங்கிய நோர்வே, கண்காணிப்புக்குழுத் தலைவர் மீதான அதிருப்தியீனங்களும் வெளிப்பட்டன. இறுதியில் கண்காணிப் புக் குழுத்தலைவரை அழைத்துக் கொள்ளுமாறு நோர்வே அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார் ஜனாதிபதி.

ஆனால் தற்போது பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் சிறீலங்கா சுதந்திரக்கட்சி செய்து கொண்ட கூட்டு உடன்படிக்கை, ஐக்கிய தேசிய முன்னனி அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி தன்வயப்படுத்தியமை, நாடாளுமன்றக் கலைப்பு போன்ற [illegible] ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள் புரிந்துணர்வுடன்படிக்கை செத்து விடும் என நம்பிக்கையீனமடைந்துள்ள நிலையில் புரிந்துணர்வுடன்படிக்கையைத் தொடர்ந்து பேணப்போவதாக ஜனாதிபதி அறிவித்திருப்பது ஆறுதலளிக்கிறது. தேர்தல் காலத்தில் தங்கமுலாம் பூசும் நடவடிக்கையாக இது அமையலாம் என எண்ணத் தோன்றுகிறது. விடுதலைப் புலிகள் சமாதானத்தில் பற்றுறுதியுடன் செயற்படுவதால் விடுதலைப் புலிகள் தரப்பால் உடன்படிக்கை மீறப்படும் அல்லது முறிந்து விடும் என்ற ஐயத்திற்கு இடமில்லை.

பதினான்காவது நாடாளுமன்றத் தேர்தல் அறுவடைகள் ஆளும் கட்சிக்கு சாதகமாக அமையுமானால் புரிந்துணர்வுடன்படிக்கை தொடர்ந்து அமுல் படுத்தலில் சிரமங்கள் இருக்காது. மாறாக சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டு முன்னணி ஆட்சியமைக்கும் பட்சத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கையொப்பம் செல்லுபடி அற்றதாகவே கருத இடமுண்டு. இந்நிலையில் சர்வதேச சமுகத்தின் அழுத்தங்கள் அக்கறை மீண்டும் ஆளும் தரப்பு மீது ஏற்படும் பட்சத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடரக்கூடிய வாய்ப்புள்ளது. எனினும் கடந்தகால இழுத்தடிப்புக்கள் தமிழ் மக்களின் இயல்புநிலை தடைகள் என்பவற்றை ஏற்படுத்தாது இயல்பு நிலையைத் தோற்றுவித்து விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு ஆட்சிக்கு வரும் தரப்பிற்கு உரியது. அப்போதுதான் உடன்படிக்கை உயிர் வாழ இடமுண்டு. இப்போது இரு ஆண்டுகள் நிறைவடைந்தும், சமாதானம் மரண வாசலில் நிற்பதாகவே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எதிர்காலத்தில் ஜே.வி.பி போன்ற பேரினவாதக் கறையான்களால் புரிந்துணர்வு உடன்படிக்கை செல்லரித்துப் போகக்கூடாது என்பதே தமிழ் மக்களின் அவாவாகும்.

– வேணிதன்


லாச்சப்பலில் ஓர் புதிய உதயம்

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை YALPPAANAM BOUCHERIE

தரமான கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச்சபலில் யாழ்ப்பாணம்
இறைச்சிக்கடை


ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.

5, Rue Perdonnet, 75010 Paris. Métro - La Chapelle / Gare du Nord

Pub-Fr



சந்திரிகா



சோமவன்ச

# ஜே.வி.பி.யின் போக்கில் தடுமாறும் சந்திரிகா!

சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி. கூட்டு முன்னணியான மக்கள் ஐக்கிய சுதந்திர கூட்டணிக்கு ஆதரவு வழங்குமாறு கோரி பௌத்த மகா சங்கத்தின் சிரேஷ்ட பிக்குமார் களமிறங்கவுள்ளனர். பிரிந்துபோன நாட்டை இந்த கூட்டு முன்னணி ஒன்று சேர்ந்துள்ளது என்றும் 2000ம் ஆண்டுகள் பழமை வாய்ந்த மூத்த கலாசாரத்தை பாதுகாப்பதற்கு இந்த கூட்டு முன்னணியின் அரசாங்கம் அவசியமானது எனவும் பௌத்த மகாசங்கத்தின் பிரதிநிதிகள் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். அதேவேளை இந்த கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் உடனடியாக இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்யவேண்டும் எனவும் பௌத்த மகாசங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இச்சங்கத்தின் பிரதிநிதிகளான எல்லாவல தேரர், குசல ஞான பிரேமரத்தின தேரர், உத்தரகீர்த்தி தேரர் ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து தேர்தல் நிலவரம் தொடர்பாக கலந்துரையாடியிருக்கின்றனர்.

ஜனாதிபதி மாளிகையில் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் பல்வேறுபட்ட விடயங்கள் குறித்து பேசப்பட்டிருக்கின்றன. சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியை முற்றாக தடைநிறுத்துவது, சுதந்திர கூட்டு முன்னணி அரசாங்கம் பதவியேற்றதும் இலங்கையின் இறைமை, ஆள்புல ஒற்றுமை என்ற வரையறைக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தல். அதாவது புலிகளுடன் மட்டுமன்றி சகல தரப்பினருடனும் பேசுதல், வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து நோர்வேயின் தலைமையிலான போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை வெளியேற்றுதல் போன்றவை குறித்து விரிவாக ஆராயப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. சுதந்திர கூட்டு முன்னணி பதவியேற்றதும் இந்த விடயங்களில் கவனம் செலுத்துமென ஜனாதிபதியும் உத்தரவாதம் அளித்ததுடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமித்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் அவர் பௌத்த மகா சங்கப்பிரதிநிதிகளிடமும் உறுதிப்படக் கூறியதாகவும் தெரிய வருகின்றது.

தேர்தல் பிரசாரச் காலங்களிலே ஜனாதிபதி இனப்பிரச்சினை தீர்வு குறித்த விடயத்தில் சில பிரசாரங்களை ஜனாதிபதி மாளிகையில் வைத்து செய்து வருகின்றார். பிரதானமாக தான் புலிகளோடு எவ்வாறு பேச்சுவார்த்தை நடத்துவேன் என்றும் ஒற்றையாட்சி தன்மையின் கீழ் தீர்வை ஏற்படுத்துவது பற்றியும் நாட்டின் முக்கியமான பிரமுகர்களுக்கு விளக்கிக்கூறி வருகின்றார். பௌத்த மகாசங்கத்துடனான சந்திப்பு அதனையே எடுத்துக்காட்டுகின்றது. கடந்த வாரமும் அதற்கு முதல் வாரமும் அரசாங்க உயர் அதிகாரிகளையும் நாட்டின் ஏனைய பிரமுகர்களையும் வர்த்தக சமூகத்தினரையும் ஜனாதிபதி சந்தித்து பேசியிருக்கின்றார். வெளிநாட்டு நிதியுதவிகளை பெறுவதற்கு ஜே.வி.பியுடனான கூட்டு தடையாக இருக்காதா என்ற கேள்விகள் சந்தேகங்களுக்கப்பால் புலிகளோடு நடத்தவுள்ள அல்லது நடத்தப்படவேண்டிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பிலேயே ஜனாதிபதியின் கவனம் திரும்பியிருக்கின்றது.

அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் புலிகளுக்கு நாட்டைத் தாரை வார்த்துக்கொடுக்கின்றது என்ற ஜே.வி.பியின் பிரசாரத்தை நியாயப்படுத்தும் அதேவேளை தான் அரசாங்கம் அமைத்தால் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து போகவேண்டிய கட்டாயத்தேவை. இரண்டாவது புலிகள் கேட்கும் அனைத்திற்கும் தான் அடிபணிந்து போகமாட்டேன் என்பதை தெளிவுபடுத்த வேண்டிய அவசியம். பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இடையில் இந்த இரண்டு காரணங்களையும் ஏதொவொரு விதமாகக்கூறி குறைந்த பட்சம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டு முன்னணிக்கான ஆதரவை பெற்றுக்கொள்வதில் ஜனாதிபதி தீவிரமாக ஈடுபடுகின்றார். ஜனாதிபதி இனவாதம் பேசினாலும் அல்லது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மனதார விரும்பவில்லையானாலும் சர்வதேச ஒப்பாசாரத்திற்கு புலிகளோடு சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தியே ஆகவேண்டும் என்பதை நன்கு அறிந்திருக்கின்றார். ஆனால் இதனை ஜே.வி.பிக்கு உணரவைக்க முடியாத நிலையில் ஜனாதிபதி தடுமாறுகின்றார். ஆகவேதான் பௌத்த மகாசங்கத்தினருக்காவது அதனை புரியவைக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதியின் கவனம் திரும்பியிருக்கலாம்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை ஜனாதிபதியின் இந்த சமாளிப்புப் படலங்களை நன்றாக அறிந்திருக்கின்றது. ஆனால் ஒன்று தாம் போட்டியிடுகின்ற 36 தேர்தல் தொகுதியிலும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை விட தங்கள் உறுப்பினர்கள் வெற்றிபெற வேண்டும் என்பதிலேயே அவர்கள் குறியாக இருக்கின்றார்கள். எனவேதான் சமாதானப்பேச்சுவார்த்தை தொடர்பான ஜனாதிபதியின் மாறுபட்ட நிலைப்பாட்டை ஓர் குருட்டு நியாயமாக ஜே.வி.பி நோக்குகின்றது. புலிகளுடன் பேசக்கூடாது என்றால் பேசக்கூடாதுதான். அதன் பின்னர் சர்வதேச சமூகத்திற்கு ஒரு நிலைப்பாட்டையும் உள்ளூர் பிரமுகர்களுக்கும் மக்களுக்கும் மற்றுமொரு நிலைப்பாட்டையும் கூறி பொய்மைத்தனமான அரசியல் காய்நகர்த்தல்களில் ஈடுபடுவது தமது கொள்கைக்கு முரணானது என ஜே.வி.பி. கருதுகின்றது. சர்வதேச நாடுகளை திருப்திப்படுத்த வேண்டிய தேவையோ அல்லது அவர்களின் ஆலோசனைகளை உள்வாங்கவேண்டிய அவசியமோ இல்லையென்பது ஜே.வி.பியின் நிலைப்பாடு. நாடு எக்கேடு கெட்டாலும் தேசியப்பொருளாதாரம்-சோசலிச-சமத்துவம் என்ற வார்த்தை ஜாலங்களினால் மக்களை குறிப்பிட்ட காலத்திற்கு ஏமாற்றிவிடலாம் என ஜே.வி.பி. நம்புகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதியின் அரசியல் நடவடிக்கைகளுக்கும் முன்னேற்பாடுகளுக்கும் ஜே.வி.பி ஜனாதிபதிக்கு எவ்வளவு தூரம் ஒத்துழைப்பு வழங்கும் என்பதும் கேள்விக்குறிதான். சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான அநுரா பண்டாரநாயக்கா, மங்கள சமரவீர, நிமால் சிறிபாலடி சில்வா, சரத் அமுனுகம, ரத்தினசிறி விக்கிரமநாயக்கா போன்றோருக்கும் ஜே.வி.பியின் நிலைப்பாடு தெரிந்தும் தெரியாதவர்கள் போன்று அல்லது ஆட்சியமைத்து விட்டால் ஜே.வி.பியையும் வழமையான முதலாளித்துவ அரசியல் காய்நகர்த்தல்களுக்குள் உள்வாங்கிவிடலாம் என இவர்கள் கருதுகின்றார்கள் போலும். அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜே.வி.பியால் ஏற்படப்போகின்ற பாதகமான விளைவுகள் தெரிந்தும் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிக்காவின் சணம் வாதம் சணம் பித்தம் என்ற வேலைத்திட்டத்தை எதிர்க்க முடியாதவராக கைகட்டி நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. விரும்பியோ விரும்பாமலோ சுதந்திர கூட்டு முன்னணியோடு சேர்ந்து பிரசாரம் செய்யவேண்டிய நிலைக்கும் மகிந்த ராஜபக்ஷ ஆளாகியுள்ளார்.

அரசாங்கம் ஒன்றை அமைத்து அமைச்சுப்பொறுப்புக்களை ஏற்று முதலாளித்துவ அரசியல் போக்கிற்குள் நுழைவதற்கு ஜே.வி.பிக்கு விருப்பமில்லாமல் இல்லை. ஆனால் தற்போதைய நிலையில் அவ்வாறான ஆசாபாசங்களை அவர்களால் வெளிக்காட்ட முடியாத நிலையும் இருக்கின்றது. பொதுக்கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்திய ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தமது மாக்ஸிச கொள்கையில் இந்து மா சமுத்திரப்பிராந்திய சூழ்நிலை பொறுத்து மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என கூறியிருந்தார். ஆனாலும் ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் கருதுவதுபோன்று தமது தேவைக்கேற்ப ஜே.வி.பியை மாற்றிவிட முடியாது என்பதே உண்மையானது. தற்போதைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகளையும் அவர்களின் போராட்ட பலத்தையும் அவர்களுக்குள்ள சர்வதேச மதிப்பையும் ஆதரவையும் என்?ன விலை கொடுத்தாயினும் சீர்குலைத்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கைக்கும் ஆப்பு வைத்துவிட வேண்டும் என்பதற்காகவே இதுவரை காலமும் இந்தியாவை எதிர்த்து வந்த ஜே.வி.பி இந்திய நிலைப்பாட்டை தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. அவ்வப்போது ஆலோசனையும் பெற்றுவருகின்றது. அந்த அடிப்படையிலேதான் ஜனாதிபதியுடனான ஜே.வி.பியின் தற்போதைய உறவும். ஜே.வி.பியின் உண்மையான நிலைப்பாடு எது என்பதை சுதந்திர கூட்டணியின் அரசாங்கம் அமையுமானால் அறிந்து கொள்ளமுடியும். அதுவரையும் ஜனாதிபதியையும் ஏன் இந்தியாவையும் ஜே.வி.பி. மயக்கம் போட்டு வைத்திருக்கின்றது. ஆனால் ஒன்று இவற்றிற்கெல்லாம் உரிய பதில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்துதான் வரப்போகின்றது. தன்வினை தன்னைச்சுடும் ஒட்டப்பம் வீட்டைச்சுடும் என்ற பழமொழியை இந்தியா முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

– கொழும்பில் இருந்து
ஊரோடி

ஆனால் ஒன்று இவற்றிற்கெல்லாம் உரிய பதில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்துதான் வரப்போகின்றது. தன்வினை தன்னைச்சுடும் ஒட்டப்பம் வீட்டைச்சுடும் என்ற பழமொழியை இந்தியா முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

# தனித் தரப்பு, தனி அலகு முஸ்லிம்கள் கேட்பது ஏன்?

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

புதிய குடியரசு அரசியல் அமைப்பை வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பதை நிரூபிப்பதற்காக, அரசுக்குச் சவால் விடுத்து தமிழரசுத் தந்தை செல்வநாயகம் தமது காங்கேசன்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து மீண்டும் இடைத் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டி நிரூபித்தார்.


இதேசமயம் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி உத்தியோக வாய்ப்புக்களைப் பாதிக்கும்; தரப்படுத்தல் முறைக் கல்வி அமைச்சினால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. தரப்படுத்தல் முறையை எதிர்த்து வடக்கில் உயர் கல்வி மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாகவும், புதிய அரசியலமைப்புக்கு எதிராகவும் தமிழ் அரசுக்கட்சி தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தவர்களையும் அரசின் ஆணைப்படி காவல்துறையினர் கைது செய்து தடுத்துவைத்தனர். தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். அரசியலமைப்புக்கு எதிராகத் துண்டுப்பிரசுரம் விநியோகித் தமிழரசுக் கட்சியின் செயலாளர் அ.அமிர்தலிங்கம் மற்றும் மூன்று தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் (வி.என்.நவரத்தினம், க.துரைரத்தினம், பண்டிதர் கா.பொ.இரத்தினம்) தேசத்துரோகிகள் குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டனர். இவர்கள் ட்ரயர் அட்பார் விசேட நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் பிரதிவாதிகளிற்காக செல்வநாயம் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் ஆயர் ஆகினர். தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுவதும் தடுத்து வைப்பதும் தொடர்ந்தது. 1974ம் ஆண்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில், உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கை கிளை நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் அரசின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் சிறப்பாகக் கொண்டாடிக் காட்டியது. இதில் வெளிநாடுகள் பலவற்றிலிருந்தும் பிரதிநிதிகள் பலர் வந்து கலந்து கொண்டனர். மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியில் பொலிசார் புகுந்து குழப்பம் ஏற்படுத்தி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் ஒன்பது அப்பாவித்தமிழர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதனால் மேலும் பல இளைஞர்கள் ஆட்சியாளருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சிவகுமாரன் என்ற இளைஞன் முதல் தடவையாக ஆயுதம் ஏந்தினான். அவனே பொலிஸில் சிக்கி கொண்டதும் சையனைட் விழுங்கித் தற்கொலை செய்யவும் வழிகாட்டினான்.

தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும் தொடர்ந்தது. தமிழ் இளைஞர்கள் ஆட்சி பீடத்துக்கு எதிராகவும் ஆயுதம் படைகளுக்கு எதிராகவும் அணிதிரண்டனர். தமிழரசுக் கட்சியினர் அகிம்சை போராட்டத்தைத் தொடர்ந்த போதும் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டம் தான், தமிழர்கள் பாதுகாபாகவும் உரிமையுடனும் வாழ வழிவகுக்கும் என குரல் கொடுக்கத் தொடங்கினர்.

இக்காலகட்டத்தில் தமிழ் இளைஞர்களுக்காக முஸ்லிம் தலைவர்கள் குரல் கொடுக்க முன்வர வில்லை. இளைஞர்கள் கைது செய்யப்பட்ட காலங் களிலும் இனக்கலவரம் வெடித்துத் தமிழ் மக்கள் தாக்குதலுக்குள்ளான சமயங்களிலும், தாங்கள் தமிழ் பேசுபவர்களானாலும், முஸ்லிம்கள் என்று சொல்லி அவர்கள் தப்பிக்கொண்டனர். பல இடங்களில் தமிழர்களுக்கு முஸ்லிம் குடும்பங்கள் தஞ்சம் அழித்து காப்பாற்றி அகதி முகாம்களிற்கு அனுப்பி வைத்தனர். இப்படி சில சிங்களக் குடும்பங்களும் தமிழர்களுக்கு பாதுகாப்பளித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்த் துவேசம் நாடுமுழுவதும் பரப்பப்பட்ட சமயங்களில் “தமிழ் பேசும் முஸ்லிம்கள்” என்றே வேலைவாய்ப்புக்களும் முஸ்லிம்களிற்கு கிடைத்தன. உரிமைப் போராட்டம் நடத்தும் தமிழர்களுக்கு எதிரானவர்கள் என்பது கருதி அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

1977ம் ஆண்டில் காவல்துறையினரால் யாழ்ப்பாண த்தில் நடந்த ஒரு கல்லூரிக்களியாட்ட விழாவில் காவல் துறையினாரால் தொடங்கப்பட்ட இனமோதல் நாடுமுழுவதும் தமிழ் மக்களுக்கெதிரான இனக்கலவரமாகப்பரவியது. தமிழர்கள் உயிர் உடைமை இழந்து அகதிகளாகக் கப்பல்களில் தமது தாயகமான வடக்குக் கிழக்குக்குத் திரும்பினார். சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் புகத்தொடங்கினர். தமிழ் இளைஞர்கள் சிலர் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இந்தியா தஞ்சமளித்தது. இளைஞர்களின் விருப்பத்துக்கேற்ப அவர்களுக்கு ஆயுதமும் வழங்கி பயிற்சியும் அளித்தது.



*மறைந்த முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அமிர்தலிங்கம்*

இதற்கிடையில், சாத்வீகப் போராட்டங்கள் ஆட்சியிலிருந்த அரசுகளினால் ஆயுதப் படைகளினால் அடக்கி ஒடுக்கப்பட்டதன் விளைவாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதைத்தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்குவந்தனர். இதுவரை இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சி அமைப்பு கோரிவந்த தமிழரசுக் கட்சியும், சம உரிமை கோரிவந்த ஆகில இலங்கைத் தமிழரசுக்கட்சியும் மற்றும் தமிழர்களும் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகம் என்ற இடத்தில் கூடி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றை தமிழ் மக்களின் ஒரே அமைப்பாகத் தெரிவு செய்தனர். இது 1976ம் ஆண்டில் நடந்தது. இந்தக் கூட்டணியின் தலைவர்களாக எஸ்.ஜே.வி செல்வநாயகம் ஜீ ஜீ பொன்னம்பலம், எஸ்.தொண்டமான் ஆகியோர் பண்ணாகம் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கூட்டணியின் செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த மகாநட்டில் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு; அந்நியராட்சியினால் ஈழத்தமிழ் மக்கள் இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின் அடிப்படையில், இலங்கை நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாக செல்வநாயமும் மற்றும் தமிழர் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொண்டு வந்தனர். இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்திலும் இடம் பெற்றிருந்தது. தனிநபர் பிரேரணைக்கு வழமையாக நடைபெறுவது போன்று, இப்பிரேரணையும் விவாதத்துக்கு எடுக்கப்படாமல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதுடன்; “அதுவும்” காலாவதியானது. பின்னர் நடந்த 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி இழந்த தமிழரசை மீண்டும் அமைப்பதற்கான கோரிக்கையாக வைத்து தமிழர் தாயக மக்களின் ஆணையைப்பெற்றது.

> **இனக்கலவரம் வெடித்துத் தமிழ் மக்கள் தாக்குதலுக்குள்ளான சமயங்களிலும், தாங்கள் தமிழ் பேசுபவர்களானாலும், முஸ்லிம்கள் என்று சொல்லி அவர்கள் தப்பிக்கொண்டனர்**

இப்போது தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜே.ஆர் ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலில் தமது மக்களிடம் பெற்ற ஆணையின் படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்தும் புதிய அரசியலமைப்பை 1978ம் ஆண்டில் உருவாக்கி ஜனாதிபதியானார்.

1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலுடன் காவல்துறையினர் தொடங்கிய கலகம் நாடுமுழுவதும் தமிழருக்கெதிரான இனக்கலவரமாகப் பரவியது. இனக்கலகத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைமைகளையும் இதைத்தொடர்ந்து ஆயுதப்படைகளினால் கைது செய்யப்பட்டு சித்திரவதை அனுபவித்த தமிழ் இளைஞர்களின் பிரச்சனைகளைப் ஜற்றியுமே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஜனாதிபதியுடன் பேசிவந்தனர். ‘இழந்த தமிழரசை மீண்டும் அமைக்கும்’ நடவடிக்கைகளை கூட்டணித் தலைவர்கள் எடுக்கத்தவறியதால், தமிழ் இளைஞர்கள் கூட்டணித்தலைமைக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கினர்.

1977ம் ஆண்டு இனக்கலவரம்பற்றி பாரபட்சமற்ற விசாரணைக்குழு நியமிக்கப்பட் வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் சன்சோனிதலைமையில், தனிநபர் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு விசாரணை திசைமாறிச் சென்று நீடித்து முடிந்தது. இதன் அறிக்கை இன்னமும் வெளியிடப்படவேயில்லை! இதே சமயம் தமிழ் இளைஞர்கள் காரணமின்றி கைது செய்யப்பட்டுச் சித்திரவதை செய்வது தொடர்ந்ததைத் தொடர்ந்து, காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர்ந்தது.

1983ம் ஆண்டு யூலை மாதத்தில் ஒரு நாள் திருநெல்வேலியில் கண்ணிவெடியில் சிக்கிய இராணுவ வாகனத்தில் சென்ற பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதற்குப்பதிலடியாக வீடுகளில் இருந்த பல முதியோர் சிறியோர் என்ற பாகுபாடு இன்றி இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டதின் பதின்மூன்று இராணுவத்தினரின் சடலங்களும் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு கனத்தை பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த நல்லடக்கத்துடன் நாடுமுழுவதும் தமிழர்களுக்கு எதிராக இனக்கலகம் கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழர்கள் உயிர் உடமைகளை இழந்தனர். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாயினர். அயலில் உள்ள இந்தியாவில் தமிழ் நாட்டில் அகதிகளாகச் சென்று தஞ்சம் புகுந்தனர். சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்தனர். இதற்கிடையில் 1981ம் ஆண்டில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு செய்தார். இதன்படி வடக்கு கிழக்கில் மாவட்ட சபைகள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாவட்டசபை அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்ட சமயத்திலும் கூட மாவட்ட சபைகள் எந்த விதமான அதிகாரமும் இல்லாதவையாக இருந்த போதிலும் முஸ்லிகள் தமக்கும் அதில் உரிமை வேண்டுமென்றோ தனித்தரப்பாக இதற்கான பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டுமென்றோ கோரவில்லை.

1981ம் ஆண்டு மே மாத இறுதியில் யாழ் நாச்சிமார் கோயிலடியில் மாவட்டசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நடந்தது. இக்கூட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து பொலிசார் எடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவாக, ஆசியாவிலேயே மிகச் சிறந்த நூலகங்களுள் ஒன்றான யாழ் பொது நூலகம், தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இத்துடன் யாழ் எம்.பி. வெ.யோகேஸ்வரன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகைப் பணிமனை ஆகியவையும் தீயிட்டப்பட்டன..

*(காரணங்கள் இன்னும் வரும்)*


# உந்துருளி படையணி உதயம் தேசியத் தலைவர் பங்கேற்பு





தமிழீழ விடுதலைப் புலிகளால் விசேட மோட்டார் சைக்கிள் படையணி ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் மோட்டார் சைக்கிள் படையணியினர் விசேட பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (20.02.2004) வன்னியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் கலந்துகொண்டு விசேட படையணியினரின் மோட்டார் சைக்கிள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவருடன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், மோட்டார் சைக்கிள் படையணியின் தளபதி மணியரசன் மற்றும் புலிகளின் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், தமிழீழ காவல்துறையினர் கலந்துகொண்டிருந்தனர்.



## காட்சியும் பதிவும்







# ‘தமிழரின் திறமைகள் எல்லாத் துறைகளினூடாகவும் உலகில் பதியப்பட வேண்டும்’

## – தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா –

**தாயகத்தில் இடம்பெறும் தமிழீழ தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. பாப்பா ஈழமுரசுவிற்கு அளித்த நேர்காணல்.**

கொழும்பில் – அதிகார இழுபறிகளும், அதிரடி அரசியல் நடவடிக்கைகளும், தேர்தல் தொடர்பான குழப்பங்களும் தொடர்ந்தவண்ணமிருக்க, வன்னி தமிழீழ தேசிய விளையாட்டு விழாவையொட்டி களைகட்டியுள்ளது. மூன்றாவது தமிழீழ தேசிய விளையாட்டு விழா 23ம் திகதி ஆரம்பமாகிறது. கிளிநொச்சி பொது விளையாட்டரங்கு இதற்கான சிறப்பு ஏற்பாடுகளுடன் காணப்படுகிறது. இவ் விளையாட்டுப் பெருவிழா தொடர்பான `நேர்காண`லொன்றை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. பாப்பா ஈழமுரசுவிற்கு வழங்கினார். அவரது கருத்துக்கள் இங்கே தொகுத்துத்தரப்படுகின்றன.

**கேள்வி:–** *ஏற்கனவே கடந்த இரு வருடங்களும் தமிழீழ தேசிய விளையாட்டு விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வருடம் மூன்றாவது விளையாட்டு விழா நடைபெறுகின்றது. கடந்த இரு நிகழ்வுகள் குறித்தும் இவ்வாண்டு நடைபெறுகின்ற நிகழ்வு குறித்தும் தங்களது கருத்துக்களைக் கூறுங்கள்.*

**பதில்:–** எமது மண்ணில் கடந்த பல வருடங்களாக எமது இளைஞர்கள் எம்மீது திணிக்கப்பட்ட கடுமையான போருக்கு முகம் கொடுத்து வந்தார்கள். சிறீலங்காப்படையினர் எம்மீதான ஆக்கிரமிப்பொன்றை தீவிரப்படுத்தியிருந்த அக்காலகட்டத்தில் அவர்கள் எல்லைப்படையென்றும் துணைப்படையென்றும் போராட்டத்தில் தம்மை இணைத்து தமது வாழ்விற்காக எதிரியுடன் போராடினார்கள். இந்த நிலையில் 2001ம் ஆண்டு எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் எமது இளைஞர்களின் திறமைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சில செயற்திட்டங்களை வகுத்தோம். எமது தேசியத்தலைவரும் கூறுவார். எமது இளைஞர்கள் இப்போரினால் பாதிக்கப்பட்டும், மனவுளைச்சல்களோடும் வாழ்கின்றார்கள் இவர்களை ஆரோக்கியமான சமூகமாக மாற்றியமைக்க வேண்டும் என்று. விளையாட்டு இதற்கு முக்கியானதொரு பயிற்சியாகவும் செயற்பாடாகவும் உள்ளது. இதனடிப்படையில் நாம் எமது மண்ணில் விளையாட்டுத்துறைக்கான ஒரு நிர்வாக கட்டமைப்பை நிறுவினோம். பல வருடங்களாக எமது தாயகத்தில் எமது பல நிர்வாகக்கட்டமைப்புகள் இயங்கிவருவது யாவரும் அறிந்த விடயம். விளையாட்டுத்துறையும் ஒரு தேசத்திற்கு இன்றியமையாதவொன்றாகும். இதனடிப்படையில் நாம் விளையாட்டுத்துறைக்கானதொரு நிர்வாகப்பிரிவை ஆரம்பித்தோம்.



முதலில் எமது கன்னி முயற்சியாக விளையாட்டு விழாவொன்றை நடத்தினோம். 2002ம் ஆண்டு எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பிரதேசமட்டத்தில் இதனை ஏற்பாடுசெய்தோம். மன்னார் மாவட்டம் மட்டும் இதில் எமது கட்டுப்பாடற்ற பிரதேசமாக இருந்து வந்து கலந்து கொண்டது. இந்த விழா இளைஞர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியதை நாம் அவதானித்தோம். உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய நான்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்தியிருந்தோம். இப் போட்டிகள் மாவீரர்கள் நினைவாக நடாத்தப்பட்டன லெப். சங்கர் நினைவாக துடுப்பாட்டமும் மேஜர் அல்பேட் நினைவாக கரப்பந்தாட்டமும் மேஜர் சோதியா நினைவாக வலைப்பந்தாட்டமும் லெப். கேணல் விக்ரர் நினைவாக உதைப்பந்தாட்டமும் நாம் நடத்தியிருந்தோம். இது எமது ஒரு கன்னி முயற்சியாக இருந்தாலும் நாங்கள் கரப்பந்தாட்டத்தையும் வலைப்பந்தாட்டத்தையும் மின்னொளியில் நடாத்தியிருந்தோம். ஆர்வத்தோடு எமது மக்கள் அவற்றை பார்த்தனர். எல்லோருக்கும் பெரிய உற்சாகமாக இருந்தது. விளையாட்டுத்துறை மூலமாக சிறந்த விளையாட்டு வீரர்களாக எமது இளைஞர்களை வளர்த்தெடுக்க முடியும் என்கிற நம்பிக்கையும் எமக்கு அப்போது ஏற்பட்டது.


எமது இரண்டாவது விளையாட்டு விழா 2003ம் ஆண்டு சமாதானச் சூழ்நிலையில் நடந்தது. இதில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பங்கு கொண்டனர். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி



ஆகிய மாவட்டங்களிலிருந்து அவர்கள் வருகை தந்து கலந்துகொண்டனர். முஸ்லிம் சிங்கள இளைஞர்களும் திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்து கலந்து கொண்டனர்.

திறமையுள்ள வலைப்பந்தாட்ட அணியொன்றை இதன் மூலமாக நாம் தோற்றுவிக்க முடிந்தது. இவர்களுக்கு மூன்றுமாத காலம் பயிற்சியொன்றை அளித்து பிரித்தானியாவில் நடந்த தமிழர் விளையாட்டு விழாவில் பங்கு கொள்ள வைத்தோம். அங்கு இடம் பெற்ற பதினெட்டுப் போட்டிகளில் தொடர்ச்சியான வெற்றிகளை இந்த அணி பெற்றது. பிரித்தானிய அணிகளும் இதில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வெற்றியை எமது மண்ணிற்கு கிடைத்த ஒரு கௌரவமாகக் கருதுகின்றோம். இதனால் எமது தேசியத்தலைவர் அவர்கள் இவ்வலைப்பந்தாட்ட அணியை நேரில் சந்தித்து கௌரவித்தார்.

இதைத் தொடர்ந்து நாம் பல மாணவர்கள், இளைஞர்களுக்கு மாதாந்தம் சகல விளையாட்டுகளிலும் பல பயிற்சிகளை நடாத்திவருகின்றோம். எங்களது எட்டு மாவட்டங்கள் தோறும் விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக போராளிகள் இருக்கின்றனர். இவர்கள் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டு உத்தியோகத்தர்களினதும், அதிகாரிகளினதும் ஒத்துழைப்புகளைப்பெற்று எமது விளையாட்டுத்துறையை வளர்த்து வருகின்றனர். கடந்த காலங்களின் எமது விளையாட்டு வீரர்களுக்கு சில ஆர்வமின்மைகள் நிலவின அதாவது தங்கள் திறமைகளுக்கு சிறீலங்காவில் அல்லது சர்வதேசரீதியில் அங்கீகாரம் கிடைக்கப் போவதில்லை என்கிற ஒரு ஆதங்கம் இருந்தது ஆனால் இப்போது அவர்களுக்கு நம்பிக்கைப் பிறந்திருக்கிறது. எமது தாயக மண்ணில் சிறந்த பயிற்சிகளைப்பெற்று விளையாடுவதன் மூலமாக- சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளமுடியும் என்று இதனால் எமது எட்டுமாவட்டங்களிலும் விளையாட்டுத்துறையில் துரிதமானதொரு வளர்ச்சி ஏற்பட்டுவருவதை அவதானிக்க முடிகிறது.



**கேள்வி:–** *இம்முறை அதாவது 2004ம் ஆண்டிற்கான தமிழீழ தேசிய விளையாட்டு விழாவில் புதிய போட்டிகள் எவையும் அறிமுகப்படுத்தப்படுகின்றனவா? எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் எவையும் சேர்க்கப்பட்டுள்ளனவா?*

**பதில்:–** இம்முறை சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. உதைப்பந்தாட்டம், கடந்த தடவை `நொக் அவுட்` முறையில் இடம்பெற்றது. இம்முறை `லீக்` முறையில் கொண்டு வந்திருக்கிறோம். துடுப்பாட்டம் முன்பு மென்பந்தாக இருந்தது. இம்முறை அதனை கடின பந்தாக்கியிருக்கிறோம். எட்டு மாவட்டங்களிலிருந்து கடினப்பந்து அணிகள் பங்குபற்றுகின்றன. கரப்பந்தாட்டத்தில் பெண்களும் பங்கு கொள்கின்றனர். இதற்கும் எட்டு மாவட்டங்களிலிருந்து அணிகள் வருகின்றன. கிளித்தட்டுப் போட்டியை புதிதாக இம்முறை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இதிலும் ஆண்களும் பெண்களும் கலந்து கொள்கின்றனர். இன்னொரு எமது பாரம்பரிய விளையாட்டான கபடியும் அறிமுகமாகிறது. ஆக, ஆண்களுக்கும் பெண்களுக்குமாக ஒன்பது விளையாட்டுப் போட்டிகள் இம்முறை நடைபெறுகின்றன.

கபடி, கிளித்தட்டு என்பன எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் இவற்றினூடாக நாம் எமது தேகாரோக்கியத்தை வளர்த்துக் கொள்ளமுடியும். இதனூடாக சர்வதேச போட்டிகளில் பங்கு கொள்ள முடியாதெனினும், எமது பாரம்பரிய விளையாட்டுக்களை மறக்கக்கூடாது இவற்றை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நாம் இவ்விளையாட்டுக்களையும் அறிமுகப்படுத்துகின்றோம். எமக்கே உரித்தான இவ்விளையாட்டுக்களை நவீனப்படுத்துவதன் மூலம் வரும் காலத்தில் இவற்றை சர்வதேச ரீதியாகவும் கொண்டு செல்ல முடியும் என்கிற நம்பிக்கையும் எமக்கிருக்கின்றது.

இலங்கையின் அடையாளத்தை விளையாட்டுத்துறையில் சர்வதேசத்திற்கு முதலில் உணர்த்தியவர்கள் தமிழர்



கள் தாம். திரு எதிர்வீரசிங்கம், கராத்தே வீரர் பொனி றொபபேட்ஸ் ஆகியோரை இதில் குறிப்பிடலாம். ஆகவே ஈழத்தமிழர்களின் திறமைகள் விளையாட்டுத்துறையிலும் உச்சம் பெற்று வருகின்றது என்கிற செய்தி இன்று உலகிற்கு உணர்த்தப்பட்டு வருகின்றது. பழைய வரலாற்றை எடுத்த நோக்கினால் விளையாட்டுத்துறையில் இலங்கைக்கு பெருமை தேடித்தந்தவர்கள் தமிழர்களாக இருந்திருக்கின்றார்கள். இன்று அவர்கள் எல்லாவிதத்திலும் சிறீலங்காவில் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருந்து வருகின்றனர். இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்பதே தமிழீழ விளையாட்டுத்துறையின் நோக்கமாகவுள்ளது. சர்வதேச போட்டிகளில் ஈழத்தமிழன் வெற்றியீட்டுகின்ற வரலாற்றைப் படைக்க வேண்டும் என்கிற வேகத்துடனேயே எமது விளையாட்டுத்துறை தொடர்ந்து செயற்படும். அதே நேரம் எங்களது இளைஞர்கள் தவறான சீரழிவான பழக்கவழங்களில் ஈடுபடாமல் நாட்டின் நற்பிரசைகளாக உருவாவதற்கும் விளையாட்டுக்களே நல்ல பயிற்சியாக அமையும் என்பதும் எமது எதிர்பார்ப்பும், நம்பிக்கையுமாகும். எமது இளைஞர் சமுதாயம் ஆரோக்கியமானதாக அமைய வேண்டும் என்பது எமது தேசியத் தலைவர் அவர்களது அவாவாகவுள்ளது. நல்ல கல்விச் சமுதாயம் உருவாகவும் விளையாட்டு முக்கியம். நல்ல விளையாட்டு வீரன் நன்கு கற்பவனாகவும் நன்கு கற்பவன் நல்ல விளையாட்டு வீரனாக இருப்பதையும் நாம் அவதானிக்க முடிகிறது.

ஈழத்தமிழரின் திறமைகள் சகல வழிகளிலும் உலகில் பதியப்பட வேண்டும். விளையாட்டும் அவற்றில் ஒன்று என்ற அடிப்படையில் எமது தேசியத்தலைவர் அவர்களின் பணிப்பின் பேரில் நாம் தமிழீழ விளையாட்டுத்துறையை வளர்த்து வருகின்றோம்.

**சந்திப்பு – விவேக்**

# புத்திசிகாமணி பதில்கள்

*சிறை மீண்ட வை.கோவை தி.மு.கவின் பிரச்சாரப் பீரங்கி என கலைஞர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளாரே..?*

**கோகுலநாதன் – பாரிஸ்–பிரான்ஸ்.**

! தற்போதைய தேர்தல் வெற்றிக்கு கருணாநிதிக்கு வை.கோ தேவைப்படுகிறார். நாளை அவரின் தேவை முடிந்ததும் புலிகளின் பீரங்கி எனக்கூறி வை.கோவை தூக்கியெறியவும் கலைஞர் தயங்கமாட்டார்.

*சிறீலங்காவின் கடந்த சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது முன் எப்போதும் இல்லாதவாறு மிக நவீன ரக ஆயுத தளபாடங்கள் எல்லாம் அணிவகுப்பில் காட்டிக்கொண்டு செல்லப்பட்டதே. இது எதனை வெளிப்படுத்துகிறது?*

**த. புவீந்திரன் – பாரிஸ், பிரான்ஸ்.**

! சிறீலங்கா படைகளின் மிக உச்ச நவீன ஆயுதங்களின் தாக்குதல்களுக்கெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளும் மக்களும் ஏற்கனவே முகம் கொடுத்துவிட்டார்கள். ஆகவே புலிகளையோ மக்களையோ பயமுறுத்த அல்ல, சிங்கள மக்களுக்கு தமது வீரதீர சாகசங்களை வெளிப்படுத்தவும் மீண்டும் போரின் மீது அந்த மக்களுக்கு நம்பிக்கையையும் விருப்பையும் ஏற்படுத்தவே அந்த அதிநவீன ஆயுத அணிவகுப்புக் காட்சி.

*தமிழ் கட்சிகளின் ஒற்றுமையைக் குலைத்து தனித்துப் போட்டியிடும் துணிவை ஆனந்த சங்கரியாருக்கு கொடுத்தவர் யாரோ? புத்திசிகாமணியாரே?*

**சிவச்சந்திரன் – எவ்றி, பிரான்ஸ்.**

! சந்தேகமேயில்லை. அந்தத் துணிவை சங்கரியாருக்கு ஏற்படுத்தியவர்கள் எமது அயல்நாட்டவர்கள்தான்.

*சிகல உறுமய உருவாக்கியிருக்கும் ஜாதிக கெல உறுமய என்கின்ற புதிய கட்சியில் ஏராளமான பௌத்த பிக்குகள் போட்டியிட இருக்கின்ற நிலையில், தென்னிலங்கை தேர்தல் களத்தில் எத்தகைய தாக்கத்தை இது ஏற்படுத்தப் போகின்றது?*

**எட்வேட்லூயி – பந்தன், பிரான்ஸ்.**

! இனவாத கோசத்துடன் தேர்தல் களத்தில் இறங்கியிருக்கும் கட்சிகளின் வாக்குகள் சிதறுண்டுபோக வாய்ப்பிருக்கிறது. குறிப்பாக ஐக்கிய தேசிய முன்னணியைவிட சுதந்திரக்கட்சி -ஜே.வி.பி கூட்டணிக்கு பிக்குகளின் இனவாதக் கட்சியின் வரவு சிறிதளவேனும் பாதிப்பை ஏற்படுத்தும்.

*அண்மையில் வெளிவந்திருந்த கமல்ஹாசனின் விருமாண்டி படம் குறித்து பலரும் கருத்துத் தெரிவித்து விட்டார்கள். ஆனால் புத்திசிகாமணியார் எதுவும் கூறவில்லையே ஏன்?*

**க. சத்தியலிங்கம் – பாரிஸ், பிரான்ஸ்.**

! கமல்ஹாசன் நல்ல கலைஞன். அவரது நல்ல கலைப் படைப்பாகவே விருமாண்டி தோற்றம் பெற்றிருக்கிறது. இப்படம் பற்றி பல பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நற்சான்றிதழ் கொடுத்துவிட்டபின்னர் அதுபற்றி பெரிதாக சொல்வதற்கு என்னிடம் எதுவும் இல்லை. ஆனாலும் வன்முறைக்கு எதிராக கருத்துச் சொல்ல வந்த இப்படம் திரை முழுவதும் வன்முறையைப் படரவிட்டு பார்வையாளனையும் ஒரு வன்மனச் சூழலுக்குள் தள்ளிவிடுகிறது. அத்துடன் படத்தின் முடிவாக மரணதண்டனைக்கு எதிராக கருத்து வெளியிட வரும் கமல்ஹாசன் இறுதிக்கட்டக் காட்சிகளில் மாலன் போன்ற எழுத்தாளர்களையும் இணைத்துக்கொண்டு செயற்படுவதானது சில சந்தேகங்களையும் ஏற்படுத்துகிறது. ராஜிவ் கொலை வழக்கில் 22 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது, அந்த தூக்குக் கயிறு இழுபடும் சத்தத்தைக் கேட்க அவாக்கொள்வதாக எழுதியவர் தான் இந்த மாலன் என்பது குறிப்பிடத்தக்கது.

## நடைபெறப்போகும் சிறீலங்காவின் பொதுத்தேர்தலில் ஆட்சியை நிர்ணயிக்கக்கூடிய மூன்றாவது பெரிய சக்தியாக தமிழர் கூட்டமைப்பு வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறதா?

*`தென்றல்' படம் பார்த்தீர்களா?*

**சூ கணேஸ்வரன் – பாரிஸ், பிரான்ஸ்.**

! தங்கர் பட்சானின் இன்னொரு `அழகி'யல்.

*ஈ.பி.டி.பி. யின் நெப்போலியன் குழுவினர் தேர்தல் வேலைகளுக்காக நெடுந்தீவில் போய் இறங்கியுள்ளார்களாமே?*

**ச. சதீஸ்வரன் – சூரிச், சுவிஸ்.**

! கள்ள வாக்குப்பெட்டிகளை தயார் செய்ய வேண்டிய பணிகள் இருக்கிறதல்லவா. அதற்கு பொருத்தமானவர்களைத் தேர்வு செய்து முன்கூட்டியே அனுப்பி வைத்துள்ளார் டக்ளஸ் தேவானந்தா.

*நடைபெறப்போகும் சிறீலங்காவின் பொதுத்தேர்தலில் ஆட்சியை நிர்ணயிக்கக்கூடிய மூன்றாவது பெரிய சக்தியாக தமிழர் கூட்டமைப்பு வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறதா?*

**ச.தமிழழகன் – பாரிஸ், பிரான்ஸ்.**

! ஆட்சியை நிர்ணயிக்கின்ற சக்தியாக தமிழர் கூட்டமைப்பு வரப்போகிறது என்பதனால்தான் இந்தியாவும் ஏனைய தமிழ் இன விரோதச் சக்திகளும் தமிழர்களின் ஒற்றுமையை குலைத்து அவர்களிடையே பிரிவை ஏற்படுத்த கங்கணம் கட்டி நிற்கிறார்கள். வரப்போகின்ற பொதுத்தேர்தலில் மீண்டும் அறுதிப்பெரும்பான்மையற்ற ஒரு தொங்கு அரசாங்கமே ஆட்சியை அமைக்கப் போகின்றது என்பதே பெரும்பாலான அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

*தமிழ் அரசுக் கட்சியின் `வீடு' சின்னம் மீண்டும் தேர்தல் பவனிவரவிருப்பது குறித்து உங்கள் கருத்தென்ன?*

**த.சிவப்பிரகாசம் – பாரிஸ், பிரான்ஸ்.**

! தமிழர்களின் விடுதலைப்போராட்டம் முன்னோக்கிய பாய்ச்சலை நகர்த்திக்கொண்டிருக்கிறது. தமிழர்களின் கட்சி அரசியல் பின்னோக்கி, கற்காலத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் இது வெளிக்காட்டுகிறது.

*மீண்டும் தான் ஆட்சிக்கு வந்தால் அரசியல் அமை -ப்பை மாற்றியமைக்கப் போவதாகவும், குறிப்பாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிக்கப் போவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டுள்ளாரே?*

**ச. சூணாளன் – டொற்முன்ட், ஜேர்மனி.**

! எதிர்காலத்தில்தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்ற நிலையில் சர்வ வல்லமை பொருந்திய அதிகாரம் தன்னுடன் முற்றுப்பெறட்டும் என அவர் நினைக்கிறார். தன்னால் மற்றவர்கள் பட்ட பாட்டை மற்றொருவரால் தான் படக்கூடாது என சந்திரிகா நினைப்பதன் விளைவுதான் அவரது இந்த முடிவு.


"பொய்களையே ஆயுதமாகக்கொண்டு நடத்தப்படும் சிங்களத்தின் விசமத்தனமான கருத்துப்போரை முறியடிப்பதே இன்று நாம் எதிர்கொண்டு நிற்கும் முக்கிய சவாலாகும். எமது இயக்கத்தின் வெகுசன ஊடகங்களே இந்தப் பெரும்பணியைச் செய்யவேண்டும்" - ***தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்***

# தமிழ்த் தேசிய ஊடகங்களிற்கான வளர்ச்சி நிதி

## தேசிய ஊடகங்களுக்கு வலுச்சேர்க்க சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்புத்திட்டம் 2004

உலக விடுதலைப் போராட்டங்களின் முனைப்பான வளர்ச்சிப் போக்கில் தொடர்பூடகங்கள் பெரும் பங்காற்றி வருவது நாமறிந்ததே. இந்த வகையில் எமது தேசியத்தின் உண்மை நிலையை எமது மக்களின் உரிமைக் குமுறலை வெளிப்படுத்தவும், பேரினவாதம் எமது விடுதலைப் போராட்டத்தின் மீது அள்ளித் தெளித்துவரும் அவதூறுப் பரப்புகளை முறியடிக்கவும் ஊடகங்கள் அவசியமானவை.

சிறீலங்கா அதிகாரபீடத்தின் திட்டமிட்ட பரப்புரை நடவடிக்கைகளை உடனுக்குடன் ஆதாரங்களுடன் இனங்காட்டுகின்ற தேவை எமக்கு என்றும் உள்ளது. மாறிமாறி வரும் சிறீலங்கா அரசுகள் திட்டமிட்ட பொய்ப்பரப்புரைகளை மேற்கொள்வதற்கு எண்ணிறைந்த நிதியினை வாரியிறைத்து வருவது நீங்கள் அறிந்ததே. இவ்வாறு சிங்கள அரசுகள் மேற்கொள்ளும் பொய்பரப்புரையினை நம்பி மேற்குலகு கடந்த காலங்களில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பங்கம் விளைவிக்கும் சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அடக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டமாய் இடம்பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை, சிறீலங்கா அரசுகளின் கபட நரித்தனத்தை வெளிப்படுத்துவதற்கு எமது தேசிய ஊடகங்களினை வலுப்படுத்த வேண்டியது உலகெங்கிலும் பரந்து வாழுகின்ற தமிழ் மக்களின் கடமையாகும்.




தேசிய ஊடகங்களின் வளர்ச்சிக்காக சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தவுள்ளோம். இச் சீட்டிழுப்பை தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளான சனவரி பதினைந்தாம் நாள் தொடக்கம் மே முதலாம் நாள் வரைநடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எல்லா நாடுகளிலும் விசேடமாக நியமிக்கப்பட்ட தொண்டர்கள் ஊடாக இச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன. உங்கள் இல்லங்கள் தோறும் நாடி வருகின்ற தொண்டர்ரகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

### இந்நல்வாய்ப்பு சீட்டிழுப்பிற்கான பரிசுகள்:

**முதலாவது பரிசு:** 5 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா
*(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

**இரண்டாவது பரிசு:** 3 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா.
*(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

**மூன்றாவது பரிசு:** 2 நபர்களுக்கான 5 நாள் தமிழீழச் சுற்றுலா
*(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

தாயக மண்மீட்புப் போரில்
எம்மோடு தோளோடு தோள் நின்று
கைகொடுத்த தமிழ் உறவுகளே!
கருத்துப்போரிலும் வெற்றியை
எமதாக்க கைகொடுத்திடுவீர்!!!

இது தவிர கவர்ச்சிகரமானதும் பயன்நிறைந்ததுமான 20 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

**ஊடகங்களின் வளர்ச்சி தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்கும்**

## விளையாட்டு

### கிரிக்கெட்

## அவுஸ்திரேலியாவின் பிடிக்குள் சிறீலங்கா

உலகச் சம்பியன் அவுஸ்திரேலியா சிறீலங்காவை அவர்களது மண்ணிலேயே வெற்றிகொண்டுள்ளது. கடந்த 20.02.2004 அன்று சிறீலங்காவின் தம்புல்ல எனும் இடத்தில் நடைபெற்ற ஒருநாள் ஆட்டத்தில் 84 ஓட்டங்களால் சிறீலங்காவை தோற்கடித்துள்ளது. ஆட்டத்தை தொடங்கிய அவுஸ்திரேலியாவின் ஆரம்ப ஆட்டக்காரார்கள் அடம் ஜில்கிறிஸ்ற்-மத்தியூ கெய்டன் சோடி 104 ஓட்டங்களைப் பெற்றுத் தமது அணியினை ஸ்திர நிலைக்கு இட்டுச் சென்றனர். இச்சோடி இந்நிலையை எட்டுவதற்கு முன்னர் சமிந்தவாஸ் கட்சை தவறவிட்டதால் மத்தியூகெய்டன் 40 ரன்களை எட்டினால், இதனையடுத்து அவர் ரன் அவுட்டாக ஜில்கிறிஸ்ருடன் சோடி சேர்ந்து பொன்ரின் 58 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் குலசேராவின் பந்துவீச்சில் டிசானிடம் கட்ச் கொடுத்து அவுட்டானார். பொன்ரின் அரைச்சதம் பார்வையாளர்கட்கு மகிழ்ச்சியை ஊட்டும் வண்ணம் அமைந்திருந்தது. அதேபோல ஜில்கிரிஸ்ரின் 64 பந்துகளை எதிர்கொண்டு 66 ஓட்டங்களைப் பெற்றதும் மகிழ்ச்சியின் முக்கிய அங்கமாகும். முதல் மூன்று ஆட்டக்காரர்களும் 164 ஓட்டங்களைப் பெற்றுவிட பின்னால் வந்த வீரர்களும் தமது பங்கிற்கு 87 ஓட்டங்களைப் பெற்றனர். மேலதிக பதினொரு ஓட்டங்களுடன் 262 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையை அடைந்தனர். சிறீலங்கா அணியினரின் பந்து வீச்சு குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு பிரகாசிக்கவில்லை உலகில் மூன்றாவது பந்துவீச்சாளரான முரளிதரனின் பந்துகள் எந்த வித்தையினையும் காட்டவில்லை.

வாஸ், குலசேகரா, தர்மசேனா, டிசான் ஆகியோர் விக்கெற் எதனையும் வீழ்த்தவில்லை. வாஸ், குலசேகரா ஆகியோர் தலா 3 ஓவர்களும், தர்மசேனா 10 ஓவர்களும் டிசான் 5 ஓவர்களும் பந்துவீசியிருந்தனர். இந்நால்வரும் முறையே 19,18,49,28 ஓட்டங்களைக் கொடுத்திருந்தபோதும் மெய்டன் ஓவர் எதுவும் பெறவில்லை. முரளிதரன், சந்தானா ஆகியோர் தலா 10 ஓவர்கள் பந்துவீசி இரண்டு விக்கெற்றுக்கள் வீழ்த்தியிருந்தனர். ஜெயசூரிய தனது பங்கிற்கு 9 ஓவர்கள் பந்துவீசி ஒரு விக்கெற்றைப் பெற்றார்.

தமது ஆட்டத்தை மிகுந்த நம்பிக்கையுடன் ஆரம்பித்த சிறீலங்காவின் ஆட்டக்காரர்கள் ஓட்டங்களைக் குவிப்பதினையே நோக்கமாகக் கொண்டிருந்தனரே அன்றி தம்மை நிலைப்படுத்தி வெற்றி இலக்கை அடைய வேண்டும் என்பதனை மறந்துவிட்டதனையே காணக் கூடியதாக இருந்தது. ஆரம்ப ஆட்டக்காரர்களான ஜெயசூரியா, கலுவிதா ஆகியோர் முறையே 8,2 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ரன் அவுட்டாகினர். அதனை அடுத்து அணித்தலைவர் ஜில்ஸ்பையின் பந்துவீச்சில் ஒரு ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். இக்கட்டான நிலையில் இருந்த சிறீலங்கா அணி அடுத்துவந்த சங்ககம, ஜெயவர்த்தனா ஆகியோர் பெற்ற 58,61 ஓட்டங்களால் சற்று ஆறுதல் அடைந்தனர். அடுத்துவந்த ஆட்டக்காரர்களோ நம்பிக்கையற்ற ஆட்டத்தினை ஆட 178 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். இவர்களின் வாஸ், தர்மசேனா, முரளிதரன் ஆகியோர் ஓட்டம் எதுவும் பெறவில்லை. அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சும், தடுப்பு வியூகமும் சிறீலங்கா அணியை கட்டிப்போட்டுவிட்டதென்றே கூறலாம்.

ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட பந்துவீச்சாளர் விறெட் கொக் 9.3 ஓவர்களில் 41 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கற்றுக்களை வீழ்த்தியிருந்தார். இதுவே இவரது அதியுயர் பெறுபேறாகும். அவுஸ்திரேலியாவின் வருகைக்காக காத்திருந்த சிறீலங்கா அணிக்கு முதலடியே பெரும்பாடமாகும். இதனை மீட்டுப்பார்த்து அடுத்துவரும் ஆட்டங்களில் ஈடுபடுவார்களா?

– ஜே.ஜே

# தேர்தலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளுமாறு ஆனந்தசங்கரியிடம் கோரிக்கை !

## பொது மக்களின் எதிர்ப்பையும் மீறி போட்டியிட முடிவு

(23.02.04)

சிறீலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ள ஆனந்தசங்கரியை தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியிருக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதேவேளை கூட்டணிப் பணிமனையில் அவரைச் சந்தித்து உரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்தபோதிலும், ஆனந்தசங்கரி அதற்கு மறுத்துவிட்டதாக பொது அமைப்புக்கள் சில வெளியிட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் மூலம் தமிழ்மக்களின் ஐக்கியத்தை உலகிற்கு வெளிப்படுத்தவுள்ள இந்தவேளையில், தமிழ் மக்களின் ஐக்கியத்தினைச் சீர்குலைக்கும் வகையில் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட முயலும் ஆனந்தசங்கரியை சந்தித்து நிலைமைகளை எடுத்து விளக்கும் நோக்கில் அவரைச் சந்திப்பதற்காகச் சென்ற யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு அவர் மறுத்துவிட்டார். இவ்வாறு மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலும், அனைத்துத் தமிழ்மக்களும் ஒன்றுபட்டு ஒரே அமைப்பாகச் செயற்பட்டு நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டுமென்றும் அப்போதுதான் எமது உரிமைகளுக்காக ஒன்றுபட்டு ஒரே குரலில் ஒலிக்கவும், இயங்கவும் முடியும் என்ற நன் நோக்கத்தை தெரியப்படுத்தச் சென்றவேளை எம்மைச் சந்தித்துப் பேசுவதற்கு ஆனந்தசங்கரி மறுத்து விட்டார் என்று யாழ். மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகத்தின் அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வடபிராந்திய யாழ்.ஆங்கில மருந்து வணிகர் மன்றமும் அறிக்கையை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களின் இவ்வாறான எதிர்ப்புக்களையும் மீறி தேர்தலில் போட்டியிட ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக் குழுவினர் முடிவு செய்துள்ளதாகவும், நாளை செவ்வாய்க்கிழமை தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் ஆனந்தசங்கரி தலைமையிலான இந்த சுயேச்சைக் குழுவில் முன்னாள் யாழ். மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையா, முன்னாள் மாநகர சபை உறுப்பினர் எஸ்.அரவிந்தன், முன்னாள் இணுவில் கிராம சபைத் தலைவர் முத்துலிங்கம் ஆகியோரும் போட்டியிடவுள்ளனர்.

## வடக்கு - கிழக்கில் போட்டியிடும் தமிழ் கூட்டமைப்பின் வேட்பாளர்கள்

**யாழ்ப்பாணத்தில்**

மாவை சேனாதிராசா (மாவிட்டபுரம்), நடராஜா ரவிராஜ் (சாவகச்சேரி), சி.சிவமகாராசா (தெல்லிப்பழை), பொன்னம்பலம் கஜேந்திரகுமார் (யாழ்ப்பாணம்), சீ.வி.கே.சிவஞானம் (நல்லூர்), எம்.கே.சிவாஜிலிங்கம் (வல்வெட்டித்துறை), என்.சிறீகாந்தா (தீவகம்), சொலமன் சூ சிறில் (யாழ்ப்பாணம்), எஸ்.சிவனேசன் (கரவெட்டி), திருமதி பத்மினி சிதம்பரநாதன் (அராலி), செ.கஜேந்திரன் (கரவெட்டி), சுரேஸ் பிறேமச்சந்திரன் (கோப்பாய்) ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து ஒன்பது உறுப்பினர்களைத் தெரிவுசெய் வதற்கான இந்தத் தேர்தலில் கூட்ட மைப்பின் சார்பில் 12 பேர் போட்டி யிடுகின்றனர்.

**திருக்கோணமலையில்**

இரா. சம்பந்தன், கே.துரைரட்ணசிங்கம், சாவுல்கமீத், சதாசிவம் சண்முகநாதன், கே.ரகுநாதன், வி.விக்னேஸ்வரன், ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

**வன்னியில்**

செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிசோர், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஜோன்வெனட் கிறிஸ்தோபர், சாமியூ நூார்முகமட் சஜானி, எஸ்.கனகரட்ணம், அகஸ்ரீன் மரியநாயகம் சூசை, வினோ நோகராதலிங்கம், ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

**மட்டக்களப்பில்**

ஜோசப் பரராஜசிங்கம், ராஜன் சத்தியமூர்த்தி, ரி.கனகசபை, கிங்ஸ்லி இராசநாயகம், பி.அரியநேந்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

**அம்பாறையில்**

அரியநாயகம், சந்திரநேரு, கே.பத்மநாதன், எஸ்.சிறீஸ்கந்தராஜா, எஸ்.சுந்தரலிங்கம், எஸ்.தினகரன்பிள்ளை, தோமஸ் தங்கத்துரைவில்லியம், யோகாம்பிகை சபாபதி, வேலுப்பிள்ளை கலியாணசுந்தரம், ராசசேகரம் சிவகுமார் ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

## புலிகளின் இடைக்கால நிர்வாக சபையினை நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம் - விமல் வீரவன்ச

(23.02.04)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை ஒருபோதும் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என சிங்கள இனவாதக் கட்சியான ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியான தேடல் நிகழ்வில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வெளியிடும் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தமிழர்களுடைய தாயகப் பிரதேசம் வடக்கு - கிழக்கு என்பதை ஒரு போதும் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று அந்த நிகழ்ச்சியின் போது குறிப்பிட்ட அவர், இலங்கையின் பல பகுதிகளிலும், குறிப்பாக தென் பகுதியில் ஏராளமான தமிழ் மக்கள் வாழ்கின்ற நிலையில் வடக்கு, கிழக்கை அவர்களுடைய தாயகப் பிரதேசம் என்று எவ்வாறு குறிப்பிடமுடியும் என்றும் கேள்வி எழுப்பினார்.




விசேட விலைக் கழிவு

RHYTHM

Website rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road
Wembley
HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

(28ம் பக்கத் தொடர்ச்சி)

### தேர்தலினால் சமாதான....

தற்போதைய கேள்வி. நாம் மிகவும் உற்சாகமான உணர்வுடையவர்களாக இருப்போமேயானால், இலங்கையின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் சமாதானச் செயன்முறைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான பற்றுறுதியை வெளிக்காட்டுவர் என்ற எதிர்பார்ப்பையும் நம்பிக்கையும் கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னவர், சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமானால், விடுதலைப் புலிகள் வன்முறையைத் துறக்க வேண்டியிருக்கும். இலங்கையைக் கூறு போடக் கூடிய எந்தவொரு அரசியல் தீர்வு யோசனையையும் கைவிட வேண்டியிருக்கும். ஏனென்றால், அவை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையேயல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பரில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று முக்கிய அமைச்சுகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடம் இருந்து பறித்தெடுத்து அரசியல் நெருக்கடியை உருவாக்கிய பின்னர், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கிறிஸ் பற்றன், கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கத்தரிக்கோல் கழுத்தில் குத்தி சிறுமி சாவு

(23.02.04)

சிறிய கத்தரிக்கோல் ஒன்றை வைத்து விளையாடிக்கொண்டிருந்த சிறுமி ஒருத்தி அது திடீரென கழுத்தில் குத்தியதால் காயமடைந்து பின்னர் உயிரிழந்தார். இந்த பரிதாபச் சம்பவம் புளியங்கூடல் பகுதியில் நேற்று இடம்பெற்றது. கத்தரிக்கோலை கையில் வைத்துக்கொண்டு தனது சகோதரனுடன் விளையாடிக் கொண்டிருந்தவேளை எதிர்பாராத வகையில் சிறுமியின் கழுத்தில் கத்தரிக்கோல் ஆழமாகக் குத்திக் காயம் ஏற்படத்தியிருக்கிறது. அவசரமாக அந்தச் சிறுமி யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரழந்துள்ளார். புளியங்கூடலைச் சேர்ந்த குமார் றேகா (14) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

(28ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ்குடா மக்கள் விபரம்....

துள்ள மகஜரில் கோரியுள்ளது.

யாழ்மாவட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு மட்டும் வாரத்தில் ஆறு நாட்கள் அலுவலகத்தில் தங்கியிருக்க வேண்டுமென விதிக்கப்பட்ட நிபந்தனையை நீக்குவதாக 16.12.2003 அன்று காணப்பட்ட இணக்கம் இதுவரை பணிப்புரையாக விடுக்கப்படவில்லை.

(28ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகள் கண்காணிப்பு குழு...

களமுனைப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தரப்பில் வவுனியா பிரதிநிதி யார்லிமாட்டாவும், அவரது பிரதிநிதியொருவரும் கலந்து கொண்டனர். முன்னரங்க நிலைகளின் நிலவரங்கள் தொடர்பான விடயங்கள் இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்டன.

(28ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளின் கட்டுப்பாட்டு....

முடியும் என்றும் சிறீலங்கா தேர்தல் திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்திருப்பவர்கள் வாக்களிப்பதற்கான விசேட ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

### நாணய மாற்று 23.02.2004 அன்று

| | ஈரோ | டொலர் | பவுண்ஸ் | பிராங் |
|---|---|---|---|---|
| ஈரோ | | 1.25 | 0.68 | 1.58 |
| டொலர் | 0.80 | | 0.54 | 1.26 |
| பவுண்ஸ் | 1.48 | 1.86 | | 2.35 |
| பிராங் | 0.63 | 0.79 | 0.43 | |
| இலங்கை ரூபா | 123.95 | 99.08 | 184.20 | 78.50 |
| இந்திய ரூபா | 56.71 | 45.33 | 84.27 | 35.92 |


ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

RCS PARIS
B 452 164 817 (2004B03079)

Directeur de la publication:
A.F. Santiogu

Redacteur: K. Jeisanthar

Impression:
IMPRIMERIES IPS
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0170 2173152

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707,
3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368



குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.




தமிழீழ விடுதலைப் புலிகள் பிரான்ஸ் கிளை நடாத்தும்
மாவீரர் நாள் நினைவு பூப்பந்தாட்டப் போட்டி 2004
ஆண்/பெண் இரு பாலாருக்கும் போட்டிகள் நடாத்தப்படும்.
வயதெல்லை
13 வயதிற்கு உட்பட்டோர்
13 வயதிற்கு மேற்பட்டோர்

இடம்: Centre Louis Lumierre
30 Rue Louis Lumierre
75020 - Paris
M° porte de Montreuil ou porte de bagnolet
நேரம்: 10.00 மணி
காலம்: 29.02.04 ஞாயிறு
குறிப்பிட்ட போட்டியாளர்கள் ஒரு போட்டிக்கு சமூகமளிக்காவிடில் போட்டிகள் நடத்தப்படமாட்டாது.



பிரான்சில் வீடு விற்பனைக்கு
Studio meublé - refait à neuf
Résidence Plein ciel,
77350 -Le Mée sur deine
தொடர்புகளுக்கு - Tél: 06 63 49 21 82
01 64 13 41 94
விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம்



Restaurant Tharsana's
* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.
Restaurant Prassah
Gastronomiques Indiennes

தர்ஷனா & பிரஷா உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet,
75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc,
75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY



அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16



வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்

- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- S C I ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வேண்டி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வேண்டுதல்
- நிலம் வேண்டி புதிய வீடுகள் கட்டுதல்

முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்

தொடர்புகள்: 06 64 73 49 82


# தேர்தலினால் சமாதான முயற்சிகள் மேலும் ஓரங்கட்டப்படும்

## - கிறிஸ் பற்றன்



(22.02.04)

இலங்கையின் திடீர் பொதுத் தேர்தல் காரணமாக சமாதான முயற்சிகள் மேலும் ஓரங்கட்டப் படக்கூடிய அபாயம் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு விவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் வைத்து சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருக்கிறார். சமாதான முயற்சிகளில் இதுவரை காணப்பட்டுள்ள முன்னேற்றச் செயன்முறைகள் கைவிடப்படுவதாக நான் எதிர்பார்க்கவில்லை. அரசியல் சர்ச்சைகள் காரணமாக சிறப்பான வாழ்வுக்கான சாத்தியப்பாடுகள் இழக்கப்பட்டுவிடும் என்று நான் நம்பவில்லை என்று கிறிஸ் பற்றன் கூறியிருக்கிறார்.

சிறீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்தோம். சமாதானச் செயன்முறைகள் முன்னோக்கி நகர்த்தப்படும் என்றே நாமெல்லோரும் அக்கறையுடன் பார்த்துக் கொண்டிருந்தோம் என்று காபூலில் குறிப்பிட்ட கிறிஸ் பற்றன், தேர்தல் பிரசாரங்களின் விளைவாக தோன்றக் கூடியது என்னவாக இருக்கும் என்பதே

(தொடர்ச்சி 27 ம் பக்கம்)

# நாங்கள் அரசாங்கம் அமைத்தால் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு

– புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து வைபவத்தில் சந்திரிகா –

(23.02.04)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தால் முஸ்லிம் மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டு அவர்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப் படுமென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொண்ட முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேர் அக்கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்து கொண்டனர். ஜனாதிபதி மாளிகையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சந்திரிகா, பொ.ஐ.மு.வின் ஆட்சிக்காலத்தின் போதே கிழக்கில் பல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் கூறினார். அமைச்சர் அஷ்ரப்பின் தலைமையின் கீழ் முஸ்லிம் காங்கிரஸ் இருந்தபோது இப்போதுள்ள நிலைமை இருக்கவில்லையென சுட்டிக்காட்டிய சந்திரிகா, முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க அவர் கொண்ட இலட்சியத்தை புதிய அரசாங்கம் நிறைவேற்றுமென்றும் கூறியுள்ளார்.

# றொனி டி மெல் மீண்டும் கட்சி தாவினார்

(23.02.04)

சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த முன்னாள் நிதியமைச்சர் றொனி டிமெல்லும் - அவரது மனைவியான நாடாளுமன்ற உறுப்பினர் மல்லிகா டி மெல்லும் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர். நேற்று இவர்கள் இருவரும் தமது கட்சியில் இணைந்து கொண்டதாக ஐ.தே.க.வின் தலைமையகமான சிறிகோத்தா வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் 1977ம் ஆண்டு முதல் 1989ம் ஆண்டு வரை நீண்ட காலம் நிதி அமைச்சராக இருந்த றொனி டி மெல், கடந்த மூன்று தேர்தல்களிலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் அடிக்கடி மாறியுள்ளார். றொனி டி மெல் 2001ம் ஆண்டு தேர்தலில் போட்டியிடவில்லை. இவர் சிறீலங்கா சுதந்திரக்கட்சி தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். அதேவேளை, 2001ம் ஆண்டு தேர்தலில் மல்லிகா டிமெல் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் நுழைவாயிலில் வாக்களிப்பு நிலையங்கள் ?

(23.02.04)

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பிரதேசங்களில் படையினர் சீருடைகளுடன் கடமையில் ஈடுபடமுடியாது என்பதால், அந்தப் பிரதேசங்களின் நுழைவாயில் பகுதிகளில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் என்றும், பொது மக்கள் எந்தவித இடையூறுகளுமின்றி வாக்களிப்பில் கலந்து கொள்ள

(தொடர்ச்சி 27 ம் பக்கம்)

# யாழ்.குடா மக்கள் விபரம் படையினரால் திரட்டல் !

(23.02.04)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமைபுரியும் கிராம உத்தியோகத்தர்கள் அவரவர் பிரிவுகளில் வசித்து வருகின்ற பொது மக்கள் விபரங்களைத் தரவேண்டுமென்று சிறீலங்கா பொலிசாரும் இராணுவத்தினரும் பணிப்புரை விடுத்துள்ளனர் போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள நிலையில் இத்தகைய நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட வேண்டுமென வடக்கு கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் உள்நாட்டலுவலகங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைத்

(தொடர்ச்சி 27 ம் பக்கம்)

## புலிகள் - கண்காணிப்புக் குழு சந்திப்பு

(23.02.04)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது. நேற்று காலை 9.மணிக்கு இடம்பெற்ற நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் காவல்த்துறையின் சிறப்புப் படையணித்தளபதி லலித், விளக்குவைத்தகுளம் முன்னரங்க

(தொடர்ச்சி 27 ம் பக்கம்)


PHONE 2000




2, Rue Perdonnet, 75018 Paris.
☎: 01 40 05 03 43
Fax: 01 40 05 03 53
M°: La Chapelle

85, Rue des Pyrénées, 75020 Paris.
☎: 01 40 09 13 15
Fax: 01 40 09 01 31
M°: Maraîchers

19, Rue du Labat, 75018 Paris.
☎: 01 42 58 55 40
Fax: 01 42 58 55 46
M°: Marcadet Poissonniers

LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE

PHONE 2000
4, Rue de Cail, 75010 Paris.
☎: 01 40 05 93 28
Fax: 01 40 05 97 03
M°: La Chapelle *ou* Gare du Nord

PHONE 2000 Informatique
87, Rue des Pyrénées,
75020 Paris.
M°: Maraîchers
Tél: 06 20 21 11 11

SFR

PHONE 2000
5, Bld. davout,
75020 Paris.
☎: 01 43 71 40 30
Fax: 01 40 09 01 31
Mobile: 06 17 17 28 17
M°: Porte de Vincennes

Téléphone Direct சிவா ☎: 06 20 21 11 11